

# காதலில் இருந்து திருமணம் வரை

ஆண் – பெண் ஈர்ப்பு • நட்பு • உறவு

சோம. வள்ளியப்பன்

# திருமணம் கைடு

சோம. வள்ளியப்பன்

கிழக்கு பதிப்பகம்

திருமணம் கைடு

**சோம. வள்ளியப்பன்**

தமிழகத்தின் அனைத்து முன்னணி இதழ்களிலும் தொடர்கள், கட்டுரைகள் எழுதி வருபவர். மனித வளம், பொருளாதாரம், பணம் மற்றும் பங்குச் சந்தை பற்றி தொலைக்காட்சியில் தொடர்ந்து விவாதித்து வருபவர்.

உரைகள் நிகழ்த்துவதற்கும் பயிற்சி அளிப்பதற்கும் கல்லூரிகள், அமைப்புகள் மற்றும் நிறுவனங்களால் தொடர்ந்து அழைக்கப்படுபவர். நிர்வாகம், உறவுகள், சுயமுன்னேற்றம், பணம், பங்குச் சந்தை, ஆளுமைகள் என்று இதுவரை 40 புத்தகங்கள் எழுதியிருக்கிறார்.

BA பொருளாதாரம் MBA மற்றும் PGDPM படித்திருக்கிறார். பெல், பெப்ஸி, வர்ல்பூல், டாக்டர் ரெட்டீஸ் ஃபவுண்டேஷன், நவியா உள்ளிட்ட நிறுவனங்களில் 30 ஆண்டுகள் மனித வளத்துறையில் பணியாற்றியிருக்-கிறார். தற்போது சென்னையில் மேன்மை மேனேஜ்-மெண்ட் கன்சல்டன்சி சர்வீசஸ் என்ற ஆலோசனை மற்றும் பயிற்சியளிக்கும் நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார்.

# சமர்ப்பணம்

பிரிய மனைவி செல்வலட்சுமிக்கு

# முன்னுரை

பெசன்ட் நகரில் பிராக்டிஸ் செய்யும் மருத்துவர் அவர். பெயர் ராவ். M.D படித்தவர். உறவினர் ஒருவர் சொல்லியதன் பேரில் அவரைப் பார்க்கப் போயிருந்தேன். என் முறை வந்ததும், கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனேன். சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்கவராகத் தெரிந்தார். என் வலது கையில் பிரஷர் பார்க்கும் துணியைப் பொறுமையாகச் சுற்றினார். காதில் ஸ்டெத்தை வைத்துக்கொண்டு, ரப்பர் பந்தை அமுக்குவதும், மெதுவாக அதிலிருந்து காற்றை வெளியே விடுவதுமாக, என் ரத்தக் கொதிப்பை நிதானமாகச் சோதித்துக் கொண்டிருக்கையில்தான், அதைக் கவனித்தேன்.

அவருக்கு இடது பக்கம் இருந்த சுவரில் கண்ணாடி போடப்பட்டிருந்த ஒரு பெரிய போட்டோ மாட்டப்பட்டிருந்தது.

அந்தக்காலத்து கருப்பு வெள்ளைப் படம். புன்சிரிப்புடன், சற்றே பெரிய பொட்டு வைத்திருந்த ஒரு பெண்மணியின் புகைப்படம். படத்தின் கீழே, ‘நெஞ்சம் மறப்பதில்லை’ என்ற வாக்கியம். அதே படத்தின் இன்னொரு பிரதி, சிறிய அளவில், கண்ணாடி ப்ரேமுக்குள், அவரது மேசை மீது வைக்கப்பட்டிருந்தது.

பின்னணியில் நிச்சயம் ஒரு கதை இருக்கும் என்று நினைத்துக்கொண்டேன்.

அவரிடம் இரண்டு மூன்று முறை சென்ற பிறகு, பரிச்சயம் அதிகமானது. பிறகு, அவரிடம் அந்தப் புகைப்படத்துக்கான கதையைக் கேட்டேன். படத்திலிருப்பது அவருடைய மனைவிதான். பெயர் பிரேமா. அவரை விட ஏழு வயது சிறியவர். சொந்த அக்காள் மகள். ‘மாமா, மாமா’ என்று அவர் மீது கொள்ளைப் பிரியமாக இருந்தவர். அவர் இறந்து 5 வருடங்கள் ஆகின்றன. ஒரு மகன், ஒரு மகள் பிறந்து அவர்கள் வளர்ந்து விட்ட பிறகும், கணவனும் மனைவி இருவரும் மிகவும் அன்னியோன்னியமாக இருந்தவர்கள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை நேரம். மொசைக் தரையில் கால்களை நீட்டி அமர்ந்தபடி கையில் முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றைப் பிடித்துக்கொண்டு தலை சீவிக்கொண்டிருந்தார் பிரேமா. மிகவும் நிதானமாக, தலையை வாரிக் கொண்டிருந்த அவருக்கு என்ன தோன்றியதோ, சட்டென்று நிமிர்ந்து பார்த்தார். எதிரில் சற்றுத் தள்ளியிருந்த சோபாவில் அமர்ந்திருந்த கணவன் அவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது.

‘என்ன மாமா... என்ன புதுசா பாக்குற மாதிரி அப்படி பார்த்துக்கிட்டிருக்கீங்க!’

ஒன்றுமில்லை என்பதுபோல லேசாகத் தலையை மட்டும் அசைத்தார்

ராவ். அவர் பதில் சொல்லாததால், கைகளில் இருந்த கண்ணாடியையும் சீப்பையும் அப்படியே தரையில் வைத்து விட்டு, எழுந்து போய் அவர் பக்கத்தில் சோபாவில் அமர்ந்துகொண்டார் பிரேமா. பின்பு கிசுகிசுப்பான குரலில் கேட்டார்,

‘ஏன் அப்படிப் பார்த்தீங்க? சொல்லுங்க’

‘ஒண்ணுமில்லை, சும்மா உன்னைப் பார்த்துக்கிட்டே இருக்கணும் போல இருந்தது. அதான்.’

உட்கார்ந்திருந்த பிரேமா, அப்படியே அவர் மடியில் சடாரென்று சாய்ந்து படுத்துக்கொண்டார். அவர் கண்களை ஆழமாகப் பார்த்து, ‘எப்பவுமே இப்படி என்னைப் பார்த்துக்கிட்டே இருக்கணும்னு உங்களுக்குத் தோணுதா?

‘உம்...’

‘வாயைத் திறந்து சொல்லுங்க... இதேபோல என்னைப் பார்த்துக்கிட்டேயிருக்கணுமின்னு உங்களுக்கு எப்பவுமே தோணுமா?’

இன்னொரு ‘உம்’ சொல்ல எத்தனித்த டாக்டரால் அதைச் சொல்ல முடியவில்லை. காரணம் அப்படியே எழுந்து அவரை இறுகக் கட்டிக்கொண்டுவிட்டார் பிரேமா.

பிரேமாவுக்கு ரத்தக்கொதிப்பு இருந்தது. அதுவே அவரை பலியும் கொண்டது. முதுகலை மருத்துவம் படித்த டாக்டர் சொன்னார், ‘அவ என்னைவிட்டுப் போகவேயில்லை. வீட்டிலேயேதான் சுற்றிச் சுற்றி வருகிறாள். அவள் இருப்பதை சில சமயங்களில் என்னால் மிக நன்றாக உணர முடிகிறது. அவள் என்னைக் கவனித்துக் கொண்டேதான் இருக்கிறாள்.’

அதைச் சொன்னபோது அவர் கண்களிலும் தொனியிலும் ஒருவிதமான உறுதி தெரிந்தது.

அதன்பிறகு அவருடைய கிளினிக்குக்குப் போகும்போதெல்லாம் அவர்களுடைய அன்பான காதல் வாழ்க்கை பற்றியே நினைப்பேன். ‘நீ முந்திக்கொண்டு விட்டாய். எனக்கு இன்னும் நேரவில்லை. இங்கே ஒப்புக்கொண்ட வேலைகள் இருக்கின்றன. செய்கிறேன். முடித்துவிட்டு, நானும் வருகிறேன். வந்து உன்னை நேரில் சந்திக்கிறேன். அங்கே வந்து உன்னோடு மீண்டும் இணைகிற அந்த நாளுக்காகக் காத்திருக்கிறேன். உன் நினைப்பில் என் கடமைகளை, இங்கே உடலால் செய்து கொண்டிருக்கிறேன். என் மனம் முழுவதும் உன்னிடத்தில்தான். வந்து பார்க்கிறேன்’ என்று அவருடைய மனைவியிடம், அவர், தினம் தினம் மானசீகமாக (படத்தைப் பார்த்து) சொல்லுவது போலவே எனக்குப் பட்டது.

இப்படி நான் எனக்குத் தோன்றியதை அவரிடமும் சொன்னபோது, அவர் மறுக்கவேயில்லை.

சிலர் தேர்வு செய்கிறார்கள். பெரும்பாலும் ஆணுக்கோ பெண்ணுக்கோ அவர்களுக்கான துணையைப் பெற்றோர் தேர்வு செய்துவிடுகின்றனர். அது காதல் திருமணமோ, ஏற்பாடு செய்யப்பட்ட திருமணமோ... ஒரு புதிய நபருடன்தான் வாழ்க்கை தொடங்குகிறது.

எல்லா உணர்வுகளையும் தங்கு தடையின்றிக் காட்டக்கூடிய ஒரே

உறவாக கணவன் மனைவி உறவு இருக்கிறது. பெற்றவர்கள் காட்டுகிற அன்பையும் மரியாதையும், பிள்ளைகளிடம் காட்டுகிற பாசத்தையும், நண்பர்களிடம் காட்டுகிற நட்புணர்வினையும் தவிர, மற்ற எவரிடமும் காட்ட முடியாத காதலையும் இங்கேதான் காட்ட முடியும்.

‘யாதுமாகி நின்றாய் காளி’ என்பார்களே, அப்படி. எல்லாமாக இருக்கக் கூடிய ஒரே உறவு, கணவன் மனைவி உறவுதான்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக உலகெங்கும் மக்கள் திருமணம் செய்துகொண்டு மகிழ்வாக வாழ்கிறார்கள். உணர்கிறார்கள். என் பெற்றோர் அப்படி வாழ்ந்ததை நான் உடனிருந்து பார்த்திருக்கிறேன். நானும் அப்படியே வாழ்ந்து வருகிறேன்.

அதே சமயம், சிலருடைய திருமண வாழ்க்கை முற்றிலும் மாறாக அமைந்து விடுவதையும் பார்க்கிறேன். தொடக்கமே பிரச்னையாக இருக்கிற தம்பதியர்களும் இதில் சேர்த்தி. எக்காலத்திலும் எல்லாவற்றிலும் சொல்வது போல, ‘இப்போது அவை அதிகமாகி விட்டன’ என்று திருமண முறிவுகளைப் பற்றிச் சொல்லக் கேள்விப்படுகிறோம். அப்படி பாதிக்கப்பட்டவர்களை இப்போதெல்லாம் அதிகம் சந்திக்கவும் முடிகிறது.

திருமணம் என்பது எவ்வளவு காலத்திற்கு முன்பிருந்து இருக்கிறது? அது தேவைதானா? எதற்காக? அது இல்லாமல் முடியாதா? தேவைதான் என்றால் அதை எப்படிச் சரியாகச் செய்யலாம்? திருமணம் ஆனபின், தம்பதியரிடையே பிரச்னைகள் உருவாகக் காரணமாக இருப்பவை எவை? இவை அனைத்தையும் பற்றி நம் இளைய தலைமுறையினருக்கு தெரிவிப்பதே இந்தப் புத்தகத்தின் நோக்கம்.

வாழ்த்துகள்!

சோம. வள்ளியப்பன்

# அட்சதை


1. இரு கோடுகள்
2. என்ன காரணம்?
3. இன்றைய நிலைமை
4. திருமணம் அவசியம்தானா?
5. தேர்வு
6. திருமணம் குறித்த பயங்கள்
7. திருமணம் ஆன உடன்...
8. இல்லற வாழ்க்கை வெற்றி பெற...
9. முடிவாக...

# 1. இரு கோடுகள்

பெங்களூரில் வேலை பார்க்கும் சா·ப்ட்வேர் எஞ்சினியர் அவர். பெயர் ராஜ்குமார். அவருக்கு

புவனா என்ற பெண்ணோடு நிச்சயமாகியிருந்தது. இன்னும் இரண்டு மாதத்தில் திருமணம். மெத்தப் படித்த இருவரும் கைபேசி, இணையம் வழி அரட்டை மற்றும் மின்னஞ்சல் வழியே தொடர்ந்து பேசிக்கொண்டார்கள்.

ஒருநாள் ராஜ்குமாருக்கு புவனாவிடமிருந்து மின்னஞ்சல் வந்தது. ஆசைஆசையாக அதைத் திறந்தார் ராஜ்குமார்.

‘ஹாய் ராஜ்குமார்’

அதிக நேரம் யோசித்த பின்தான் இதனை எழுதுகிறேன். இந்தக் கடிதம் உங்கள் மனதைப் புண்படுத்தலாம். முன்கூட்டியே மன்னிப்புக் கோருகிறேன். இதைப் படித்துவிட்டுக் கோபம் வரலாம். ஆனாலும், இருவரின் எதிர்கால வாழ்வு கருதி இதை நான் வெளிப்படையாக எழுத முடிவு செய்தேன்.

உங்களைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் என்னால் உங்களைத் திருமணம் செய்து கொள்ள முடியாது. அதற்கு உங்களுடன் அதிக நேரம், அதிக நாள்கள் பேசிப் பழக வேண்டும். குறைந்தபட்சம் 2 ஆண்டுகள்.

நான் இருப்பது அமெரிக்காவில். ‘சரியாகப் புரிந்து கொள்வதற்காக’ இருவரும் நேரில் சந்திக்கமுடியுமா என்று தெரியவில்லை.

இது சரிவராது.

இப்படியெல்லாம் இப்போது யோசிக்கும் நான், ஏன் முன்கூட்டியே இப்படி யோசிக்கவில்லை என்று கேட்கலாம். நியாயமான கேள்வி. மன்னித்துக் கொள்ளுங்கள். என் அறியாமைதான் காரணம். ஜாதகம் பொருந்துகிறது. சகுனம் எல்லாம் சரியாக இருக்கிறது என்று பெற்றோர் சொல்லி விட்டதால், சம்மதித்து விட்டேன். ஆனால் இப்போதுதான் புரிகிறது, இது இப்படிச் செய்ய வேண்டியதில்லை என்று.

திருமணம் முடிந்த பிறகு, எதுவும் சரியில்லை என்று தோன்றினால், ‘போதும் திருமணத்தை முறித்துக் கொண்டு விடலாம்’ என்கிற முடிவைத் தெளிவாக எடுக்கும் குணமுடையவள் நான். அது இருவருக்குமே அவ்வளவு நன்றாக இருக்காது.

நாம் பேசத் தொடங்கி 2 மாதங்கள்தான் ஆகின்றன. இப்போது பிரிவது அவ்வளவு சிரமம் தராது. நான் ஏன் இப்படிப்பட்ட முடிவெடுத்தேன் என்று உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது என் கடமை.

1. இது நாள் வரை நீங்கள் எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள்? உங்கள் பதவியின் பெயர் (டெசிக்னேஷன்) என்ன என்று எனக்குத் தெளிவாகச் சொல்லவேயில்லை. எப்போது கேட்டாலும் மழுப்புகிறீர்கள். இதையே சரியாகச் சொல்லாத உங்களை எப்படி மற்ற விஷயங்களில் முழுமையாக நம்புவது என்று எனக்குப் புரியவில்லை.

2. தொடக்கத்தில் சொல்ல ஆரம்பித்த சிலவற்றைப் பற்றி, பின்னால் மறைக்கத் தொடங்கியிருக்கிறீர்கள். அவற்றைப் பற்றிப் பேசினாலே, பேச்சை திசை திருப்புகிறீர்கள். உதாரணம்: மாலா. யார் இந்த மாலா? உங்களுக்கும் அவளுக்கும் இடையே என்ன மாதிரியான உறவு? தற்சமயம் அதன் நிலவரம் என்ன?

அவள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதைப் பற்றி எல்லாம் சொல்வதாகச் சொன்ன நீங்கள், பின்பு அதைக் கேட்டால்கூடச் சொல்லுவதில்லை.

3. நமது திருமணம் எப்படி நடக்க வேண்டும். அதில் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பது போன்றவற்றை நான் பேச ஆரம்பித்தாலே, ‘அதை விடு. அதையெல்லாம் பெற்றவர்கள் பெரியவர்கள் பார்த்துக் கொள்வார்கள்’ என்று ஒதுக்கி விடுகிறீர்கள். எனது ஆசைகளை, விருப்பங்களை இதில்கூட கேட்டுக் கொள்ளாத நீங்கள், ‘திருமணம் ஆனபின், எனது மற்ற விருப்பங்களுக்கும் இதே அளவு முக்கியத்துவம்தானே கொடுப்பீர்கள்! எல்லாவற்றையும் அனுசரித்துப் போ என்று என்னைக் கட்டாயப்படுத்துவீர்களோ என்றும் தோன்றுகிறது.

4. மற்றவர்கள் முன்னிலையில், நான் உங்களைப் பெயர் சொல்லி அழைக்கக் கூடாது. ‘வாங்க போங்க’ என்றுதான் சொல்ல வேண்டும் என்கிறீர்கள். இது நாடகம். இது எனக்குப் பிடிக்கவில்லை. என்னை, நான் இருக்கும்விதமாகவே மற்றவர்களிடம் காண்பிக்க ஏன் உங்களுக்குத் தைரியம் இல்லை.

5. நான் எவ்வளவு கேட்டுக்கொண்டும், ஹைதராபாத்தில் வசிக்கும் என் உறவினர்கள் சிலரை நீங்கள் அங்கு அலுவலக வேலையாகப் போனபோதுகூட போய்ப் பார்க்கவில்லை. அதை ஒரு பொருட்டாகவே நீங்கள் எண்ணாதது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. நான் அவ்வளவு விரும்பியும், இந்தச் சின்னக் காரியத்தைக் கூடச் செய்யாத நீங்கள், எனக்காக வேறு எதைச் செய்வீர்கள்?

6. என் உடல்நலத்தில் அக்கறை உள்ளது போலப் பேசும் நீங்கள் எப்போதெல்லாம் போன் செய்கிறீர்கள் என்று யோசித்துப் பாருங்கள். எனக்கு இங்கு (யு.எஸ்.சில்) இரவு நேரமாக இருக்கும் நேரம், நான் தூங்கும் நேரம்தான் தொடர்பு கொள்கிறீர்கள். காரணம் அதுதான் உங்களுக்கு சௌகரியமான பகல் நேரம்.

அடுத்தவரையும் மதிப்பது, அவர்களுடைய சௌகரியத்துக்கும் முக்கியத்துவம் கொடுப்பது. இவைதான் காதல். இதுதான் அன்பு காட்டுவது.

மேலே சொன்னவற்றின் காரணமாக, நான் நமக்குள் திருமணம் வேண்டாம் என்கிற முடிவுக்கு வந்துள்ளேன். நாமிருவரும் தொடர்ந்து

பேசினால், நேருக்கு நேர் சந்தித்துப் பேசினால், மேலே சொன்னவற்றைச் சரிசெய்ய முடியலாம். ஆனால் நாமிருக்கும் நிலைகளில் (யு.எஸ். மற்றும் இந்தியா) அது சாத்தியமில்லை.

நான் ஏன் இவ்வளவு விபரமாக உங்களுக்கு இதைப் பற்றி எழுதுகிறேன் என்றால், இதற்குப் பிறகு நீங்கள் பழகும் பெண்ணிடம் நான் சொன்ன குறைகளைத் தவிர்க்கலாம் என்கிற எண்ணத்தில்தான். நான் உங்களை வெறுக்கவில்லை. நீங்கள் நன்றாக வாழ வாழ்த்துகிறேன். உங்களுடைய நலம் விரும்பியாகவே, நண்பராகவே என்னை இப்போதும் கருதுகிறேன்.

இப்படிக்கு

**புவனா.**

பாண்டிச்சேரியில் மதன் என்று ஒரு எஞ்சினியருக்குத் திருமணம் நிச்சயமானது. அவர் எப்போதும் நண்பர்களுடன் ‘குடி’யும் குடித்தனமுமாக இருப்பவர். அது ஒரு புத்தாண்டு தினம். கொண்டாட்டத்துக்குக் கேட்கவா வேண்டும்? நண்பர்களும் சேர்ந்து ஒரு பார்ட்டி. பாண்டிச்சேரியில். மகிழ்ச்சியில் மிதக்க வேண்டும் என்பது அவர்களின் தீர்மானம்.

டிசம்பர் 31. இரவு மணி பத்துக்கு பார்ட்டி தொடங்கியது. கண்ணாடி புட்டிகளால் மேசை நிறைந்தது. மணி 11. பார்ட்டி தொடர்ந்தது. சரியாக 12 மணிக்கு முன்பு எல்லா விளக்குகளையும் அணைத்து விட்டனர்.

மணி 12.

எல்லா விளக்குகளுக்கும் உயிர் வந்தன. பலூன்கள் வெடிக்கப்பட, அந்த அறை முழுக்க ஜிகினாக் காகிதங்கள். ‘ஹா...ப்...பி... நியூ இயர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்’ என்று அனைவரும் காட்டுக்கத்தல் கத்தினார்கள்.

அப்போதுதான் ஒருவர் கவனித்தார். ‘எங்கடா மதன்?’ என்றார். மதனைக் காணோம். தேடினால், மதன் ஒரு மூலையில் தனியாக தலையைக் கவிழ்த்து உட்கார்ந்திருந்தார்.

அனைவரும் மதன் அருகே சென்றார்கள். மதன் கையில் ஒரு புகைப்படம் இருந்தது. மதன் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருந்தார். அந்தப் போட்டோவில் மதனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் அழகாகச் சிரித்துக்கொண்டிருந்தார். புத்தாண்டு பிறந்ததும் தன் வருங்கால மனைவியின் முகத்தைத்தான் முதலில் பார்க்க வேண்டும் என்று தனியாக ஒதுங்கிவிட்டார் மதன்.

‘நான் இப்படிக் குடித்துவிட்டுப் புத்தாண்டு கொண்டாடுவது இதுவே கடைசி. ஸாரிப்பா, இனிமே நீ சம்மதம் தந்தாதான் நான் குடிப்பேன்’ என்று அந்தப் புகைப்படத்துக்கு முத்தம் வைத்தார் மதன்.

பங்கு சந்தை பற்றிப் பேசுவதற்காக என்னை அழைத்திருந்தார்கள். ரயில் ஏறி திருச்சி போனேன். கூட்டம் நடக்கும் இடத்துக்குப் போனதும், ஏற்பாடு செய்திருந்தவர்களில் ஒரு சிலர் வருகிறவர்களை வரவேற்பதற்காக வாசலில் நின்றிருந்தனர். அவர்களில் JCI (ஜூனியர் சேம்பர் ஆப் காமர்ஸ்) அமைப்பில் இருக்கும் ராஜா என்பவரும் ஒருவர். வணக்கம் சொல்லி,

அவருடைய விசிட்டிங் கார்டை கொடுத்தார். சரியாக அதைப் பார்ப்பதற்குள், அடுத்தடுத்தவர்கள் அறிமுகப்படுத்தப்பட, ராஜாவுடைய விசிட்டிங் கார்டினை சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு நகர்ந்தேன்.

கூட்டம் முடிந்தது. ராஜாவும் அருகில் வந்தார். ‘முடிந்தால் என் இல்லத்திற்கு வந்து போங்கள்’ என்றார். அவர் சொல்லிய விதம் தட்ட முடியாதவாறு இருந்தது. கூட்டத்துக்கு ஏற்பாடு செய்பவர்களில் சிலர் இப்படி அன்பு மிகுதியில் அழைப்பது உண்டு.

‘எவ்வளவு நேரம் ஆகும்?’ என்றேன். கடிகாரத்தைப் பார்த்தபடி. அரைமணி நேரம் போதும் என்றார். கிளம்பினோம். உடன் வந்த மற்றொரு நண்பர் தொடர்ந்து பேசியபடி வந்ததால் வழியில் ராஜாவுடன் பேசமுடியவில்லை. ஒரு வீட்டின் முன் காரை நிறுத்தினார். பொன்னகரில் நல்ல பெரிய வீடு. வாசலில், கங்காரு காப்பகம் என்று எழுதியிருந்தது. அவர் இல்லம் என்று சொன்னது, அவர் நடத்தும் மாற்றுத் திறன் படைத்தோர் இல்லத்தைத்தான் என்று அப்போதுதான் புரிந்தது. சட்டைப்பையில் இருந்து அவர் காலையில் கொடுத்திருந்த விசிட்டிங் கார்டை அப்போதுதான் முழுமையாகப் பார்த்தேன்.

எங்கள் வருகையை எதிர்பார்த்து சுமார் 60 நபர்கள் தரையில் சம்மணமிட்டு அமர்ந்திருந்தார்கள். அவர்களில் பலருக்குப் பார்வை கிடையாது. முன்வரிசையில் அமர்ந்திருந்தவர்களில் எட்டு பத்து பேர் சிறுவர்கள். அவர்களில் சிலரைப் பற்றிய விபரங்களை ராஜா சொன்னார். ஒரு மூதாட்டி அந்த இல்லத்துக்கு அழைத்து வரப்பட்டதில் இருந்து இன்னும் எவருடனும் பேசவே இல்லையாம். தனக்குத்தானே பேசிக் கொண்டிருப்பாராம். இரவு அவருக்குப் பக்கத்தில் படுத்திருப்பவர் காதில் விழுந்ததில் இருந்து, அந்தப் பெண்மணி அவரது மருமகளைத் திட்டிக் கொண்டிருக்கிறார் என்பது தெரிய வந்திருக்கிறது.

இருந்தவர்களிலேயே வயது குறைவானவர். இரண்டரை வயது சூர்யாதான். அவனை மடியில் கிடத்தியிருந்த பெண்ணின் பெயர் மேரி. இரண்டு நிமிடத்திற்கு ஒருமுறை சூர்யாவுக்கு முத்தம் கொடுத்தபடியே இருந்தார் மேரி.

சூர்யாவின் பெற்றோர் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள். எதிர்ப்பை மீறி திருமணம் செய்தவர்கள். பிறகு சூர்யா பிறந்தான். என்ன காரணத்தாலோ ஆறு மாதங்களுக்கு முன் சூர்யாவின் தாய் வேறு ஒருவருடன் ஓடிப்போனாள். சூர்யாவின் அப்பா அவளைத் தேடித் தேடி ஊர் ஊராகப் போய் இறுதியில் மனநலம் பாதிக்கப்பட்டார். அவர்கள் இருவருடைய பெற்றோர்களும் திருமணத்தை மட்டுமல்ல சூர்யாவையும் ஏற்க மறுத்தார்கள். 3 மாதக் குழந்தையாக குளக்கரையில் கிடந்த சூர்யாவை அவனுடைய அப்பாவின் நண்பர்தான் கங்காரு இல்லத்துக்குக் கூட்டி வந்தார்.

அங்கிருப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் இதே போல ஒரு வரலாறு உண்டு. எல்லாம் சோகக் கதைகள்.

ஆண்கள் பெண்களுக்கு தனித்தனி மாடிகளில் படுக்க இடங்கள். சமைத்துப் போட, துவைக்க, வேலைக்கு அமர்த்தப்பட்ட இருவேறு தனி ஆள்கள். அங்கிருந்த பிள்ளைகள் பள்ளிகளுக்குப் போகிறார்கள். ஆண்களும்

பெண்களும் ஊதுபத்தி, மெழுகுவர்த்தி, பேப்பர் கவர்கள் தயாரிக்கிறார்கள். இல்லத்தில் இருக்கும் பார்வையற்றவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு இசைக்குழு நடத்துகிறார்கள்.

ஓடியாடி அவர்களிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்த பெண்மணியை ராஜன் எனக்கு அறிமுகப்படுத்தினார். ‘இவர் என் மனைவி பர்வீன்.’

கைகூப்பி வணக்கம் சொன்னார் பர்வீன். கூட்டம் தொடங்கியது. என்னுடன் வந்திருந்த நண்பரை முதலில் பேசச் சொன்னேன். அவர், காப்பகத்தில் உள்ளவர்களின் நிலைக்காக வருந்துவதாகச் சொன்னார். அவர் பங்குக்கு அவரும் அவரால் இயன்ற உதவிகளைச் செய்வேன் என்றார்.

அடுத்து என் முறை. ராஜாதான் அறிமுகம் செய்தார். ‘சார் எங்கெங்கோ பேசுவார்...’ என்று ஆரம்பித்தார். போதும் என்றேன். மனம் முழுக்கப் பல்வேறு உணர்வுகள். 10 நிமிடம் பேசினேன். சாரம் இதுதான்.

‘சில ஆண்டுகளுக்கு முன்னால், ராபர்ட் என்று ஒரு இளைஞர் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். தினமணியில் உங்கள் கட்டுரைகள் படித்திருக்கிறேன். நான் ஏற்பாடு செய்யும் ஒரு மாதாந்திரக் கூட்டத்தில் நீங்கள் பேசவேண்டும்’ என்று கேட்டுக் கொண்டார். ஒப்புக்கொண்டேன். தேதியும் நேரமும் சொன்னார். ஒப்புக்கொண்டேன்.

பேசியிருந்தபடி சென்னை கோயம்பேடு சந்தை அருகில் உள் ஒரு பழைய கட்டடத்துக்கு அழைத்துப் போனார். கட்டடத்தில் கதவு கிடையாது. சிதிலமடைந்து இருந்தது. ஆள்கள் எவருமில்லாத காலி கட்டடம். மாடி ஏறிப் போனால் பெரிய ஹால். முழுவதும் காலியாக இருந்தது. ஜன்னல்களில் கம்பிகளோ, கதவுகளோ இல்லை. நாற்காலிகளோ மேஜையோ எதையும் காணோம். ஒரு மூலையில் பத்துப் பன்னிரண்டு சிறுவர்கள் அமர்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அருகில்கூட போக முடியவில்லை. அவ்வளவு துர்நாற்றம். மிகவும் அழுக்கான, கிழிந்திருந்த உடைகள் அணிந்திருந்தார்கள். குளித்துப் பல நாட்கள் ஆகியிருக்கலாம். பரட்டைத் தலை.

ராபர்ட்டிடம் கேட்டேன். ‘சரி மீட்டிங் எங்கே? யாருக்கு? அவர்கள் எல்லாம் எப்போது வருவார்கள்?’

இவர்களுக்குத்தான் பேசவேண்டும் என்றார். எல்லோரும் சென்னை தெருக்களில் குப்பைகளில் கிடக்கும் பேப்பர் சேகரிக்கும் பையன்கள். ஒரு மணிநேரம் பேசினேன். பொறுமையாகக் கேட்டார்கள். வாழ்க்கையில் நம்பிக்கையோடு இருப்பது எப்படி என்று அவர்களுக்குச் சொன்னேன்.

இளம் வயதில் இப்படியொரு காரியம் செய்யும் ராபர்ட்டைப் பாராட்ட வேண்டுமா இல்லையா?’ என்று ஒரு கேள்வி கேட்டுப் பேச்சை நிறுத்தினேன்.

‘ராபர்ட்டுக்காக இப்போது நாம் கைதட்டலாம்’ என்றதும் படபடவென்று எல்லோரும் கைதட்டினார்கள்.

‘ராபர்ட் இப்படிச் செய்வது மாதம் ஒருமுறைதான்’ என்று சொல்லிவிட்டு மீண்டும் பேச்சை நிறுத்தினேன். இப்படிப்பட்ட சேவையை மாதம் ஒரு நாள் அல்ல, மாதம் முப்பது நாட்களும் செய்பவர் ராபர்ட்டைக் காட்டிலும் உயர்ந்தவரா இல்லையா?’ என்றேன். கொஞ்சம் மௌனம்.

‘யார் அந்த உயர்ந்தவர்?’ என்று கேட்டேன்.

முன்வரிசையில் தெரியாத கண்களை அங்கும் இங்கும் உருட்டியபடிக் கேட்டுக்கொண்டிருந்த விருமாண்டி என்பவர், ‘ராஜா சார்’ என்றார் சத்தமாக.

இந்தமுறை நான் சொல்லாமலேயே கைதட்டினார்கள்.

‘எப்படி முன்னேறலாம்? எவ்வளவு சம்பாதிக்கலாம்? எப்படியெல்லாம் சேர்த்து வைக்கலாம்? என்று பலரும் பதற்றமாக இருக்கும் இந்தக் காலத்தில் உங்களைப் போன்றவர்களை அழைத்து வந்து, அடைக்கலம் கொடுத்து, ஒரு வீடு வாடகைக்கு எடுத்து, இரவு தன் வீட்டுக்குக்கூடப் போகாமல், பாதுகாப்புக்காக இங்கேயே உங்களுடன் தங்கி, உங்கள் வாழ்வே தன் வாழ்வாக வாழும் ராஜா, ராபர்ட்டைக் காட்டிலும் உயர்ந்தவர்தானே!’

ஆமாம் என்று பலமாகக் குரல்கள் எழுந்தன. மீண்டும் கைதட்டல். ‘யாரோ பெற்ற பிள்ளைகளை ராஜா எடுத்து வளர்க்கிறார். யாரோ உதாசீனப்படுத்தி, அவமானப்படுத்திய தாய்மார்கள், மாமியார்களை ராஜா ஆதரவு கொடுத்து வாழ வைக்கிறார். இறைவன் செய்த குற்றமாகப் பிறந்திருக்கும் பார்வையற்றவர்கள் பலரை ஒன்றுசேர்த்து, அவர்களின் வாழ்வுக்கும் உதவுகிறார்.

‘அய்யோ பாவம்’ என்று சொல்லலாம். ஐந்தாயிரம் பத்தாயிரமோகூட எடுத்து தானமாகக் கொடுத்து விடலாம். ஆனால் ராஜா கொடுத்திருப்பது அவர் வாழ்க்கையை. தான் முன்னேற வேண்டும் என்றல்ல. ஆதரவற்றவர்கள் கௌரவமாக, நிம்மதியாக, பாதுகாப்பாக வாழவேண்டும் என்று வாழ்கிறாரே, அவர் பாராட்டுக்கு உரியவர்தான். ஆனால் என் அபிப்பிராயத்தில் அவரைக் காட்டிலும் கூட இன்னும் கூடுதல் பாராட்டுக்கு உரியவர் யாராக இருக்கும்? சொல்லுங்கள் பார்க்கலாம்.’

அந்த இடம் படு நிசப்தமாக இருந்தது. கூர்மையாகக் கவனித்தார்கள்.

தவிப்பாகத் தெரிந்த விருமாண்டியே மிகவும் சத்தமாகச் சொன்னார்.

‘மேடம்தான் சார் அது.’

‘எந்த மேடம்?’

‘பர்வீன் மேடம்.’

இந்த முறை கைத்தட்டல் மிக பலமாக இருந்தது. புடைவைத் தலைப்பை மேலும் இழுத்துப் போர்த்திக் கொண்ட பர்வீன், தலை குனிந்து கொண்டார். ராஜா நெகிழ்வுடன் பர்வீனைப் பார்த்தார். நான் தொடர்ந்தேன். ‘ராஜாவுடன் பேசும்போது சொன்னார், சிறு வயதில் இருந்தே பார்வையற்றவர்கள் மீது அவருக்குப் பாசம் வந்ததாக. அவர் வாழ்க்கை, அதைப் பற்றி அவர் எடுத்த முடிவுகள் எல்லாமே சரி. ஆனால் ஆசை ஆசையாக ராஜாவைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர் பர்வீன்.

ஒரு திருமணத்தில் பெண்ணுக்கு எவ்வளவு எதிர்பார்ப்புகளும் கனவுகளும் இருக்கும். வீடு வாங்க வேண்டும், நகைகள், வண்டிகள் வாங்க வேண்டும், வெளியில் போகவேண்டும் என்றெல்லாம் ராஜாவைக் கட்டாயப்படுத்தாமல் யார் யாரோ அறுபது நபர்களுடன், அவர்களுடைய

சிரமங்களைத் தாங்கிக்கொண்டு, ‘அட, இதென்ன வாழ்க்கை’ என்று நகர்ந்துகொண்டு விடாமல், ராஜா எடுத்துக் கொண்ட பொறுப்புக்கு முழு உறுதுணையாக இருக்கிறார். 24 மணி நேரமும் இவர்களைப் பற்றி நினைத்துக்கொண்டு, அவர்களுக்காக உழைத்துக்கொண்டு இருக்கும் ராஜாவுக்கும் பக்கபலமாக இருக்கிறார்.

பர்வீன் மட்டும் ஆதரவாக இல்லாவிட்டால், ராஜாவால் இப்படி ஒரு இல்லத்தை நடத்த முடியுமா? நிம்மதியாக இந்தச் சேவையைச் செய்ய முடியுமா? பர்வீன் மேடம் செய்தது எவ்வளவு பெரிய தியாகம்! அவர் காட்டும் சகிப்புத்தன்மை, அனுசரணையை என்னவென்று சொல்வது?’

இப்போது ராஜா எழுந்து நின்று பர்வீனைப் பார்த்துக் கைதட்டினார். இன்னும் பலரும் எழ முற்பட, உடனே நான் எல்லாரையும் அமரச் சொன்னேன்.

‘வேறு எவரைக் காட்டிலும் இங்கு உங்களுடனேயே இருப்பவர்கள், உங்களுக்காகவே எதையும் செய்யும் ராஜாவும் பர்வீனும் மிகவும் உயர்ந்தவர்கள்.

எனக்கு முன்னால் பேசியவர் சொன்னதை நான் மறுக்கிறேன். நான் சொல்கிறேன், நீங்கள் மிகவும் கொடுத்து வைத்தவர்கள். காரணம், தற்சமயம் நீங்கள் எல்லாம் உங்களை நேசிப்பவர்களிடம் இருக்கிறீர்கள். நல்லவர்களின் பாதுகாப்பில், அரவணைப்பில் இருக்கிறீர்கள். நம்மை அடுத்தவர் விரும்பவேண்டும், உதவவேண்டும் என்றுதான் எல்லோரும் விரும்புகிறோம். ஆனால் அப்படிப்பட்ட வாழ்க்கை எல்லோருக்கும் அமையாது. ஆனால் அது உங்களுக்குக் கூடிவந்திருக்கிறது. முப்பது வயது ஆகாத ராஜாவும் பர்வீனும் இரண்டரை வயது முதல் எழுபது வயது வரை உள்ள உங்களுக்குப் பெற்றோராக இருக்கிறார்கள்.’

*

ராஜ்குமார், புவனா திருமணம் நடக்கவில்லை. மதன் திருமணம் செய்துகொண்டார். ஆனால் அவரும் அவர் மனைவியும் ஒற்றுமையாக இல்லை. திருமணம் செய்துகொண்ட ராஜாவும் பர்வீனும் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்.

இருவர் சேர்ந்து வாழ்வது என்பது சாதாரணமானது அல்ல. அதில் தெரிந்துகொள்ள சரியாக புரிந்துகொள்ள நிறையவே இருக்கிறது.

## காதல் சரித்திரம்

சங்க இலக்கியம் என்பது சுமார் 1750 முதல் 2200 ஆண்டுகளுக்கு முன்பு (கிமு 200 முதல் கிபி 250 வரை) எழுதப்பட்ட 2387 பாடல்களின் தொகுப்பு. அவ்வளவு காலத்துக்கு முன்பு இருந்த வாழ்க்கை முறை பற்றி நமக்குச் சொல்லும் இந்தப் பாடல்களை மொத்தம் 473 புலவர்கள் பாடியிருக்கிறார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டிருக்கும் இந்தப் பாடல்களைப் படித்தால், காதல் என்பது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்கிறது என்கிற செய்தியும், காதல் அன்றைய சமுதாயத்தில் மிகவும் போற்றப்பட்டிருக்கிறது என்கிற உணர்வும் கிடைக்கிறது.

காதல் பற்றி மட்டுமல்ல, திருமணம் என்கிற நிகழ்வு எப்படி நடக்க வேண்டும் என்பது பற்றியும், சங்கப் பாடல்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

அதே காலகட்டத்தில், எழுதப்பட்ட திருக்குறளில், காமத்துப்பால் பகுதியில் ஆண் பெண் உறவு எப்படியிருக்க வேண்டும் என்பதை விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

சுமார் 1800 ஆண்டுகளுக்கு முந்தையதாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிற தொல்காப்பியத்தில், எதனால், (திரு)மணம் செய்துகொள்கிற வழக்கம் ஏற்படுத்தப்பட்டது என்கிற செய்தி வருகிறது.

> ‘பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
>
> ஐயர் யாத்தணர் கரணம் என்ப...’

என்கிறது தொல்காப்பியம் (எண் 1091). திருமணம் பற்றி.

பொய் என்றால் இப்போதும் புரிகிறது. வழு என்றால், பிழைபட (நேர்மையின்றி) நடத்தல் என்பது பொருள். இவை இரண்டும் அதிகரித்த பின்னர் தான் ‘வது’ வை (திருமணத்தினை) பெரியவர்கள் ( ஐயர் , யாத்தணர்) ஏற்படுத்தினராம்.

ஆணும் பெண்ணும் காதலிப்பார்கள். சேர்ந்தும் வாழ்வார்கள். பெண் கருத்தரிப்பாள். ஆனால் சில ஆண்கள், ‘தெரியவில்லையே! இது என் பிள்ளைதானா? என்று சந்தேகமாக இருக்கிறதே ‘என்று சொல்லி நழுவுதல் அதிகரித்ததனால்தான், விரும்புகிற ஆணையும் பெண்ணையும் பலர் முன்னிலையில், ‘மணம்’ செய்து சேர்த்து வைக்கும் வழக்கம் ஏற்பட்டதாக தொல்காப்பியம் சொல்கிறது.

இப்படி மணம் செய்துவைப்பதன் மூலம் மணமக்களுக்கு தெரிவிக்கப்படுவது என்ன? ‘விரும்புகிறீர்களா, சரி. இருவரும் சேர்ந்து வாழுங்கள். அதற்கு அடையாளமாக ஏதாவது செய் (தாலி) . இனி இவள் தான் உனக்கு. அவன் தான் உனக்கு. வேறு யாருடனும் தொடர்பு கிடையாது (கூடாது). உங்கள் சேர்க்கை க்கு (மணம்) நாங்கள் சாட்சி.’

அதற்கும் பிந்தைய காலத்தில் எழுதப்பட்ட சிலப்பதிகாரத்திலும் திருமணம் என்கிற வழக்கம் தொடர்வது தெரிகிறது. சிலப்பதிகாரத்தில் காணப்படும் திருமண வயது ஆணுக்கு, ஈரெட்டுப் பிராயம் (16), பெண்ணுக்கு ஈராறு அகவை (12).

பெண்ணுக்குப் பன்னிரெண்டு வயது என்றால், அது அவள் பெரியவளாகும் வயது. உடனேயே மணம் செய்து முடித்து, ‘இனி இவன்தான். இவன் மட்டும்தான்’ என்றும், அவள் கணவனிடம் (16 வயது ஆடவன்) ‘உன்னை விடச் சிறியவள் இவள். பார்த்துக்கொள், இனி இவள் உன் பொறுப்பு’ என்றும் சொல்வது போலவும் இருக்கிறது.

தமிழ் மூதாட்டி அவ்வைப் பாட்டி சொல்லுவதும் (‘இல்லறம் அல்லது நல்லறம் அன்று.’) திருமணம் செய்து வாழ்வதுதான் சரி என்கிற கருத்தைத்தான்.

‘அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை’ என்று தன் பங்குக்கு வள்ளுவரும் இல் வாழ்க்கைக்கு அறம் முக்கியம் என்று சொல்லிவிட்டுப் போகிறார்.

திருமணம் செய்து வாழும் வாழ்க்கையை இல்லறம் என்றே குறிப்பிட்டு

வந்திருக்கிறார்கள். சேர்ந்து வாழ்ந்தால் இன்பம் கிடைக்கும். அதனை இல் இன்பம் என்று சொல்லாமல் எதனால் இல்- அறம் என்றே சொல்லிவந்திருக்கிறார்கள்?

இல் என்றால் வீடு. இல்லறம் என்றால், வீடு தொடர்பான அறம். அறம் என்றால்? அறம் என்கிற சொல் இப்போது வழக்கத்தில் இல்லை. அதன் பொருள், ஆழமானது.

தர்மம், நியாயம், நேர்மை, பொறுப்புணர்வு, கடமை என்று பலவற்றின் கூட்டுதான் அறம். அதுதான் வாழ்க்கை முறை என்று வாழ்ந்துவந்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள்.

திருமணம் என்பது , ஆணும் பெண்ணும் இன்பம் அனுபவிக்க விரும்பிச் சேர்வது. ஆனால், அது மட்டுமேயல்ல. தம்பதியர் இருவருக்கும் சில பொறுப்புகளும் சொல்லப்படுகின்றன. அந்தப் பட்டியல் தான் அறம். ஆக, அறம் என்பது பொறுப்பு.

ஒருவருக்கு நல்ல வேலை கிடைக்கிறது. அதனால் ஒருவர் மகிழ்ச்சி அடைகிறார். எதனால் மகிழ்ச்சி வருகிறது? காரணம், அந்த வேலை மூலம் அவருக்கு ஊதியம் கிடைக்கும். மேலும் அதன் மூலம் அவருக்கு பதவி, பெருமை போன்ற பலவும் வந்து சேரும். வேலை மூலம் பெறக்கூடிய இவற்றால், சமூகத்தில் அவருக்கு ஒரு அடையாளம் கிடைக்கும்.

சரி. வேலை மூலம் கிடைக்கக்கூடிய எல்லாமே இப்படிபட்ட வெகுமதிகள் தானா?

எதனால் இவ்வளவும் கொடுக்கப்படுகின்றன?

வேலை என்கிற ஒரு பொறுப்பைச் சுமப்பதனால்தான். அவர் அந்த வேலையைச் செய்ய வேண்டும். தவிர, அவர் சொன்னபடி, கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும். அதற்காக அவர், அவருடைய சில சுதந்திரங்களை, சுகங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். மேலும் அவர் சில கடினமானவற்றையும் செய்யவேண்டும். ஆக, வேலை என்றால் வெகுமதிகள் மட்டும் அல்ல. அதோடு பொறுப்புகளும் கலந்துதான் இருக்கும்.

அதேபோலவே திருமணத்தில், ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் கிடைக்கிறார்கள். அவர்கள் இருவரும் இன்பமாக வாழலாம். இன்பத்துடன் கூடவே அவர்களுக்குச் சில பொறுப்புகளும் சொல்லப்படுகின்றன. அந்தப் பொறுப்புகளைத்தான், (இல்) அறம் என்றார்கள்.

அந்தக் காலத்தில், குடும்பத்தில் இருப்பவர்களுக்கு சமுதாயக் கடமையும் இருந்தது. தன் குடும்பத்தினைக் காப்பாற்றுவதுடன், துறவிகள், விருந்தினர்கள் போன்றவர்களையும் அவர்கள் பேண (கவனிக்க) வேண்டும் என்கிற நெறிகள் இருந்தன. அதனால்தான் இல்லறம் என்பதே தர்மம் என்றார்கள்.

ஆக, திருமணம் என்பது இரண்டு நபர்கள் சேர்ந்து விருப்பப்படி வாழ்வது மட்டுமல்ல. விலங்குகள் கூடத்தான் காமத்தால் தூண்டப்பட்டு, சேருகின்றன. துய்த்து முடிந்ததும் பிரிந்துவிடுகின்றன. ஆனால் மனிதர்கள்?

திருமணம் செய்து பிள்ளைகள் பெற்று, குடும்பமாக பொறுப்பாக வாழ்கிறார்கள். பொறுப்பு என்பது தன்னலத்தினைக் கொஞ்சம் விட்டுக்கொடுத்து , கடமைகளைச் செய்வது.

எல்லா மதங்களும் திருமணத்தினைப் போற்றுகின்றன

ஏதோ நம் நாட்டில்தான் இப்படி திருமணம் என்கிற சடங்கு, அதற்குண்டான கட்டுப்பாடுகள், திருமணம் ஆனவர்களுக்குப் பொறுப்புகள் போன்றவை இருப்பதாகவும் , வெளிநாடுகளில் மக்கள் விருப்பம் போல, கட்டுப்பாடுகள் இன்றி இருக்கிறார்கள் என்றும் சிலர் நினைத்துக்கொண்டிருக்கலாம்.

முன்னேறிய நாடுகளிலும் கூட ஒருவன்-ஒருத்தி, குடும்பம், பிள்ளைகள் போன்றவைதான் இருக்கின்றன. உலகத்திலே இன்றும் திருமணமும் அதன் மூலம் பெறுகிற குடும்ப அமைப்பும்தான், பெரும்பாலானோரின் வாழ்க்கை முறையாக இருக்கிறது.

ஜெர்மனியில் வசிக்கும் ஒரு குடும்பம் பற்றிக் கூடுதலாக தெரிந்து கொள்கிற வாய்ப்பு எனக்கு சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன் கிடைத்தது. ஆச்சரியப்பட்டுப் போனேன். நம் நாட்டில் குடும்பங்களுக்கும் உறவுகளுக்கும் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ, அதே அளவு அங்கேயும் கொடுக்கப்படுகிறது என்பது தெரிந்து வியப்படைந்தேன்.

கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயம், எல்லா மதங்களுமே திருமணத்தை மதிக்கின்றன, பரிந்துரைக்கின்றன, போற்றுகின்றன.

கத்தோலிக்க மதத்தில், ‘உனக்கு இவரைப் பிடித்திருக்கிறதா? கடைசி வரை சேர்ந்து வாழ்வாயா?’ திருமணத்திற்கு முன் பலர் முன்னிலையில் பெண்ணிடம் கேட்கிறார்கள். என்ன பொருள்? இது முக்கியமான உறவு. தெளிவாக முடிவெடு’ என்பதுதானே.

திருமணம் செய்ததும் கணவன் மனைவி இருவரிடமும், ‘இனி இவர், உன் சதையின் சதை’ என்கிறார்கள். கருக்கலைப்பு, விவாகரத்து போன்றவற்றை கத்தோலிக்க மதம் ஆதரிப்பதில்லை. கூட்டுக் குடும்பத்தினை எப்படிக் காப்பாற்றுவது என்றுதான் தொடர்ந்து யோசிக்கிறார்கள்.

திருமணம் செய்தவரை விவாகரத்துச் செய்ய நினைத்தால், அதற்கான அனுமதியை போப் ஆண்டவரிடமிருந்துதான் பெற வேண்டும் என்று முறை வைத்திருக்கிறார்கள். உலகத்தில் வாழும் மொத்த கத்தோலிக்கர்களுக்கும் சேர்த்து, போப் ஒரே ஒருவர்தான். எந்த நாட்டில் எந்த மூலையில் இருப்பவருக்கு விவாகரத்து வேண்டுமென்றாலும், அதற்கு அவர் போப்பின் உடைய அனுமதி பெறவேண்டும் என்றால் என்ன பொருள்? இல்லறம் என்பது எவ்வளவு முக்கியமானது என்று கருதப்படுவதாகத்தானே அர்த்தம்?

இஸ்லாமிய மதமும் ஆணும் பெண்ணுமாக இணைந்து வாழும் திருமணத்தைத்தான் ஆதரிக்கிறது. திருமணம் எனது வழி என்று நபிகள் நாயகம் சொல்கிறார். இஸ்லாத்தில் திருமணத்துக்குப் பெண்ணின் சம்மதம் என்பது முக்கியம். அது இல்லாமல் திருமணம் செய்யக்கூடாது.

திருமணம் செய்துகொண்டவர்கள், ஒருவருக்கு ஒருவர் ஆடையாக இருக்க வேண்டும் என்கிறது குரானின் ஒரு வசனம். திருமணம்

செய்தவருக்கு உண்மையாக, குடும்ப நலனைக் காக்க, கணவன் மனைவி இருவருமாகச் சேர்ந்து பிள்ளைகள் பெற்று நல்லபடியாக வளர்க்கவே இஸ்லாம் சொல்கிறது.

இந்து மதத்தில் சிவபெருமான், பார்வதிக்கு உடம்பில் ஒரு பகுதியைக் கொடுத்து, ‘உமை ஒரு பாகன்’ ஆனார். ‘தம்பதி சமேதராக’ ( கணவனும் மனைவியுமாக) சேர்ந்து இருப்பதே சிறப்பாகக் கருதப்படுகிறது. மகாவிஷ்ணு அவரது மனைவியான மகாலஷ்மியை, தனது மார்பில் வைத்திருக்கிறார்.

சரித்திரம் இப்படிச் சொல்கிறது. ஆனால் இப்போது இல்லறம் என்பது அத்தனை தெய்வீகமானதாகவா இருக்கிறது?

## 2. என்ன காரணம்?

ஹேமா ஓர் அலுவலகத்தில் எக்ஸிகியூட்டிவ் ஆக பணிபுரிபவர். அவரைப் பெண் பார்க்க வருவதாகச் சொல்லி, அவருடைய மேலதிகாரியிடம் ஒரு நாள் விடுப்பு கேட்டு சென்றவர் திரும்பி வருகிறார். உணவு இடைவேளையின் போது அவரைப் பார்த்த மேலதிகாரி கேட்கிறார்.

'என்ன ஆயிற்று?'

'பார்த்தோம். பேசினோம். அவுங்கதான் முடிவு சொல்லணும்.'

'எப்ப சொல்றாங்களாம்?'

'இரண்டு மூன்று நாள் ஆகுமாம். ஜாதகம் எடுத்துப் போயிருக்காங்க.'

'உங்களுக்கு விருப்பம்தானே...'

'ஓகே. நல்லாதான் இருக்கார்.'

'எங்க வேலை செய்யறார்?'

'அவர் சாஃப்ட்வேர் எஞ்சினியர். பெங்களூர்ல ஒரு எம்.என்.சி கம்பெனியில...'

'அடடா!, அப்ப நீங்க இந்த வேலையை ராஜினாமா செய்திடுவீங்களா?'

'இப்ப நிச்சயம் செய்தாலும், கல்யாணம் மே மாசம்தான் சார் இருக்கும்.'

மூன்று நாட்கள் கழித்து பையன் வீட்டில் சம்மதம் தெரிவித்துவிட்டதாகச் சொன்னார் ஹேமா. முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. இன்னும் ஒரு வாரத்தில் நிச்சயதார்த்தம். மூன்று மாதம் கழித்துத் திருமணம்.

ஹேமா அவருடைய பெற்றோருக்கு ஒரே மகள். அப்பா மிகவும் கண்டிப்பானவர். வீட்டில் அவர் வைத்ததுதான் சட்டம். அம்மாவும் பெண்ணும் அவருக்குப் பயப்படுவார்கள். பின்புதான் தெரிந்தது, பையனுக்கு வயது முப்பத்து ஐந்து என்று. ஹேமாவுக்கு 26தான். ஹேமாவின் அப்பா கட்டாயத்தினால்தான் அவள் ஒப்புக்கொண்டிருக்கிறாள். வரதட்சணை மிகவும் குறைவு என்பதால், ஹேமாவின் அப்பா அந்தப் பையனுக்கு ஒப்புக்கொண்டுவிட்டார்.

நிச்சயதார்த்தம் முடிந்தது. அதற்கு முன்பாகவே ஓரிரு முறை செல்போனில் தொடர்புகொண்டார் பத்மநாபன். அதுதான் அந்த மாப்பிள்ளை பையனின் பெயர். பத்மநாபன் தவிர, அவரது தாயாரும், ஹேமாவை செல்லில் அழைப்பார். அழைத்து, என்ன செய்கிறாய்? என்றைக்கு உனக்கு லீவு? எத்தனை மணிக்கு வீட்டிற்குக் கிளம்புகிறாய், என்றெல்லாம் கேட்பார்.

தொடக்கத்தில் எதையும் வித்தியாசமாக எடுத்துக் கொள்ளாமல்தான் பதில்

சொன்னார் ஹேமா. பின்பு அந்தக் கேள்விகள், அவர்கள் ஏதோ தன்னை ஆராய்வதாக ஹேமாவுக்குப் பட்டிருக்கிறது. அதன்பின் அப்படிப்பட்ட கேள்விகளுக்கு அதிகம் பதில் சொல்லாமல், துரிதமாகப் பேச்சை முடித்துக் கொண்டுவிடுவார். சுருக்கமாகப் பதில் சொல்லித் துண்டித்தால், மீண்டும் செல் அடிக்கும். மாமியார்தான் லைனில் இருப்பார். ஏன் வைத்துவிட்டாய் என்று கேட்பார். போகப் போக, இப்படிப்பட்ட விசாரணைகள் ஹேமாவுக்கு எரிச்சல் கொடுத்தன. ஒரு நாள் முழுக்க ஹேமா, பத்மநாபன் மற்றும் அவரது தாயார் இருவருடைய அழைப்புகளையும் வேண்டுமென்றே எடுக்காமல் இருந்தார்.

அன்று மதியம் மூன்று மணிக்கு, நிறுவனத்தின் மெயின் கேட் செக்யூரிட்டியிடம் இருந்து ஹேமாவுக்குத் தகவல், ‘உங்களைப் பார்க்க மிஸ்டர் பத்மநாபன் என்று ஒருவர் வந்திருக்கிறார்.’

போனார்.

‘என்ன ஆச்சு? ஏன் போனை எடுக்கலை?’

‘சார்ஜ் இல்லை’ என்ற ஹேமாவிடம், ‘எங்க? செல்போனை காட்டு பார்க்கலாம்’ என்றார் பத்மநாபன். எல்லாம் செக்யூரிட்டி கார்ட் முன்பாக.

ஹேமாவுக்குள் பொங்கிற்று. ‘சாரி, எனக்கு வேலையிருக்கிறது’ என்று சொல்லிவிட்டு, அலுவலகத்துக்குள் போய்விட்டார். ‘ஹலோ, ஹலோ’ என்று பின்னால் சத்தமாய் அழைத்த பத்மநாபனைப் பற்றிக் கவலைப்படாமல் திரும்பிக்கூடப் பார்க்காமல் வேகமாகப் போய்விட்டார் ஹேமா.

அடுத்த நாள் ஹேமா அலுவலகத்துக்கு வரவில்லை. ஆனால் பத்மநாபன் வந்தார். செக்யூரிட்டியிடம் ஹேமாவைப் பார்க்க வேண்டும் என்றார். உள்ளே தொலைபேசியில் கேட்டுவிட்டு, ‘இன்னிக்கு அவங்க வரலை சார்’ என்றவரை நம்பாமல் சற்று நேரம் அங்கேயே நின்றார் பத்மநாபன். அங்கிருந்தபடியே செல்லில் ஹேமாவுக்கு முயற்சிக்க, செல்போன் இணைப்புக் கிடைத்தது. போனை எடுத்தது, ஹேமாவின் அப்பா.

ஆண்குரல் கேட்டதும், ‘யார் பேசுறது?’ என்று அதட்டினார் ஹேமாவின் அப்பா. பின்பு இன்னார் என்று தெரிந்து கொண்டதும், ‘ஹேமாவுக்கு ஜுரம்’ என்றார். ‘இனி நாங்க செல்லில் கூப்பிட்டா எடுத்துப் பேசச் சொல்லுங்க மாமா’.

‘நிச்சயமா...’

சினேகிதி போல பழகும் தன்னுடைய மேலதிகாரியிடம் ஹேமா சொன்னார், ‘எனக்கு அவங்களை நினைச்சாலே எரிச்சலா இருக்கு மேடம்.’

அடுத்து திருமணத்துக்காகத் துணிகள் எடுக்கக் கிளம்பி கடைக்குச் சென்ற பத்மநாபனும், அவர் அம்மாவும் கடையில் இருந்து செல்லில் ஹேமாவை அழைத்தார்கள்.

‘மாம்பலம் உஸ்மான் ரோட்ல, கடையில நிக்கறோம்... நீ ஆட்டோ பிடிச்சு உடனே வா...’ போனை வைத்து விட்டார்கள்.

அலுவலகத்தில் இருந்த ஹேமா அவர் அம்மாவிற்கு போன் அடித்து, விபரம் சொன்னார். இருவரும் உஸ்மான் ரோட்டுக்குச் சென்றார்கள்.

ஹேமாவை மட்டும் எதிர்பார்த்திருந்த பத்மநாபனுக்கும் அவர் அம்மாவுக்கும் ஹேமா தன் அம்மாவோடு வருவதைப் பார்த்ததும் பயங்கர அதிர்ச்சி.

'உன்னைத்தானே வரச்சொன்னேன். எதுக்கு அம்மாவைக் கூட்டிக்கிட்டு வந்தே?' என்று நெருங்கி வந்து அதட்டலாகக் கேட்டான் பத்மநாபன். 'நீங்க மட்டும் உங்க அம்மாவோட வந்திருக்கீங்க?' பட்டென்று திரும்பக் கேட்டாள் ஹேமா.

குறித்த தேதியில் ஹேமா - பத்மநாபன் திருமணம் நடந்து முடிந்தது. இருவரும் பெங்களூர் போனார்கள். உடன் பத்மநாபனின் தாயாரும்.

இவர்கள் அப்படியே இருக்கட்டும். வேறு ஒரு தம்பதியரைப் பார்க்கலாம்.

ஒரு பரபரப்பான வேலைநாள். மதியம் 3 மணி. அவர் வேலை செய்த அலுவலகத்தில் சுதா மயங்கி விழுந்தார். உடன் பணிபுரிந்தவர்கள் பரபரப்பாகிப் போனார்கள். முதல் உதவி கொடுக்கப்பட்டு மயக்கத்திலிருந்து மீண்டார் சுதா. 'எதுவுமில்லை, வீக்னஸ் தான்' என்றார்.

இரண்டு நாள் போனது. முன்பு நடந்தது போலவே மீண்டும் நடந்தது. சுதாவைக் கூப்பிட்டு அவருடைய மேலாளர் விசாரித்தபோது , அவர் மௌனமாக இருந்தார். தொடர்ந்து கேட்க, ஒன்றுமில்லை என்றவர் பிறகு அழுத்தம் தாங்காமல் சொன்னார்.

சுதாவுக்கும் அவருடைய கணவனுக்கும் பிரச்னை. திருமணம் ஆகி நான்கு ஆண்டுகள் ஆகின்றன. பையனை திருமணத்துக்கு முன்பே தெரியும். பள்ளிக்கூடத்தில் ஒன்றாகப் படித்தவர்கள். பையன் பெயர் குமார். சுதா வீட்டுக்கு அடிக்கடி வருவான் போவான். பள்ளிப் படிப்பு முடிந்தபிறகு இருவரும் வெவ்வேறு கல்லூரிகளில் சேர்ந்ததால் அதன்பிறகு அதிகம் சந்திக்க முடியவில்லை.

சுதாவின் தந்தை ஒரு சாலை விபத்தில் இறந்து போக, சுதாவின் குடும்பம் தவித்துப் போனது. சுதாவுக்கு மாப்பிள்ளை தேடியபோது நல்ல மாப்பிள்ளை யாரும் கிடைக்கவில்லை. அப்போதுதான் சுதாவின் அம்மாவுக்கு குமாரின் ஞாபகம் வந்தது.

'குமாரை கட்டிக்கோ... என்று மகளிடம் யோசனை சொன்னவர், போகப் போக வற்புறுத்த ஆரம்பித்தார். 'எனக்கு ஆஸ்துமா, முடியவில்லை, நீயும் குமாரை விரும்புகிறாய், கட்டிக்கோ' என்றார்.

குமார் வீட்டுக்குத் தெரியாமல், குமாரும் சுதாவும் ஒரு கோயிலில் வைத்துக் கல்யாணம் செய்து கொண்டார்கள். சுதா அம்மா திருமணத்திற்குப் போகவில்லையே தவிர, திட்டம் நிறைவேறுவதற்கு வழிகாட்டிக் கொடுத்தார்.

குமாருக்கும் இதெல்லாம் தெரியும். சுதாவுக்கு சென்னையில் ஒரு BPOவில் வேலை. மாதம் 15000 சம்பளம். குமாருக்கு வேலை இல்லை. அதற்கு முயற்சிக்கவும் இல்லை.

திருமணம் ஆனதும் தனிக்குடித்தனம் போனார்கள். சுதாதான் வருமானம் கொண்டு வருபவர். குமார் வேலைக்கு முயற்சி செய்து கொண்டேயிருப்பதாகச் சொன்னார். ஆனால் முழுமுயற்சி எதுவும் நடைபெறவில்லை. சுதாவுக்கு குமாரின் போக்கின்மீது கோபம் கோபமாக

வந்தது.

சுதாவின் சம்பளப்பணம் வந்ததும் அதிலிருந்து குமார் தனது செலவிற்குப் பணம் எடுத்தால், ‘இதில் இருந்து எடுக்காதே. வேலைக்குப் போய் சுயமாகச் சம்பாதித்து செலவு செய்’ என்பாள் சுதா. வாக்குவாதங்கள் வலுக்க ஆரம்பித்தன.

சீக்கரமாகவே சுதா கர்ப்பமானாள். குழந்தையும் பிறந்தது. குமார் அவ்வப்போது சுதாவின் சிபாரிசில் கிடைத்த வேலைகளுக்குப் போவான். ஆனால் ஏனோ, எந்த வேலையிலும் நீடித்து நிற்கவில்லை. ஏதாவது காரணம் சொல்லி வேலையில் இருந்து நின்றுவிடுவான்.

சுதா ஒருத்தியின் சம்பளம், மூன்று பேர் குடும்பச் செலவுக்குப் போதவில்லை. வேறு என்ன செய்யலாம் என்று யோசித்த சுதா, ஒரு டிராவல்ஸ் ஆரம்பித்தார். அதில் பிரபாகர் என்பவருக்கும் பங்கு. இருவரும் பார்ட்னர். சுதாவின் அம்மா பணம் கொடுத்து உதவினார்.

சுதாவுடன் சண்டை வரும்போதெல்லாம் குமார் தவறாமல் கேட்பது, ‘உனக்கும், பிரபாகருக்கும் என்ன கனெக்ஷன்?’ சம்பாதிக்காமல் இருக்கிறாயே, நானே வீட்டிலும் வெளியிலும் உழைக்கவேண்டியிருக்கிறதே என்று கத்தும் சுதாவின் வாயை அடைக்க , குமார் எடுக்கும் கடைசி ஆயுதம் இதுதான்.

குமாரின் திட்டப்படியே, இந்த வார்த்தைகள் வந்ததும் சுதா ஆடிப்போய்விடுவார். உடன் அடங்கியும்விடுவார். மேசைமீது தலையைக் கவிழ்த்துக்கொண்டு அழுவார். எதையும் சட்டை செய்யாமல், செலவுக்கு வேண்டிய பணத்தை எடுத்துக்கொண்டு வெளியே போய்க்கொண்டேயிருப்பான் குமார்.

ரகுவுக்கும் லட்சுமிக்கும் பெற்றவர்கள் பேசி முடித்த திருமணம்தான். ரகுவும் லட்சுமியும் படித்தவர்கள். ஆனால் ரகுவுக்கு லட்சுமியின் பெற்றோர் மீது வருத்தம். ஒரே பெண்தானே, நன்றாகச் செய்தால் என்ன என்று ரகு நினைத்தார்.

‘ஏன் எங்கப்பா அம்மா குடுக்கணும்? நீங்க சம்பாதிக்கிறீங்கதானே. ஏன் எல்லாத்துக்கும் என் அம்மா, அப்பாவை எதிர்பார்க்கிறீங்க?’ லட்சுமி வாதாடுவார். லட்சுமிக்கு வயது 21. ரகுவுக்கு 24.

திருமணம் ஆன கையுடன், ரகுவின் வேலை காரணமாக ஹைதராபாத்துக்கு தனிக்குடித்தனம் போய்விட்டார்கள். சென்னையில் இருந்த ரகுவின் பெற்றோரால் , அவ்வளவு தூரம் பயணம் போக முடியாது. ரகுவின் அப்பாவிற்கு வேலை அப்படி. ஆனால் லட்சுமியின் அம்மா அடிக்கடி பெண்ணைப் பார்க்க ஹைதராபாத் போய் விடுவார். வீட்டிற்குப் போனவர், சும்மாயிருக்கவில்லை. ரகுவும் லட்சுமியும் எதைப் பற்றிப் பேசினாலும், குறுக்கிட ஆரம்பித்தார். இதனால் ரகுவுக்கு அதிகமாகக் கோபம் வந்தது. ஒரே வீட்டில் மூவருமாக அடித்துக் கொள்ளாத குறைதான்.

ரகு ஒரு முடிவெடுத்தான். ‘நீ இவ்வளவு பேசுகிறாய் அல்லவா... பார் நான் என்ன செய்கிறேன் என்று. என் பேச்சைக் கேட்காதவரை உனக்குப் பிள்ளை பிறக்காது.’

அதிர்ந்துபோன லட்சுமி அம்மாவிடம் இதைச் சொல்ல, அம்மா ‘அப்படியா

சேதி! பதிலுக்கு நான் என்ன செய்யறேன்னு பார். அப்புறம் தன்னால வழிக்கு வருவார் என்று கருவியபடி, 'ரகுவால ஒரு பிள்ளையைத் தர்முடியாது 'என்று தன் உறவினர்களிடம் சொல்ல ஆரம்பித்தார்...

பாஸ்கருக்கும் ரம்யாவுக்கும் திருமணமாகி ஒரு வருடத்துக்கும் மேலாகி விட்டது.

ரம்யா பி.காம். படித்திருந்தாலும் வேலைக்குப் போவதில் நாட்டமில்லாமல் இருந்தாள். அவளுடைய பெற்றோரைப் போலவே அவர் மாமியார் வீட்டிலும் ரம்யாவை வேலைக்குப் போகுமாறு கட்டாயப்படுத்தவில்லை.

வீட்டிலும் ரம்யா எந்த வேலையும் செய்வதில்லை. காலையில் எழுந்து, குளித்து, உடுத்தி, மாமியார் செய்த பலகாரத்தினைச் சாப்பிட்டுவிட்டு, ஒன்று வாரப்பத்திரிக்கைகள் படிப்பாள் அல்லது தொலைக்காட்சி பார்ப்பாள். சாப்பிடுவாள். தூங்கிவிடுவாள். காலையில் எட்டு மணிக்கு, தந்தையுடன் வியாபாரத்தினைக் கவனிக்கச் செல்லும் பாஸ்கருக்கு இரவு வீடு திரும்ப மணி பத்து கூட ஆகிவிடும்.

அவர்களுக்குப் பிள்ளை பிறக்கவில்லை என்பது குறித்து ரம்யா வீட்டில் நச்சரிப்பு அதிகமானது. 'என்ன ஏதும் உண்டாகியிருக்கா?' என்று தொடர்ந்து கேட்டுவந்த தாயாரிடம் பொறுக்கமுடியாமல் ஒருநாள் ரம்யா சொல்லிவிட்டார். 'அவருக்கு அதில ஆசையே இல்லம்மா. கிட்டப்போனாலே எரிந்து விழுறார். தொட்டால் கத்துகிறார்.'

அதிர்ச்சியடைந்த ரம்யாவின் அம்மா, நேராகக் கிளம்பி வந்துவிட்டார். பாஸ்கரும் அவர் தந்தையும் கிளம்பிப் போனதும், சம்பந்தியிடம், ரம்யா அம்மா இதைப் பற்றி நேரடியாகக் கேட்க, பாஸ்கர் அம்மா கத்தியே விட்டார். 'உங்க பொண்ணைப் பார்த்தா, ஆசையா வரும்? சாப்பிட்டுச் சாப்பிட்டுத் தூங்கி, யானைக்குட்டி மாதிரியில்ல இருக்கா'

'ஏன் குண்டாயிருந்தா தொடக்கூட மாட்டாராம்மா?' வார்த்தைகள் தடித்தன. முடிவு, விவாகரத்து.

அமெரிக்காவில் வேலை பார்க்கும் வெங்கட் ஒரு லீவில் வந்து, பெண் பார்த்து, பதிவுத் திருமணம் செய்து, விசா வாங்கி, மூன்று மாதத்தில் திரும்ப வந்து, தீபாவை திருமணம் செய்துகொண்டு, கையோடு அழைத்துக் கொண்டு போய் விட்டார். எல்லாம் கண்மூடிக் கண் திறப்பதற்குள் நடந்ததுபோல இருந்தது.

தீபாவின் அப்பா செல்வாக்கான ஆள். பெரிய நிறுவனம் ஒன்றில் உயர்ந்த பதவியில் இருந்து பலரையும் ஆட்டிப் படைத்தவர். தீபா அவருடைய ஒரே மகள். ஒரே வாரிசு.

இது நடந்தது 15 வருடங்களுக்கு முன். இவ்வளவு தொலைத் தொடர்பு வசதிகள் இல்லாத காலம். கணவனுடன் அமெரிக்கா சென்ற ஒரே வாரத்தில், 'என்னை இந்தியாவுக்குக் கூட்டிச் சென்று விடுங்கள். இல்லாவிட்டால் தற்கொலை செய்துகொண்டு விடுவேன்' என்று ISDயில் அழுதபடியே சொன்னாள் தீபா.

சொன்னபடியே தீபா இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்டார். நீதிமன்றத்தில் விவாகத்துப் பெற்று, முறைப்படிப் பிரிந்தும் விட்டார்கள். இனி திருமணமே வேண்டாம் என்று கறாராகச் சொல்லிவிட்டாள் தீபா. தீபாவின் அப்பாவும்

அதோடு ஒடுங்கிப்போய்விட்டார். வேலையிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றுக்கொண்டு, சொந்தக் கிராமத்துக்கே குடும்பத்துடன் சென்றுவிட்டார்.

சென்னை தேனாம்பேட்டை சுந்தர்ராஜன் தம்பதியருக்கு ஒரே மகன். பெயர் பாண்டியன். மிகவும் அமைதியானவன். ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தான். மூன்று வருடங்களுக்கு முன் அவன் பெற்றோர்கள் அவனுக்கு கலாவைத் திருமணம் செய்துவைத்தார்கள். கலா உறவு அல்ல. அசல்.

திருமணம் முடிந்து கணவன் மனைவியாக பாண்டியனும் கலாவும் ஒன்றாக இருந்ததெல்லாம் மிஞ்சி மிஞ்சிப் போனால் மூன்று மாதம் இருக்கும். இப்போது கலா அவள் அம்மா வீட்டில். இரண்டு குடும்பங்களுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. பாண்டியன் எத்தனை லட்சம் கொடுத்தால், அவன் மனைவி விவாகரத்துக்கு சம்மதிப்பார் என்று. கேட்கிற பணத்தைத் தராவிட்டால், வரதட்சணை கேட்டுக் கொடுமைப்படுத்தியதாக வழக்குப் போடுவோம் என்கிறது கலா தரப்பு. நல்ல கௌரவமான வேலையில் இருக்கும் பாண்டியன் பயந்து விட்டான். ஒத்துப்போய் குடித்தனமும் செய்ய முடியவில்லை. கேட்கும் பணம் அதிகம். வேறு திருமணமும் செய்ய முடியவில்லை.

ராஜேந்திரன் வேலை செய்வதும் ஒரு பி.பி.ஓ.வில்தான். அங்கே எட்டு வருட சர்வீஸ். நல்ல சம்பளம். ஆனால் அவருக்குத் தரப்பட்ட பதவியுயர்வுகளை ஏற்றுக்கொள்ளத் தயங்கினார், மறுத்தார். காரணம், தனக்கு எப்போது வேண்டுமானாலும் பெரிய பிரச்னை வரலாம் என்கிற பயம்தான்.

ராஜேந்திரனுக்குத் திருமணமாகி 5 வருடங்கள் ஆகின்றன. வீட்டில் அவரது வயதான பெற்றோர், ராஜேந்திரன் மற்றும் ஒரு தம்பி. மொத்தம் நான்கு பேர்.

காலடி எடுத்துவைத்த அன்றே ராஜேந்திரனின் மனைவி சங்கீதா சொன்னார். ‘நாம் ஒரு சிறிய வீடாக வாடகைக்கு எடுத்துக்கொண்டு தனியாகப் போய்விடலாம்.’

சங்கீதாவின் பிடிவாதம் அதிகமானது. ராஜேந்திரனுக்குக் கோபம் வந்துவிட்டது. கத்தினார். வார்த்தைகள் தடித்து பிளவு வந்துவிட்டது.

சொல்லச் சொல்லக் கேட்காமல், சங்கீதா கிளம்பிப் போய்விட்டார். திருமண வாழ்க்கை ஒரே வாரம்தான். அதிலும் தொண்ணூறு சதவிகிதம் வாக்குவாதத்தில் போனது. ராஜேந்திரன் வீட்டுக்கு வக்கீல் நோட்டீஸ் வந்தது.

வந்த நோட்டீஸ் விவாகரத்துக் கேட்டு அல்ல. வரதட்சணை கேட்டுக் கொடுமைப்படுத்தியதாக.

வரதட்சணை கொடுமை என்கிற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் ராஜேந்திரனுக்கு15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை கிடைக்கும். ஆடிப்போய்விட்டார் ராஜேந்திரன். வழக்கு நடக்க ஆரம்பித்தது. பணமும், நேரமும் தண்ணீராகச் செலவாயின. நிம்மதி பறிபோனது. மானமும் போனது. அடிக்கடி கோர்ட்டுக்குப் போக வேண்டிய நிலை. வருடங்கள் ஓடின. வழக்கில் ராஜேந்திரன் ஜெயிக்க வாய்ப்பு இருந்தது.

சங்கீதாவின் குடும்பம் ஒரு வேலையைச் செய்தது. கோர்ட்டில் ஒரு புதிய பெட்டிஷன் கொடுத்தார்கள். அது, ராஜேந்திரன் தம்பி, அண்ணி சங்கீதாவிடம் தவறாக நடக்க முற்பட்டார் என்பதுதான். தம்பிக்கும் ஒரு நோட்டீஸ் வந்தது.

சரி போகட்டும், சமரசம் செய்துகொண்டுவிடலாம். காம்ப்ரமைஸ் பேசலாம். ஒரு பெரிய தொகைகூடக் கொடுத்துவிடுகிறோம் என்று, ஒரு சீனியர் வக்கீல்கள் மூலம் சொல்லியனுப்பியதற்கு, ‘அதெல்லாம் இனி முடியாது. என்ன ஆனாலும் சரி, அவனையும் (ராஜேந்திரன்) அவன் தம்பியையும் ஜெயிலில் வைத்துப் பார்க்காமல் விடமாட்டோம்’ என்று பதில் வந்தது.

என்ன இது, திருமணம் ஆகப்போகிறதா? என்று கேட்டுவிட்டு, அட்சதை போட்டு வாழ்த்தாமல் ஒரே பயமுறுத்தலாக இருக்கிறதே என்று தோன்றுகிறதா? இவை வெற்று பயமுறுத்தல்கள் இல்லை. எல்லாமே நிஜங்கள். பெயர்கள்தான் மாற்றப்பட்டுள்ளனவே தவிர, மற்றபடி சம்பவங்கள், பிரச்னைகள் எல்லாமே உண்மையாக நடந்தவை.

திருமணம் ஆன தம்பதியரிடையே இவ்வளவு பிரச்சனைகளா? அப்படியென்றால் எல்லோருடைய திருமண வாழ்க்கையுமே இதுபோல கடினமாகத்தான் இருக்குமா?

கண்டிப்பாகக் கிடையாது. பூத்துக் குலுங்கும் பூங்காபோல அத்தனை ரம்மியமானது திருமண வாழ்க்கை. பல அற்புதங்களும் மகத்துவங்களும் கொண்டது. ஆனால் சிலருடைய வாழ்க்கை இப்படித்தான் இருக்கிறது. அதற்கான காரணக்களை மொத்தம் ஒன்பது பிரச்னைகளாகப் பிரித்துவிடலாம்.

**1. இயலாத பெற்றோர்**

அதிக எண்ணிக்கையில் பெண் பிள்ளைகளைப் பெற்றவர்கள். அவர்களிடம் வசதியில்லாவிட்டால், அதன் காரணமாகத் தெரிந்தோ தெரியாமலோ சரியில்லாத இடத்தில், வேறு வழியின்றிக் கட்டிக்கொடுத்து விடுவார்கள். பெற்றவர்கள் மீது உள்ள பாசத்தின் காரணமாக, பெண்களும் தலையாட்டிவிடுகிறார்கள்.

**2. பிரச்னையான பெற்றோர்**

வயதானாலும் சில பெற்றோர்களுக்கு பக்குவம் வராது. ‘சின்னஞ்சிறுசுகள், அவர்கள் பிரச்னையை அவர்களே தீர்த்துக் கொள்ளட்டும். போகப்போக சரியாகிவிடும்’ என்று விடாமல், நல்லது செய்வதாக எண்ணி தவறான ஆலோசனைகளைச் சொல்வார்கள். ஈரைப் பேனாக்கி பெருமாளாக்கும் இவர்களால் பல உறவுகள் சிதைந்துள்ளன.

**3. ஆதிக்க மனோபாவம் கொண்ட ஆண்கள்**

‘மனைவி எனக்கு அடிமை, நான் சொல்லுவதைத்தான் கேட்க வேண்டும்’ என்று நினைக்கிற ஆண்கள். திருமணம் ஆவதற்கு முன்பாகவே ‘ஓவர் பொசசிவ்னஸ்’ காட்டத் தொடங்கி இறுதியில் அது பெண்ணை அடிமை செய்வதில் வந்து முடியும்.

**4. பெண்களின் ஆதிக்கம்**

தன் கணவன் தான் சொல்லியபடிதான் கேட்க வேண்டும். தான் சொல்லுவது தவிர யார் (அவர் அம்மா உட்பட) சொல்வதையும் கேட்கக் கூடாது என்று நினைக்கும் பெண்கள். அழுதோ, முரண்டு பிடித்தோ, அதட்டியோ கூட, கணவனைத் தன் வழிக்குக் கொண்டுவருவதால் அது பிற்காலத்தில் பல பிரச்னைகளைக் கொண்டுவருகிறது.

**5. ஏமாற்றும் ஆண்கள்**

பல பெண்களின் வாழ்க்கைப் பாழாய்போவதற்குக் காரணம், பெண்களை வசியம் செய்து ஏமாற்ற நினைக்கும் ஆண்களின் மனோபாவம். மனைவியைத் தன் சௌகரியத்துக்கு எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று கணக்குப் போடும் ஆண்களால் குடும்பத்தின் நிம்மதி சரிகிறது. மனைவி சம்பாதிக்க வேண்டும். அதை வாங்கி தான் அனுபவிக்க வேண்டும். ஒருவேளை இதற்கு எதிர்ப்புக் கிளம்பினால் உடனே பெண்ணின்மீது சந்தேகக் கற்களை வீசுவது (கற்பு, சோரம் போவது போன்றவை பற்றிச் சந்தேகித்து.)

**6. ஆசையற்ற ஆண்**

உடல் கோளாறு, மனக்கோளாறு காரணமாக தாம்பத்ய சுகத்தில் விருப்பம் இல்லாமல் இருப்பவர்கள். திருமணம் செய்து கொண்ட பிறகு தாம்பத்ய வாழ்க்கையில் திருப்தி கிடைக்காததால் ஏற்படும் பிரச்னைகள்.

**7. இதர உறவுகளுக்காக மனைவியைப் பரிதவிக்க விடும் ஆண்**

பெற்றவர்களுக்கோ, வேறு முக்கியமான எவருக்காகவோ பயந்துகொண்டு, சில ஆண்கள் கட்டிய மனைவிக்கு உரிய இடம், சுகம் தருவதில்லை. வாய் மூடி அதைப் பற்றிப் பேசாத மௌனிகளாக இருந்து பெண்களுக்கு பிரச்னைகள் தருபவர்கள்.

**8. கொடுமைப்படுத்தும் ஆண்கள்**

பெண் பற்றிப் படுமட்டமான எண்ணம் உள்ளவர்கள். கனவிலும் பெண்களை ஆண்களுக்கு சமமாக நினைக்க முடியாதவர்கள். இரக்கம் இல்லாதவர்கள். சுயநலவாதிகள். வன்முறை செய்யத் தயங்காதவர்கள்.

**9. வேலை வாங்கும் குடும்பங்கள்**

வருகிற மருமகள் வேலை செய்வதற்கு மட்டுமே என்று நினைப்பவர்கள். அவளும் மனுஷிதானே என்றும் நினைக்காதவர்கள்.

மேலே பார்த்த ஒன்பது காரணங்களும் வருவதற்கான ஒரு காரணம், அதாவது பத்தாவது காரணம் என்று ஒன்று இருக்கிறது. பார்க்கப்போனால் அது பத்தாவது காரணம் அல்ல. முதல் காரணம், அடிப்படைக் காரணமே அதுதான். அது, நிகழ்ந்துவரும் கணவன் மனைவி மற்றும் குடும்பத்தில் உள்ளவர்கள் மாற்றங்களைப் புரிந்துகொள்ளாதது. அதற்கு ஏற்ப நடந்து கொள்ளாதது.

# 3. இன்றைய நிலைமை

என்னுடைய தந்தைக்கும் தந்தை, பாட்டனார் காலத்தில், எங்கள் வீடுகளில் உள்ள ஆண்கள் தலைமுடி வைத்துக் கொள்ளக் கூடாதாம். மழித்துவிட வேண்டுமாம். வெளியில் போகும்போது டர்பன் என்ற தலைப்பாகை வைத்துக் கொள்வார்கள். என் தந்தை காலத்தில் 'கிராப்பு' என்று அழைக்கப்பட்ட முடியை அளவாக வெட்டி வைத்துக் கொள்ளும் பழக்கம் வந்து விட்டது. ஆனால் மீசையெல்லாம், எங்கள் குடும்பத்துப் பிள்ளைகள் வைத்துக்கொள்ளக் கூடாது என்றிருந்தது. நானே அதனை அனுபவித்துள்ளேன்.

ஆண்டுதோறும் சொந்த ஊரான தேவக்கோட்டையில் தைப்பொங்கலைக் கும்பிடுவார் என் தாயார். நாங்களும் போவோம். கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நான், மீசை வைத்திருப்பேன். தேவக்கோட்டை போக வேண்டும் என்றால், போயிற்று. நான் மீசை எடுத்தாக வேண்டும். மீசையுடன் போனால் ஏதோ தப்புத் தண்டா செய்தவரைப் பார்ப்பது போல பார்ப்பார்கள். இப்போதெல்லாம் மாறிவிட்டது.

சாதாரண முடி விஷயம். வைத்துக்கொள்வதும், மழிப்பதும் அவரவர் விருப்பம், சௌகரியம். ஆனால் 'வழக்கம்' என்கிற ஒன்று இருக்கிறபோது, அதை ஒட்டியே அனைவரும் செய்ய வேண்டியுள்ளது. மீறுபவர்கள் கலகக்காரர்களாகத் தெரிவார்கள்.

சமூகத்தின் பார்வைகளும், மதிப்பீடுகளும் நாளுக்கு நாள் மாறிக்கொண்டிருக்கின்றன.

ஆண்கள், பெண்கள், திருமணம், குடும்பம், பொறுப்புகள் போன்றவற்றின் கருத்துகளும் மாறிக்கொண்டேதான் இருக்கின்றன.

பெண்களின் கல்வி முன்னெப்போதையும் விட அதிகரித்திருக்கிறது. வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கையும் கூடியிருக்கிறது. குறிப்பாக மத்தியதர வர்க்கத்தில் இந்த மாற்றம் அதிகளவில் ஏற்பட்டுள்ளது.

இதனால் 'ஆண்-பெண், திருமணம், குடும்பம், பொறுப்புகள்' போன்றவற்றைப் பற்றிய அபிப்பிராய மோதல்களும் நாளடைவில் அதிகரித்துள்ளன. விளைவு - விவாகரத்துகள். மணமுறிவுகள்.

ஆண்களைப் பலசாலிகளாகவும் அதிகாரம் மிக்கவர்களாகவும் சுதந்தரமானவர்களாகவும் சுற்றி வர அனுமதித்த சமூகம், அதற்கு மாறாக, பெண்களை அடங்கிப் போகவும், வீட்டிற்குள்ளாகவே இருக்கவும் செய்துவிட்டது.

சமூகங்களில் வெகுவாகப் போற்றப்படும், ஒப்புக்கொள்ளப்பட்ட நியதிகளும், பழக்கங்களுமே, பழமொழிகளாக, உருப்பெறுகின்றன. அந்த

வகையில், ‘அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?’, ‘கணவனே கண்கண்ட தெய்வம்’, கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்’ என்கிற பழமொழிகள் பெண்களுக்கு எதிராக வரையறுக்கப்பட்டவை.

புகுந்த வீட்டுக்குச் செல்லும் பெண்ணுக்கு காலங்காலமாக வழங்கப்படும் அறிவுரைகளைப் பார்த்தாலும் இது தெரியும்.

- கணவன்தான் எல்லாம் - இறைவன் கூட பிறகுதான் (கணவனே கண்கண்ட தெய்வம் )
- படிப்பு அவசியமில்லை. குடும்பத்துக்கு வேண்டிய கடமைகள் செய்வதுதான் பெண்ணின் வேலை (அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு?)
- அதிகம் சாப்பிடக்கூடாது. வயிறு சிறுத்து இருப்பதுதான் பெண்ணுக்கு அழகு. (உண்டி சிறுத்தல் பெண்டிற்கழகு )
- சத்தமாக சிரிக்கக்கூடாது ( பொம்பளை சிரித்தால் போச்சு)
- கணவனை எதிர்த்துப் பேசக் கூடாது
- சுயமாகச் சிந்திக்கக் கூடாது
- ஆண்களை பெரியவர்களை எதிர்த்துப் பேசக் கூடாது
- எல்லோருக்கும் அடங்கிப் போகவேண்டும்
- என்ன செய்தாலும் பொறுத்துப் போகவேண்டும்
- பணம் கொடுத்துத்தான் நல்ல கணவனைப் பெறவேண்டும்
- தனக்குப் பிடிக்காவிட்டாலும் கணவரின் ஆசைகளுக்கு உடன்பட வேண்டும்
- ஒருவருடன் திருமணமாகி அவர் இறந்து விட்டால் ஒருவேளை பூப்பெய்துவதற்கு முன் இச்சம்பவம் நிகழ்ந்தாலும் சம்பந்தப்பட்ட பெண் இன்னொரு மணம் புரியக்கூடாது. திருமணத்திற்குப் பின் கணவன் இறந்து விட்டால், விதவைக் கோலம்தான். பூ, பொட்டு, வண்ண உடைகள் கூடாது. முன்பெல்லாம் தலை முடியையும் மழித்துவிட வேண்டும். ஒரு காலத்தில் கணவனை எரிக்கும்போது உயிரோடிருக்கும் மனைவியும் சடலத்தின்மீது விழுந்து தன்னை மாய்த்துக்கொள்ள வேண்டும்
- வேறு ஆண்களுடன் பேச, பழகக் கூடாது
- கற்போடு இருக்க வேண்டும். மனத்தாலும் இன்னொரு ஆணை எண்ணிப் பார்க்கக்கூடாது.

அதே சமூகம், ஆண்களுக்குக் கொடுத்திருக்கும் சுதந்திரமும், உரிமை களும் மிக அதிகம். ஆண் என்றாலே உயர்வு என்பது போலவே குழந்தைப் பருவம் முதலே ஒரு ஆண் வளர்க்கப்படுகிறான்.

**ஆண்களுக்கு**

- ஆண் என்பவன் உயர்வானவன் (ஜான் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை)

- வேலைக்குச் செல்லவேண்டும் (உத்தியோகம் புருஷ லட்சணம்)
- ஆண் என்கிற ஒரு தகுதி போதும். பிற தகுதிகள் கட்டாயமில்லை. (கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்)
- ஆணுக்குத்தான் வீட்டில் முதல் மரியாதை. குடும்பத் தலைவர் அவரே
- ஆணுக்குத் திருமண அடையாளங்கள் எதுவும் (தாலி, மெட்டி போல) கிடையாது
- எத்தனை முறை வேண்டுமானாலும் மறுமணம் செய்யலாம். மனைவி உயிரோடு இருந்தாலும், இறந்து விட்டிருந்தாலும்.
- மனைவியை இழந்தால் எந்த அடையாள மாற்றங்களும் கிடையாது
- மனைவியையும் பிள்ளைகளையும் எப்படியும் நடத்தலாம். யாரும் தலையிட முடியாது. பெண்ணைப் பெற்றவர்கள்கூடக் கேள்வி கேட்கக்கூடாது.

**விளைவுகள்** -

ஆணுக்கும் பெண்ணுக்கும் இப்படிப்பட்ட மாறுபாடான உரிமைகளையும், கடமைகளையும் சொல்லி வைத்து விட்டது சமூகம். இதனால் ஆண்களுக்கு ஒரு வாழ்க்கையும் பெண்களுக்கு வேறுவிதமான வாழ்க்கையும் அமைந்துவிட்டது. இதனால் காலப் போக்கில்,

- பெண்கள் அதிகம் படிக்கவில்லை.
- அழகான பெண்களுக்கு மட்டுமே உடனே திருமணம் நடந்தது. இதனால் பெண்கள் அழகாக இருப்பதில் முக்கியத்துவம் காட்டத் தொடங்கினார்கள். பெண்கள் அழகாக இருப்பதில் பெருமை கொள்ள ஆரம்பித்தார்கள்.
- பெண்கள் உடல் வலிமை குறைவாகவே இருந்தார்கள். எல்லாவற்றுக்கும் கணவனையோ, பெற்றோரையோ, பிள்ளைகளையோ எதிர்பார்த்தார்கள்.
- அதிக உலக அனுபவம் இன்றி இருந்தார்கள்.
- தங்களால் எதுவும் சாதிக்க முடியாது என்று நம்பினார்கள்.
- தங்கள் மீது இழைக்கப்படும் அநீதிகளைப் பொறுத்துப் போகப் பழகிக் கொண்டார்கள்.
- சகிப்புத் தன்மையை வளர்த்துக் கொண்டார்கள்.
- கணவனையும் குடும்பத்தைச் சுற்றியுமே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள்.
- தங்கள் நலனை, சொந்த விருப்பங்களைத் தியாகம் செய்தார்கள். இப்படியெல்லாம் இருப்பது பற்றிப் பெருமை கொண்டார்கள்.

ஆனால் கடந்த ஒன்றிரெண்டு தலைமுறைகளாகக் காட்சிகள் மாறியுள்ளன. உயர்படிப்பும் வேலைக்குப் போவதும் பெண்களுக்குச் சாத்தியமானதால் பல முக்கிய மாற்றங்கள் வந்திருக்கின்றன.

• பெண்கள் கல்வி அறிவு அதிகமாகியிருக்கிறது

• வேலைகளுக்குப் போய் சம்பாத்திக்கிறவர்கள் எண்ணிக்கை பலமடங்கு அதிகரித்திருக்கிறது. சில வீடுகளில் தந்தை மற்றும் சகோதரர்களைவிட அதிகமாக சில பெண்கள் சம்பாதிக்கிறார்கள்.

• நன்றாகத் தேவையான அளவு சாப்பிடுகிறார்கள். உடல் வலிமையும் பெற்றிருக்கிறார்கள்.

• வெளியிடங்களுக்குப் போவதாலும், ஊடகங்கள் மூலமாகவும் உலக அனுபவம் பெற்று, அச்சத்திலிருந்து விடுபட்டிருக்கிறார்கள்.

• அமைப்புகளும் அரசின் சட்டங்களும் பெண்களுக்கு ஏதுவாக இருக்கிறது. இதனால் பெண்களுக்கு புதுத்துணிவு கிடைத்திருக்கிறது.

• தகுதி அடிப்படையில் மட்டுமே ஆணை மதிப்பது என்கிற நிலைபாடு எடுத்திருக்கிறார்கள்.

• ஆண் செய்பவற்றை தாங்களும் செய்து பார்க்க வேண்டும் என்கிற ஆவல் வந்திருக்கிறது

• அடிமையாக இருக்க முடியாது என்கிற மனமாற்றம் வந்துவிட்டது.

மாற்றங்கள் என்பது அனைத்து இடங்களிலும் ஒரு குறிப்பிட்ட நாளில் வந்து விடுவதில்லை. சிலர் பத்தாவது படியில் ஏறிக்கொண்டிருக்கிறபோது, வேறு சிலர் இரண்டாம் மூன்றாம் படிகளிலேயே இருப்பதும் உண்டு. அதேசமயம், கணவனே கண்கண்ட தெய்வமாக நினைப்பவர்களும் இக்காலத்தில் இருக்கவே செய்கிறார்கள்.

25, 30 வயதுள்ள இக்காலப் பெண்கள் சகலவிதங்களிலும் மேன்மை பெற்றிருக்கிறார்கள். முந்தைய தலைமுறையினரைப் போல கட்டுப்பட்டியான வாழ்க்கை அவர்களுக்குக் கிடையாது. நல்ல கல்வி, நிறைவான வேலை, பாதுகாப்புச் சட்டங்கள் (பெண் போலீஸ் உள்பட) எல்லாமே பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளன. சொந்த வீட்டில் கிடைத்த சௌகரியங்களைப் புகுந்த வீட்டிலும் எதிர்பார்க்கிறார்கள். கிடைக்காவிட்டால் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள்.

பெண்ணின் உணர்வுகளை, உரிமைகளை ஆணும் புரிந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் இல்லறத்தில் இரண்டு மனங்களும் சங்கமிக்கும்.

இரண்டாவது அத்தியாயத்தில் பார்த்த எத்தனையோ புதுமணத் தம்பதிகள். கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்து போக... முதல் அத்தியாயத்தில் பார்த்த கங்காரு இல்லத்தின் ராஜாவும் பர்வீனும் அவர்களுக்குப் பிறந்திருக்கும் இரண்டு மகன்கள் போக, மேலும் எத்தனை நபர்களுக்கு உறுதுணையாகச் சேர்ந்து வாழ்கிறார்கள், அவர்களுக்காக உழைக்கிறார்கள்! அதற்கு என்ன காரணம்?

அவர்கள் இருவர் மட்டுமில்லை. அவர்களைப் போலவே இன்னும் பலர் இருக்கிறார்கள். திருமணம் செய்துகொண்டுவிட்டு நிம்மதியாக, மகிழ்ச்சியாக, நிறைவாக வாழ்பவர்கள்.

செங்கோட்டைக்கு அருகில் அமைந்திருக்கும் ஆயிக்குடி கிராமத்தினைச்

சேர்ந்த ராமகிருஷ்ணன். கப்பற்படையில் சேர விரும்பி, பயிற்சித் தேர்வில் விபத்துக்குள்ளாகி அவருடைய தலை தவிர, வேறு எந்த உறுப்பையும் அசைக்கக்கூட முடியாத நிலைக்குப் போய்விட்டவர். பல மாதத் தொடர் சிகிச்சைக்குப் பின்பும் கூட, சக்கர நாற்காலியில் இருந்துகொண்டு வாழ்க்கையை நடத்த வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டார்.

28 வயதிலேயே அடுத்தவர் உதவியில்லாமல், பேசுவது, பார்ப்பது, கேட்பது, உண்பது தவிர வேறு எதையும் அவரால் செய்ய முடியாது என்கிற நிலையிலும், அசராமல் ஒரு காப்பகமும் பள்ளியும் தொடங்கி அங்கே உடல் ஊனமுள்ள பிள்ளைகளுக்கு அடைக்கலமும் கல்வியறிவும் கொடுத்தவர்.

அப்படிபட்ட ராமகிருஷ்ணன் மீது அன்புகொண்டு, அவருக்கு உதவுவதற்காகவே, அவரை திருமணம் செய்து கொண்டவர் ஒருவர் இருக்கிறார்.

கணவர்களை வழிநடத்துவதில் பெண்களும் பங்குவகிக்கிறார்கள்.

பெப்சிகோ என்கிற மாபெரும் கோலா நிறுவனத்தின், அமெரிக்கா கார்ப்பரேட்டின், தலைமை நிர்வாகியாக இந்திரா நூயி. இந்திரா அவர் பெயர். சென்னை கிறிஸ்துவ கல்லூரியில் படித்தவர். அவரை இன்று பலருக்கும் தெரியும். பிரபலமானவர். மிக அதிகமான சம்பளம் வாங்கும் கார்ப்பரேட் தலைமை நிர்வாகி அவர்தான்.

அவர் பெயருக்கு அடுத்து ஒட்டிக்கொண்டிருக்கும் பெயர் நூயி. அவரது கணவர் பெயர். சந்தோஷமாக மனைவியின் பெருமைகளை ஏற்றுக்கொண்டு, ரசித்துக்கொண்டு இருப்பவர்.

கிரண்பேடி ஐ.பி.எஸ். ஆபீசர். முன்மாதிரிப் பெண்மணிகளில் ஒருவர். அவரது கணவர்? கிரண் பேடியைக் கூட விடுங்கள். இந்திராகாந்தியின் கணவன் பெயர் என்ன என்று எவ்வளவு பேருக்குத் தெரியும்? பெரோஸ் காந்திதான். 17 ஆண்டுகள் பாரதப் பிரதமராக இருந்தவரின் கணவர்.

இந்தியாவில் மட்டுமல்ல. சமீபத்தில் இறந்த பெனாசிர் புட்டோவின் கணவர், பெனாசிர் வாழ்ந்த காலத்தில் அவரளவு பிரபலமோ செல்வாக்கோ கொண்டிருந்தாரா? இறந்த பிறகுதான் தேர்தலில் நின்றார். பெனாசிரின் கணவர் என்கிற அனுதாபத்தாலேயே அதிபராகத் தேர்வு செய்யப்பட்டார்.

இதில் ஆணில்லை, பெண்ணில்லை. இது ஆளுமை சார்ந்த விஷயம் இது. தம்பதியரில் எவரோ ஒருவர் கூடுதல் வாய்ப்புப் பெற்றவர். அடுத்தவர் அனுசரித்துப் போகிறார்.

பில்கேட்ஸ் பவுண்டேஷனின் தலைவி, பில்கேட்சின் மனைவிதான். ராஜாவுக்கு பர்வீன் போல, பில்கேட்சுக்கு அவர் மனைவி. இந்தியாவின் மிகப்பெரும் பணக்காரர், அனில் அம்பானி. அவர் மனைவி டினா முனிம் ஒரு முன்னாள் நடிகை. தற்போது ஓவியங்கள், கலைப்பொருட்கள் தொடர்பாக வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்.

2008 அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசு கட்சி சார்பாகப் போட்டியிட்டவர் ஹிலாரி கிளிண்டன். முன்பு வேண்டுமானால் கிளிண்டன். தற்போது ஹிலாரி கிளிண்டன்தான் பிரபல்யம். அவருக்குத்தான் மதிப்பு. அவர் பின்னால் வருபவராக மட்டுமே இருக்கிறார்

பில்கிளிண்டன். எந்தவிதச் சங்கோஜமோ, தயக்கமோ, தாழ்வு மனப்பான்மையோ பின் கிளிண்டனிடம் இல்லை.

இதுவே பத்து ஆண்டுகளுக்கு முன்பு? பில் கிளிண்டன்தான் அமெரிக்க அதிபர். கவர்ச்சிமிக்க தலைவர். அப்போது ஹிலாரி அவருடைய மனைவி மட்டுமே. வேறு தனிப்பட்ட புகழ் கிடையாது. தற்சமயம் நிலைமை தலைகீழ் இல்லையா? இரண்டு நிலைகளையும், இருவரும் ஏற்றுக்கொண்டு சந்தோஷமாக இருக்கிறார்கள்.

அதேதான். நீயா நானா? என்று ஆரம்பித்தால் என்றுமே பிரச்னைதான். குடும்பமும் விதிவிலக்கல்ல. ஒத்துப்போனவர்கள் வெற்றிகரமாக வாழ்கிறார்கள்.

> ‘நான் பிறந்த நாட்டில்
>
> எந்த நாடு பெரியது?
>
> இங்கு பெண்ணும் ஆணும்
>
> வாழும் வாழ்க்கை இனியது’

என்று ஒரு திரைப்படப் பாடல் கேட்டிருக்கலாம்.

இன்று நேற்றல்ல... ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் போற்றிப் பேணப்பட்டு வருகிற அமைப்பு குடும்பம். குடும்பத்தின் ஆதார ஸ்ருதி ஆணும் பெண்ணுமாக இணைந்து வாழ்வது. மணம் புரிந்து வாழ்வது. குழந்தைகள் பெற்று வளர்த்து, பார்த்து ஆனந்தப்பட்டு வாழ்வது. ஆணோ, பெண்ணோ, தனி மனிதராக வாழ்வதில் அர்த்தம் இல்லை என்பதை இல்லறம் அல்லது நல்லறம் என்று அவ்வை எளிமையாகச் சொன்னார்.

நல்லதையும் பார்த்தோம், கெட்டதையும் பார்த்தோம். ஆக, திருமணம் செய்துகொண்டு புரிந்துணர்வோடு, மகிழ்ச்சியாக வாழ்ப்பவர்களும் இருக்கிறார்கள், வாழ்க்கையையே சிக்கலாக்கிக்கொண்டு ‘இனி வாழ்வதே அவசியமா?’ என்கிற கேள்விக்குறியோடு போராடுபவர்களும் இருக்கிறார்கள். இரண்டு வகையினரையும் பார்த்தாகிவிட்டது.

# 4. திருமணம் அவசியம்தானா?

நன்றாக வாழும் தம்பதியர் பற்றித் தெரிந்துகொண்டாலும், தாங்களே பார்த்திருந்தாலும் கூட சிலருக்கு, சிரமப்படும் சிலர்தான் அதிகம் நினைவுக்கு வருவார்கள். அதனால் அந்த உதாரணங்களைப் பெரியதாக எடுத்துக்கொண்டு,' திருமணம் செய்தால்தானே இத்தனைப் பிரச்னைகள். பேசாமல் காலம் முழுக்கப் பிரம்மச்சாரியாகவே (அல்லது கன்னியாகவே) இருந்துவிடலாமே!' என்று நினைக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

அது இயற்கைக்கு முரணானது. மனிதகுலம் தழைத்தோங்க, ஆணும் பெண்ணும் மணம் முடித்து அடுத்த தலைமுறையினரை இந்த உலகுக்கு அளித்திடவேண்டும்.

'சமுதாயத்துக்குச் சரி. நான் ஒருவன்/ள் திருமணம் செய்துகொள்ளாவிட்டால் என்ன மனித குலம் அழிந்தா போய்விடும்! நான் ஏன் திருமணம் செய்துகொள்ளவேண்டும்? அதனால் எனக்கு என்ன பலன்?' என்று சிலர் கேட்கலாம்.

**1. உடல் தேவை**

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உடல் தேவை முக்கியமானது. 'தந்தை தன்னையே, தாய் தொடாவிடில், நீயும் இல்லையே, நானும் இல்லையே 'என்பார் கண்ணதாசன். ஆண் பெண் உறவினால் தான் ஆதாம் ஏவாள் காலத்தில் இருந்து இன்று வரை தொடர்பு அறுந்துவிடாமல் ஜீவித்து வருகிறது மனித இனம். ஆக பாலுணர்ச்சி என்பது இயற்கையானது.

படைப்பிலேயே அது இருக்கிறது. ஆண், பெண் வித்தியாசங்கள், பாலுணர்ச்சி தேவை தவறானதல்ல. அதை நிறைவு செய்து கொள்வது பாவமோ, குற்றமோ அல்ல.

மாறாக, அதை மறுக்க, அடக்க முயற்சிக்கும்போதுதான் சிக்கல்கள் வருகின்றன. உடல் பசியினை நிறைவு செய்து கொள்வது அடிப்படையான விஷயமாகும். விலங்குகளுக்கும் இந்தத் தேவை இருக்கிறது. அவை, சுய கட்டுபாடுகள் இன்றி, விருப்பப்படி இருக்கின்றன. ஆனால் நாம் முறைப்படுத்தப்பட்ட சமூக அமைப்புக்கு வந்துவிட்டபடியால், சமூக சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டுப் பாலுணர்ச்சியை நிறைவேற்றிக்கொள்கிறோம்.

யாரும் யாருடன் வேண்டுமானாலும் பாலியல் தொடர்பு வைத்துக்கொள்ளலாம் என்கிற நிலை இருக்குமானால் சமூகத்தில் குற்றங்கள் மலிந்துவிடும். இதைத் தடுத்துப் பாலுணர்ச்சியையும் பாலியல் தொடர்புகளையும் முறைப்படுத்துவதற்காகவே திருமணம் என்கிற அமைப்பும் வாழ்க்கை முறையும் தொடங்கப்பட்டது.

எனக்குத் தெரிந்து நாற்பது ஆண்டுகளுக்கு முன்பெல்லாம், ஒரு பெண்ணை அவ்வளவு சுலபமாகக் கைகுலுக்கக் கூட முடியாது. பேருந்திலும் திரையரங்கிலும் இன்று சர்வசாதாரணமாக அமர்வதுபோல அக்காலத்தில் முடியாது. வயதுப் பெண்களால் உறவினர்கள் தவிர பிற பெண்களுடன் சகஜமாகப் பேச முடியாது. தாய், சகோதரிகள் தவிர வேறு எந்தப் பெண்களுடன் பேசவோ, பழகவோ ஆண்களுக்கு வாய்ப்புத் துளியும் கிடைக்காது. ஒரு பெண்ணுடன் சகஜமாகச் சிரித்துப் பேசவேண்டும் என்றால் அவன் திருமணம் வரை காத்திருக்க வேண்டும். அதனால்தான் திருமணத்தின் மீது அடங்காத ஆர்வமும் எதிர்பார்ப்பும் இருபாலருக்குமே இருந்தது.

### 2. வாழ்க்கைத் துணை சேர்ப்பு

வாழ்க்கை என்பது நீளமானது. பள்ளி, கல்லூரி காலம் வரை வாழ்க்கை என்பது பெற்றோர், நண்பர்களுடன் ஓடிவிடுகிறது. அதற்குப் பிறகு? படிப்பு, கலை, தொழில், வேலை வியாபாரம், பணம் போன்ற ஏதோ ஒன்றில் ஆர்வம் ஏற்பட்டு அவை நம்மை வழிநடத்திச் செல்கின்றன. ஆனால் அவற்றையெல்லாம் தனியாக அனுபவித்தால் வாழ்க்கையில் இன்பமே இருக்காது. உடன் ஒரு துணை இருந்தால் மட்டுமே வாழ்க்கை தித்திப்பாக இருக்கும்.

எப்படி என்று பார்த்துவிடலாம்.

நட்புக்கும் வாழ்க்கைத் துணைக்கும் ஒற்றுமைகளும் வித்தியாசங்களும் உண்டு.

**ஒற்றுமைகள்**

**கணவன் / மனைவி மற்றும் நண்பர் / தோழி**

1. பரஸ்பரம் அன்பு பாராட்டிக்கொள்ள முடியும்

2. விட்டுக்கொடுத்துப் போகமுடியும்

3. ஆபத்தான காலங்களில் உறுதுணையாக இருக்க முடியும்

4. ஒருவருக்கு ஒருவர் பண உதவி முதல் எல்லாவகையிலும் உதவ முடியும்.

**வித்தியாசங்கள்**

| **வாழ்க்கைத் துணை** | **நண்பன் / தோழி** |
|---|---|
| 5. நமக்கும் அவருக்கும் ஒரே குடும்பம் | வெவ்வேறு குடும்பங்கள் |
| 6. ஒரே குடும்பம் என்பதால், ஒரே தேவைகள் | மாறுபடும் தேவைகள் |
| 7. நட்பு தாண்டி, உடல் கலப்பும் உண்டு. அதனால் எல்லாவிதமான உணர்வு தேவைகளையும் தடையின்றி பகிர முடியும் | தனித்தனி நபர்கள். எல்லைகள் உண்டு |
| 8. இருவருக்கும் பிறக்கும் | வேறு நபர்களுடன் |

| | |
|---|---|
| குழந்தைகள், இதனால் ஏற்படும் அறுக்க முடியாத உறவு | இணைந்து பெறும் பிள்ளைகள் |
| 9. நல்லது கெட்டது இரண்டிலும் முழு பங்கு | ஓரளவு மட்டுமே ஒருவர் மற்றவருக்கு உதவ முடியும். |
| 10. பொருளாதார லாப நட்டங்கள், ஒரே கணக்கு | வெவ்வேறு கணக்குகள் தான் |
| 11. ஒருவர் மற்றொருவருக்கே சொந்தம். முழுவதும் சொந்தம். இதனால் ஏற்படும் பரஸ்பர நம்பிக்கையும் உதவ வேண்டிய பொறுப்பும் கட்டாயம் | ஒரே நேரத்தில் பலருடனும் நட்பு பாராட்ட முடியும். பாராட்டவும் செய்வார்கள் |
| 12. வெளிப்படைத்தன்மை சாத்தியம் எதையும் தெரிவிக்கலாம். ஒளிவு மறைவு தேவையில்லை. | ஓரளவுக்கு மட்டுமே சாத்தியம். |

இந்தியாவில் இருந்து பல ஆயிரம் கி.மீட்டர் தூரத்தில் இருக்கும் இத்தாலியில் பிறந்தவர் சோனியா காந்தி. இரண்டு தேசங்களுக்கும் இடையே இருக்கும் பழக்க வழக்கம் மற்றும் கலாச்சார வேறுபாடுகள் அதைவிடக் கூட அதிகமிருக்கலாம்.

ராஜீவ் காந்தியைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார் அவர். ராகுல், பிரியங்கா என்ற இரண்டு பிள்ளைகளைப் பெற்றவர். ராஜீவிற்கு சோனியாவும், சோனியாவுக்கு ராஜீவ் காந்தியும் வாழ்க்கைத் துணையானார்கள். ராஜீவ் மறைந்துவிட்டார். இதனால் சோனியா இத்தாலிக்கு ஓடிவிடவில்லை. சேலை உடுத்துவதில் மட்டுமல்ல. எல்லா விதத்திலும் இந்திய பெண்மணியாக வாழ்ந்து வருகிறார். கணவரின் கனவுகளை நிறைவேற்ற இந்தியாவிலேயே தங்கி அரசியல்வாதியாகிப் புதுவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார். திருமணம் செய்த வேலை இது.

**3. பொருளாதார பார்ட்னர்**

தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறுதானே. அப்பா பிள்ளைகளுக்குள் தகராறு, சகோதரர்களுக்குள் பிணக்கு, பங்காளிகள் சண்டை என்று எல்லா உறவுகளிலும் கருத்து வேறுபாடுகள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன.

அதேசமயம் கணவன் - மனைவி இருவரும் சம்பாதிக்கும்போது அங்கு ஓர் ஒற்றுமை நிகழ்கிறது. பகிர்தல் என்கிற ஒரு விஷயம் அமல்படுத்தப்படுகிறது. என் பணம், உன் பணம் என்பது அல்ல. இது நம் பணம்.

இன்போசிஸ் நாராயணமூர்த்தியும் அவரது மனையும் இதற்குப் பொருத்தமான உதாரணங்கள்.

நண்பர்கள் நால்வரும் சேர்ந்து தத்தம் நிறுவனங்களில் இருந்து விலக முடிவு செய்கிறார்கள். சொந்தமாகப் பணம் போட்டு, மென்பொருள் நிறுவனம் தொடங்கத் திட்டம். நாராயணமூர்த்தியிடம் போதிய பணம் இல்லை.

தன் தங்க வளையல்களைக் கழற்றித் தருகிறார் சுதாமூர்த்தி. அந்தச் சில தங்க வளையல்கள் நாராயணமூர்த்தி குடும்பத்துக்கு, தங்கமல்ல வைரங்களாகக் கொட்டோ கொட்டென்று பின்னர் கொட்டிக் கொடுக்கிறது.

ஆனால் ஆரம்பத்தில் சுதா மூர்த்திக்கு இது எதுவும் தெரியாது. தன் கணவருக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு உதவ முன்வந்தார் அவர். அதற்கு மேல் அவர் வேறு எதுவும் சிந்தித்திருக்க மாட்டார்.

முடிவுகள் எடுப்பதற்கு Two heads are better than one என்பார்கள். ஒருவரே யோசிக்காமல், மற்றவரையும் கலந்து ஆலோசித்துக் கொண்டால், தெளிவு பிறக்கும்.

கணவனும் மனைவியும் சேர்ந்து சம்பாதிக்கலாம். ஒருவர் சம்பாதிக்கலாம், ஒருவர் குடும்பத்தைப் பார்த்துக் கொள்ளலாம். இருவரும் சம்பாதிக்க விரும்பும்போது ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கலாம். குடும்பத்தின் மகத்துவமே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதில்தான் இருக்கிறது.

### 4. உணர்வுத் தோழமை

கோழியின் சிறகுகளுக்குள் குஞ்சுகள் அடைக்கலம் புகும். சிங்கம் புலியாகவே இருந்தாலும், குட்டிகள் வந்து மடியில் முட்டும், பால் குடிக்கும். நக்கி விளையாடும். தாய் நாயின் கோபத்தின் உச்சத்தினைப் பார்க்க வேண்டும் என்றால், அதற்குப் பிறந்த குட்டிகளைத் தொட முயன்றால் போதும். ஈன்ற நாய்க்குக் கொலைவெறி வந்துவிடும்.

மனிதன் உணர்ச்சிக் கலவைகளால் உருவானவன்.

கோபத்தை எவரிடமும் காட்டலாம். வருத்தத்தைத் தெரிவிக்கலாம். ஏமாற்றங்களை, வஞ்சிக்கப்பட்டதை, கிடைத்த அடியை, பெற்ற வலியை, அனுபவிக்கும் சோகத்தை, துக்கத்தை எல்லோரிடமும் தெரிவிக்க முடியாது. தெரிவிக்காவிட்டால் மனம் மேலும் வலிக்கும். நண்பர்களிடம் பேசலாம். ஆனால் எல்லா நேரத்திலும் அவர்களை நம்பமுடியுமா?

ஒரே வழி கணவன் / மனைவியிடம் பேசுவதுதான். உணர்வுத் தோழமை என்பது நமக்கு முழுமையாகக் கிடைப்பது நம்முடைய லைஃப் பார்ட்னர்களிடம்தான்.

### 5. பரஸ்பரம் உதவி

திருச்சி பெல் நிறுவனத்தில் பணியாற்றியவர் மேஜர் பொன்னுரத்தினம். அவருடைய மனைவி சாந்தி ஓர் ஆசிரியை. ஒரு தவறான சிகிச்சையால் அவருடைய முழங்கால் பிரச்னையானது. கிட்டத்தட்ட 15 ஆண்டுகளும் மனைவியை வீட்டு வாசலில் இருந்து வகுப்பறை வாசல் வரை தினசரி கொண்டுவிட்டு அழைத்து வந்தவர் பொன்னுரத்தினம். வீட்டிற்கு

வெளியிலேயே இப்படியென்றால், உள்ளே எவ்வளவு உதவிகள் தேவைப்பட்டிருக்கும். செய்திருப்பார் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

சென்னை அடையாறில் வசித்துவரும் 75 வயது பெரியவர் ஒருவர், மனைவியை இழந்தது அவரது 55 வது வயதில். 20 வருடங்களாக மனைவியில்லாமல் வாழ்ந்து வருகிறார். அவர் அடிக்கடி தெரிவிக்கும் ஆதங்கங்கள்... 'ராத்திரியில் முதுகுவலிச்சா தைலம் தேய்க்கக் கூட உடன் ஒரு ஆள் இல்லையே. தனியாளா சிரமப்படுகிறேன்'

ஆணோ, பெண்ணோ, கணவன் மனைவி தவிர எவரால் வேறு எவரிடமும் கூச்சமின்றி உதவிகள் கேட்க முடியும். விபத்து, வியாதிகள் காரணமாக, படுக்கையிலேயே இருக்கும் நிலைக்குத் தள்ளப்படுபவர்களை யோசித்துப் பாருங்கள்.

வயோதிகக் காலத்தில்தான் வாலிபக் காலத்தைவிடக் கூடுதலாக வாழ்க்கைத் துணை தேவைப்படுவார். பிள்ளைகள் உதவலாம். ஆனால் கணவன் மனைவி ஆகாமல் பிள்ளைகள் எப்படி சாத்தியம்!

**6. நல்ல நட்பு**

கணவன் மனைவியாகவே இருந்தாலும் என்ன? சிலர் நல்ல நண்பர்கள் போலவே இருப்பார்கள். வெறும் உடல் இச்சைகள், உதவிகள், பணம் இல்லை. ஒருவரை ஒருவர் மதிக்கும் இரண்டு மனிதர்களாக நடந்து கொள்ள முடியும். நடந்து கொள்பவர்கள் எவ்வளவோ நபர்கள் இருக்கிறார்கள்.

ஆரோக்கியமான கேலி, கிண்டல், உரையாடல்கள், கருத்துப் பரிமாறல்கள் எல்லாமே சாத்தியம். உன் விருப்பப்படி நீ செய். என் விருப்பப்படி நான் செய்கிறேன். இரண்டும் முக்கியம். தவிர நாம் இருவருமே, சிலவற்றை நம் பொது நன்மை கருதிச் செய்ய மாட்டோம். வேறு சிலவற்றை அதே பொது நன்மை கருதி, நம்மில் எவரோ ஒருவருக்கு விருப்பமில்லாவிட்டாலும் செய்வோம். இதுதான் நண்பர்கள் செய்து கொண்ட திருமண ஒப்பந்தம். எழுதப்படாத மீறக் கூடாத ஒப்பந்தம்.

என்ன ஆனாலும் தனியாக வாழ்வது சிரமம். எவருடனாவது சேர்ந்துதான் வாழவேண்டும். யாருடன் சேர்ந்து வாழ்வது?

பெற்றவர்கள் வாழ்க்கை முழுக்க நம்முடன் ஓடிவர முடியாது. பணி, வியாபாரம் செய்யும் இடங்கள் மாறலாம். தவிர ஒவ்வொரு பிள்ளையுடனும் அவர்களால் இருக்க முடியாது. மேலும் அவர்களுக்கு என்று தனி வாழ்க்கை உண்டே.

சகோதர சகோதரிகள் பற்றிய பேச்சே வேண்டாம். நம்மைப் போலவே தனித்தனியாக வாழும் உரிமையும் சுதந்திரமும் உடையவர்கள் அவர்கள்.

நண்பர்களும் தனி மனிதர்களே. அவர்களுக்கும் தனிப்பட்ட குடும்பமும் வாழ்க்கையும் உண்டு. நமக்காக முழு அர்ப்பணிப்பாக இருப்பது சாத்தியமில்லை. அப்படியே விரும்பினாலும் அதில் உடல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது.

ஆக, எப்படிப் பார்த்தாலும் ஆண்/பெண் சேர்ந்து வாழ்வதுதான் ரம்மியம். அந்த உறவு சட்டரீதியாக, மனரீதியாக ஒரு கட்டுப்பாட்டிற்குள் வருவது

திருமணம் என்கிற ஏற்பாட்டிலேதான். அதனால்தான். இத்தனை ஆயிரம் ஆண்டுகளாகத் திருமணம் என்கிற அமைப்பு வெற்றிகரமாக இருந்து வருகிறது. அது தொடரட்டும். தனி மனித நன்மை கருதி மட்டுமல்ல, சமூக நன்மை கருதியும்தான்.

**7. வாரிசு விருத்தி**

என் பிள்ளை என்கிற போது என்ன ஒரு சந்தோஷம் வரும் என்பது பிள்ளை பெற்ற அனைவருக்கும் தெரியும். அதைவிட அது இல்லையே என்கிற வருத்தம் பிள்ளைப் பேறு வாய்ப்பு இல்லாதவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

பேர் சொல்ல ஒரு பிள்ளை என்பார்கள். இது ஒரு தொடர்பு சங்கிலி. பாரம்பரிய பெருமைகள் வேண்டுமானால், இந்தச் சங்கிலி அறுபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதனால் தான் பிள்ளை பெறுவதை, பிள்ளை வரம் என்கிறார்கள். அதற்காகத் தங்களை வருத்திக்கொண்டு, எத்தனையோ விரதங்கள் நோன்புகள் இருக்கிறார்கள். கடுமையான பிரார்த்தனைகள் எல்லாம் செய்துகொள்கிறார்கள். மருத்துவர்களை அணுகு கிறார்கள். நம் சொத்துக்களைப் பராமரிக்க, நம் ஆசைகளை நிறைவேற்ற, நம் பேர் சொல்ல, நம்மைப்போல ஒரு பிள்ளை.

**8.சமுதாய நலன்.**

பொறுப்பில்லாமல் சுற்றி வருபவர்களைத் திருமணத்துக்குப் பிறகு மாறிவிடுவார் என்பார்கள். திருமணம் என்பது பொறுப்பு. தனக்காக மட்டுமல்ல தன் மனைவி பிள்ளைகளுக்காகவே பலர் பொறுப்பாக நடந்துகொள்கிறார்கள். சொற்ப எண்ணுகையில் இருப்பவர்களைத் தவிர மற்ற அனைவரும் திருமணம் செய்துகொண்டு குடும்பத்துடன் இருப்பதால்தான் சமூகத்தில் குற்றங்கள் குறைவாக உள்ளன.

தவிர பெற்றோர் இல்லாத பிள்ளைகளின் கதியினை நினைத்துப் பார்க்கவே முடியாது. முறையான திருமணங்கள் குடும்ப அமைப்புகள் இல்லாமல் போனால், பிறக்கிற குழந்தைகளுக்கு யார் தகப்பன் என்பது தெரியாது. அவர்களின் கதியை நினைத்துப்பார்க்கவே முடியாது. அவர்கள் குற்றங்கள் செய்யலாம். அவர்களுக்குச் சமுதாயத்தின் மீதே கோபம் இருக்கலாம். அந்தத் தார்மீக கோபமே அநியாயம் என்று சொல்லிவிட முடியாது. பாதிக்கப்பட்டவனின் கோபம். அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகுதியானால்? அந்த சமூகம் சீரழியும்.

ஆக, திருமணம் என்பது அவசியமானது. தவிர்க்க கூடாதது.

**ஆயத்தம் ஆவது:**

திருமணம் என்பது ஒருவருடைய வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டுவந்துவிடும். யாராலும் திருமணத்துக்கு முன்பு வாழ்ந்த வாழ்க்கையையே திருமணத்துக்குப் பிறகும் வாழமுடியாது.

திருமணத்துக்குப் பிறகு, தனிப்பட்ட விருப்பங்கள் சௌகரியங்கள் போன்றவற்றில் கொஞ்சம் விட்டுக்கொடுக்க வேண்டி வரும். வசதிகள் மட்டுமல்ல, பொறுப்புகளும் அதிகரிக்கும். சேர்த்துக் கொள்ளும் வாழ்க்கைத்துணை போக அவர்/அவள் மூலம் மேலும் பல புதிய உறவுகள் வரும். அவர்களோடும் பழக வேண்டிவரும். அனுசரித்துப்போக

வேண்டிவரும்.

ஆக திருமணம் என்பது யோசித்துச் செய்யவேண்டிய ஒரு விஷயம். ஒவ்வொரு அடியும் கவனமாக எடுத்துவைக்கவேண்டும்.

முதலில் மனத்தளவில் தயாராக வேண்டும்.'வேண்டுமானால் நட்பு பாராட்டலாம். ஒத்துவரவில்லை என்றால் ஒதுங்கிக் கொள்ளலாம்' என்பதுபோல நண்பர்களிடம் வேண்டுமானால் நடந்து கொள்ளலாம். திருமணம் செய்தவரிடம் அப்படி இருக்க முடியுமா?

திருமணம் என்பது ஒரு கமிட்மெண்ட். இன்னொருவர் நம்மோடு வந்து ஒட்டிக் கொள்கிறார். அவரையும் சேர்த்துத்தான், அவருடன் சேர்ந்துதான் நம் வாழ்க்கை. நல்லது கெட்டது, வாழ்வு தாழ்வு எல்லாவற்றையும் சேர்ந்து சமாளிக்க வேண்டியவர்கள் தம்பதியர்கள். எவர் நமக்கு ஒத்துவருவார் என்று பார்த்துத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

மனத்தளவில் ஆயத்தமாவது என்றால், தற்போது திருமணம் எனக்குத் தேவை' என்று திருமணம் செய்து கொள்ள இருப்பவர் நினைப்பது. வேண்டாவெறுப்பாக, வேறு வழியின்றிப் பிற காரணங்களுக்காகத் திருமணம் செய்து கொள்வது பிரச்னைகளில்தான் கொண்டுபோய் விடும்.

சென்னை ராயப்பேட்டையில் கிளினிக் வைத்திருக்கும் ஹோமியோபதி மருத்துவர் ஒருவரிடம் முருகன் என்று ஓர் இளைஞர் கார் ஓட்டுனராக வேலை செய்கிறார். அந்த முருகன் வெறும் ஓட்டுனர் மட்டுமல்ல... மருத்துவரின் உதவியாளரும்கூட. மருத்துவர் சொல்லிக் கொடுத்தது போலவே, மருந்துகளை நோயாளிகளுக்கு சீட்டைப் படித்து பார்த்து எடுத்துக் கொடுப்பார்.

மூன்று வருடங்களாக ஒழுங்காக வேலை பார்த்து வந்த அவர், இப்போதெல்லாம் வேலைக்குச் சரியாக வருவதில்லை. வந்தாலும், அவரால் சரியாக வேலை செய்ய முடியவில்லை என்றார் மருத்துவர். காரணம் என்ன என்று கேட்டதற்கு, முருகனுக்குத் திருமணம் நடந்ததுதான் காரணம் என்று அதிர்ச்சி கொடுத்தார்.

முருகனுக்குச் சொந்த ஊர் தஞ்சாவூர்ப் பக்கம். திருமணம் முடிந்து விட்டது. ஆனாலும் முருகன் இன்னமும் சென்னையில் தனியாகத்தான் இருக்கிறார். அதனால்தான் பிரச்னை. மனைவி பக்கம் பிரச்னையில்லை. என்னைச் சீக்கிரம் அழைத்துப் போங்கள் என்றுதான் சொல்கிறார். ஆனால் முருகன்தான் தள்ளித் தள்ளிப் போடுகிறார்.

முருகனுடைய மாதச் சம்பளம் 7000 ரூபாய். பேட்டா போன்ற உபரிகளைச் சேர்த்தாலும் எட்டாயிரம்தான். அவர் வரைக்கும் அதுபோதும். அவர் வசிப்பது ஒரு மேன்ஷனில். மனைவியை அழைத்து வருவதாக இருந்தால், சென்னையில் வீடு வாடகைக்குப் பிடிக்க வேண்டும். இரண்டு பேர் சாப்பிட வேண்டும். பின்பு குழந்தைகள் பிறந்தால் முருகனின் பாடு திண்டாட்டம்தான். தன்னால் இவ்வளவு பெரிய செலவைச் சமாளிக்கமுடியாது என்று நினைக்கிறார் முருகன்.

இப்போது அவர் நினைப்பது சரி என்றே வைத்துக் கொள்வோம். இதை ஏன் அவர் முன்கூட்டியே யோசிக்கவில்லை என்று கேட்கத் தோன்றுமே. சரியான கேள்விதான். முருகனும் யோசித்தார், தயங்கினார். ஆனால் அவரால் தவிர்க்க முடியவில்லை. காரணம் அவருடைய அப்பா.

முருகனுக்கு வயது 23தான். அப்பா அதட்டியதால் வேறு வழியின்றி ஒப்புக்கொண்டார்.

விளைவு? தலைவலி, மன அழுத்தம், அதனால் வேலையில் நிகழும் தவறுகள்.

பெற்றோரின் கட்டாயத்துக்காக வேறு எதை வேண்டுமானாலும் செய்யலாம், திருமணம் மட்டும் செய்யக் கூடாது. அவர்களா கூட இருந்து வாழப் போகிறார்கள்? ஆண்களுக்கு மட்டுமல்ல, பெண்களுக்கும் இதே ஆலோசனைதான்.

ஓரளவுதான் பெற்றோர் உடன் வருவார்கள். மீத தூரத்தை நாம்தான் கடக்க வேண்டும். எல்லா நேரமும் பெற்றோர் உடனிருக்க மாட்டார்கள். இதில் தெளிவு வேண்டும்.

பெற்றவர்கள்தான் என்றில்லை. சில வீடுகளில் தாய்மாமாக்கள், சித்தப்பாக்கள், பெரியப்பாக்கள், செல்வாக்கு உள்ளவர்கள் முடிவுகள் எடுப்பார்கள். அவர்களிடம் எடுத்துச் சொல்லலாம், விளக்கலாம்.

‘எனக்குத் திருமணம் முடிந்தால்தான் என் தங்கைகளுக்கு நடக்கும்’ என்று தியாகம் செய்வதாக நினைத்துக் கொண்டு, கடனே என்று கழுத்தை நீட்ட வேண்டாம். தியாகம் செய்ய வேறு பலவும் சரியாக இருக்கலாம். திருமணம் அதற்கானது அல்ல.

அடுத்தது வரதட்சணை.

பணம் என்பது இல்லாமல் வாழ்க்கை இல்லை. பலரும், திருமணத்தினை, பணம் பண்ணும் ஒரு வாய்ப்பாகப் பார்க்கிறார்கள் வரதட்சணை இருக்கவே இருக்கிறது. விரும்பிக் கொடுக்கும் பெற்றோரும் உண்டு. கசக்கிப் பிழியப்படும் பெற்றோரும் உண்டு

பணத்துக்காகவே திருமணம் செய்யக்கூடாது. தவிரவும் பணத்தில் ஒருவருக்கு முழுத் திருப்தி ஏற்படவே ஏற்படாது. இன்னும் வேண்டும், மேலும் மேலும் தேவை என்கிற பற்றாக்குறை உணர்வுதான் வரும்.

சொந்தம் விட்டுப்போய்விடக் கூடாது, எப்பவோ முடிவு செய்தது, சொத்து வரும், ஜோசியர் சொல்வது போன்ற காரணங்களால் பல திருமணங்கள் நடக்கின்றன. இதனால் மனப் பொருத்தம் பார்க்கப்படாமல் வேறு காரணங்களுக்காகத் திருமணம் நடப்பதால் பிற்பாடு அது பிரச்னையை உண்டுபண்ணிவிடுகிறது.

ஒரு தவளையும் எலியும் பேசிக் கொண்டனவாம். நாம் ஏன் நண்பர்களாக இருக்கக் கூடாது என்று. நண்பர்களாக இருப்பதென்று முடிவும் செய்து கொண்டனவாம்.

நட்பை எப்படி பிறருக்குக் காட்டுவது என்று யோசித்து ஒரு காரியம் செய்தன. ஒரு சணல் கயிறை எடுத்து ஒரு முனையை எலியின் காலிலும், இன்னொரு முனையைத் தவளையின் காலிலும் கட்டிக் கொண்டன.

இரண்டும் சேர்ந்து சில மணி நேரம் விளையாடின. அப்போது அந்தப் பக்கமாக ஒரு காக்காய் தாழப் பறந்து வர, அதனிடமிருந்து தப்பிப்பதற்காக, தன்னை மறந்த தவளை வழக்கம் போலச் சட்டெனப் பக்கத்தில் இருந்த குளத்திற்குள் தாவி விட்டதாம். உடன் அதன் காலோடு இணைத்துக்

கட்டப்பட்டிருந்த எலியும் தண்ணீரில் விழுந்தது. சமாளிக்க முடியாமல், மூச்சுத் திணறித் தண்ணீர் குடித்து இறந்தது. அதுவரை இப்படியும் அப்படியும் நீந்தி வந்த தவளையால் திடீரென்று நீந்த முடியவில்லை. யாரோ தன்னைப் பிடித்துத் தண்ணீரில் இருந்து தூக்குவது போல இருந்தது. தூக்கியது காகம்தான். செத்து மிதந்த எலியைத் தூக்கிய காகத்துக்கு போனசாக உடன் கிடைத்தது உயிருடன் இருந்த தவளை.

எதற்காக இந்தக் கதை என்று புரிந்திருக்கும். பொருத்தம் இல்லாத இருவரைக் கட்டிவைத்தால் இப்படித்தான் ஆகும்.

பிரம்மச்சாரியாக இருப்பது என்பது வேறு. அது ஒரு சுதந்திரமான நிலை. என்ன வேண்டுமானாலும் செய்யலாம். எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். பெற்றோர்கள் தான் ஏன், எதற்கு, எங்கே என்று கேட்கலாம். பெற்றவர்கள் என்கிற காரணத்தினால் பதில் எதுவாக இருந்தாலும் சரி, சரி என்று அனுசரித்துப் போவது மட்டுமல்ல... உதவியாகக்கூட இருப்பார்கள்.

ஆணோ, பெண்ணோ திருமணத்துக்குப் பிறகு நிலைமையில் மாற்றம் வந்தே தீரும். முன்போல இருக்கவே முடியாது. ‘மாற்றம்’ என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டி வரும். அதற்கு நாம் தயாரா? முன்பு பார்த்த ஓட்டுனர் முருகன் திருமணத்துக்குத் தயாராக இல்லை. அவருக்கு அதில் பெரிய ஈடுபாடு கிடையாது. சென்னைக்குப் பிழைக்க வந்து, செலவு போக, நாலு காசு சேர்த்துக் கொண்டிருந்தபோது வலுகட்டாயமாகத் திருமணம் செய்து வைத்து விட்டார்கள்.

திருமணம் என்பது ஒரு பொறுப்பு. ஒரு புதிய நபருக்கு நாம் பொறுப்பு. ஆகவே அதில் அவசரம் காட்டக்கூடாது.

செட்டிநாட்டுப் பக்கம், குறிப்பாக நகரத்தார் வீடுகளில் இன்னமும் மாறாமல் இருக்கும் பழக்கங்களில் இதுவும் ஒன்று. வீட்டுக்குள் வருபவர்களை அது எவராக இருந்தாலும் கட்டாயம் ‘வாங்க’ என்று வரவேற்க வேண்டும். வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் வரிசையாக வந்து, ‘வாங்க’ ‘வாங்க’ என்பது சொல்வது வழக்கம். அதேபோல வீட்டில் உள்ளவர் வெளியே போகும்போது வீட்டில் உள்ளவரிடம், போய்விட்டு வருகிறேன் என்று சொல்ல வேண்டும். சொல்லிக்கொள்ள வேண்டும். ‘வாங்க’ என்று சொல்லும் உரிமை வீட்டிற்கு உடையவர்களைச் சார்ந்தது. வீட்டுக்கு வந்த விருந்தினர் ஒருவர், அவருக்குப் பின் (சற்றுநேரம் கழித்து) அதே வீட்டிற்கு வரும் மற்றொரு விருந்தினரை, ‘வாங்க’ என்று சொல்ல முடியாது. காரணம், அது அவர் வீடில்லை. அவர் அசல். வீட்டுக்குச் சொந்தமானவர்கள்தான் ‘வாங்க’ என்று மற்றவர்களைச் சொல்லலாம்.

அதேபோல, வீட்டுக்கு உடையவர்களிடம்தான், கிளம்புபவர்கள், அதிலும் அசலார் அவசியம் ‘போய்விட்டு வருகிறேன்’ என்று சொல்லிக் கொண்டு போக வேண்டும். எவரெல்லாம் வாங்க என்று அழைத்தார்களோ அவர்களிடம் எல்லாம். அது சின்னப் பிள்ளைகளாக இருந்தாலும் கூட, ‘போய்விட்டு வருகிறேன்’ என்று சொல்லிக் கொண்டு போக வேண்டும்...

திருமணம் நடக்கும் வரை பெண், தாய் வீட்டில். அங்கு வருவோரை ‘வாங்க’ என்பார்கள். அது அவள் வீடு. அதே தினம் மாலை, திருமணம் முடிந்து, மாப்பிள்ளை வீட்டிற்குப் போய் விட்ட பிறகு, அங்கு வரும் தனது பெற்றோரை ‘அதே பெண் ‘வாங்க’ என்று அழைப்பார். அதுதான் உச்சம்.

உறவு மாறி விட்டதைப் பெற்றவர்களுக்கே சடாரென உணர்த்தும் நேரம். உணர வைக்கும் வார்த்தை.

வேறொரு வீட்டு ஆளாகி விடுகிறார் பெண். அப்படி வந்தவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும். அப்படிப் பெற்றவர்களையே அசலாக நினைத்து விட்டு, புகுந்த வீட்டைத் தன் வீடாக எண்ணிக்கொள்ளவேண்டும்.

இதுபோன்ற மாற்றங்களுக்கெல்லாம் தயாராக இருப்பவர்கள் திருமணத்துக்குத் தலையாட்டலாம். மற்றவர்கள் பொறுமையாகத்தான் வேண்டும்.

திருமணம் செய்து கொள்பவர்களுக்கு விட்டுக் கொடுத்தல், சகித்துக் கொள்ளுதல், பகிர்தல் என எத்தனையோ நற்குணங்கள் தேவைப்படும். அதற்கு நீங்கள் தயாரா?

'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'. பணம் இல்லாமல் தனி மனிதனாக ஓட்டி விடலாம். பிழைப்புத் தேடி வரும் எத்தனையோ இளைஞர்கள், சொந்த ஊர் விட்டு, ஏதோ ஒரு நகரத்துக்கு வந்து, அழுக்கு அறைகளில், பலருடன் சேர்ந்து வாழலாம். நேர்கிற எல்லா அவலங்களையும் பொறுத்துக்கொள்ளலாம்.

நல்ல பெரிய வேலைகளில், அதிலும் நிரந்தரமற்ற வேலைகளில் இருப்பவர்கள் திருமணம் செய்து கொள்ளும் முன், வருங்காலத் தேவைகள் பற்றி அவசியம் யோசிக்கத்தான் வேண்டும்.

'வரும்போது பார்த்துக் கொள்ளலாம்' என்று அசட்டுத் தைரியம் உதவாது. 'உன்னால முடிந்தது இவ்வளவுதானா?' என்று எப்போதாவது மனைவி கேட்கிற நிலை வந்தால் அதைவிட வேறு பெரிய அவமானம் வேண்டாம்.

உயர்ந்து வரும் விலைவாசி, திடீர் அவதாரங்கள் எடுக்கும் மருத்துவச் செலவுகள், போக்குவரத்து, பிற பொழுதுபோக்கு, பண்டிகைகள் என்று பணத்தேவை அதிகமாகிக்கொண்டே இருக்கும்.

மோகனசுந்தரம் என்று ஓர் இளைஞன் நான் பணிபுரிந்த ஒரு BPO நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். காதலில் விழுந்தார். அவளையே திருமணம் செய்து கொள்கிறேன் என்று அப்பா காலிலும் விழுந்தார். நகர்ந்து கொண்டார் அப்பா. 'முடியாது, வேண்டாம், மறந்து விடு. உன் அத்தை மகள் உனக்காகவே காத்திருக்கிறாள். கோயம்புத்தூரிலேயே' என்றார். காதலியை உண்மையாக நேசித்தவர் மோகனசுந்தரம்.

வீட்டை விட்டு வெளியேறினார். தனிக்குடித்தனம். மனைவியை வேலைக்கு அனுப்பவில்லை. மனைவி கர்ப்பம். எங்கே தெரியுமா அனுமதித்தார்? எழும்பூர் அரசு பொது மருத்துவமனை. பார்க்கப் போயிருந்தேன். பாவம் அந்தப் பெண்.

மோகனசுந்தரத்தின் வாழ்க்கையில் மோகனத்தைக் காணோம். முகத்தில் சுந்தரமும் இல்லை. துயரத்தை வலிய தேடிக்கொண்டார். அவசரப்பட்டதால் பொருளாதார நெருக்கடி அவரது கழுத்தைப் பிடித்தது.

திருமணத்துக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்பிருந்தே சேமிக்கத் தொடங்குங்கள். கூட்டுக் குடும்பம் என்றால் சரி. இவையெல்லாம் இருந்தும் பெற்றோர் வசதியில்லாமல் இருந்தாலும் உஷாராக இருக்கவேண்டும். திருமணத்துக்குப் பிறகு தேவைப்படும் பணம் முன்பை

விட இரட்டிப்பாகும். முன்யோசனை தேவை.

திருமணம் செய்ய எவ்வளவு நேரமாகும்? தாலி கட்ட 2 நிமிடம். காலையில் திருமணம், மாலையில் வரவேற்பு. ஒரு நாள் கேஷுவல் லீவு கூடப் போகும். இப்படி நினைக்கிற புத்திசாலிகளுக்கு, ஒரு சின்ன எச்சரிக்கை.

திருமணம் ஆனதும் நேரம் தண்ணீராகச் செலவழியும். திருமணமானதும் பேசுவார்கள், பேசுவார்கள் பேசிக்கொண்டேயிருப்பார்கள். கை கோர்த்துக் கொண்டு நடந்து கொண்டேயிருப்பார்கள். திருமணம் ஆன கையுடன், உங்கள் லட்சியப் பயணத்தை எல்லாம் தொடர முடியாது. வாழ்க்கை என்கிற புதிய பயண டிக்கெட் வாங்கி, வண்டியிலும் ஏறி உட்கார்ந்தாயிற்று. புரோகிதரும், மாமனாரும் சேர்ந்து ‘டபுள் ரைட்’ என்று விசில் ஊதி விட்டார்கள்.

புரமோஷன் வரவேண்டிய ஆண்டு, தொழிலில் போட்டி வலுத்திருக்கும் நேரம், அமெரிக்கா போகும் வாய்ப்பு வர வேண்டிய தருணம் போன்றவை இதனால் பாதிப்படையும். இது நம் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கும்.

பொது சேவைதான் முக்கியம். பிறகு பார்க்கலாம் (கவனிக்கவும். ஆகட்டும் பார்க்கலாம் இல்லை) என்று முன்னாள் தமிழக முதல்வர் காமராஜ் கடைசி வரை திருமணமே செய்து கொள்ளவில்லை. விண்வெளி ஆராய்ச்சியைத்தான் திருமணம் செய்து கொண்டார் அப்துல் கலாம். சுதந்திரன் என்ற ஒரு திண்டுக்கல்காரர் பள்ளியில் படிக்கும்போது பாடப்புத்தகம் வாங்கக் காசில்லாமல் சிரமப்பட்டார். இப்போது கனடா பக்கத்தில் 350 ஏக்கர் தீவு வாங்கியிருக்கும் பெரும் பணக்கார பிரம்மச்சாரி. வயது 65க்கு ஒன்றிரண்டு குறைவு.

எது முக்கியம், எதற்கு நேரம் தேவை என்பதைத் தெளிவாகத் தீர்மானித்துக் கொள்ளுதல் இருவருக்கும் நல்லது. பாரதி, பாரதிதாசன் போன்றவர்கள் மாபெரும் கவிகள். ஆனால் அவர்தம் குடும்பத்திற்கு நேரம் ஒதுக்காதவர்கள். அதனால் அவர்கள் குடும்பங்கள் சிரமப்பட்டன.

# 5. தேர்வு

**கா**தல் திருமணங்கள் நிறைய நடைபெறுவதை நாம் பார்த்து வருகிறோம். சரி, இதுதான் நமக்குச் சரியான துணை என்று எப்படி முடிவு செய்வது?

**தெளிவான முடிவு**

ஒன்றைப் பார்த்ததும், அதன்மேல் ஆசைப்படுவது இயற்கைதான். மனம் ஆசைப்படுவதை (ஆராயாமல்) உடனடியாக அடைய முற்படுவதற்குப் பெயர் உடனடி மனப்பான்மை (Impulsiveness).

'நல்லவரோ கெட்டவரோ, ஒத்து வருபவரோ, இல்லையோ, ஒருவரைத் திருமணம் செய்து கொண்டு விட்டால், ஆயுசுக்கும் அவர்தான். வேறு வழியேயில்லை' என்கிற நிலை மாறிவிட்டது. அது நல்லதற்கும்தான். தெரியாமல் மாட்டிக் கொண்டுவிட்ட எத்தனையோ ஆண்/பெண்களுக்கு கதவு திறந்து விடப்பட்டிருக்கிறது. ஆனாலும் இது நாணயத்தின் ஒரு பக்கம்தான்.

இப்படி ஒரு வாய்ப்பு இருப்பதாலேயே, ஆராயாமல் திருமணம் செய்துகொண்டுவிட்டு, பின் இந்த வழியைப் பயன்படுத்தவேண்டும் என்கிற அவசியமில்லை. பயன்படுத்துவதும் ஆபத்து.

மது குடிக்கலாம். புகையிலையைப் பயன்படுத்தலாம் (அனுமதிக்கப்பட்ட இடங்களில் மட்டும்). இவையெல்லாம் அனுமதிக்கப்பட்டவைதான். ஆனாலும் எல்லோரும் செய்கிறோமா?

விமானத்தில் போகிறோம். 'எமர்ஜென்சி எக்ஸிட்' என்று ஒரு கண்ணாடி கதவு வைத்திருக்கிறார்கள். உடைத்து இறங்கலாம். ஆபத்தான நேரங்களில் மட்டும்தானே! ஒரு விமானத்தின் வாழ்நாள் முழுவதும் கூட அந்த எமர்ஜென்சி எக்ஸிட் பயன்படாமலே போகலாம்.

திருமணம், விவாகரத்து. அடுத்து திருமணம், மீண்டும் விவாகரத்து. சிலருக்கு இவை சாதாரணமாகி விட்டன.

'ரொம்பவெல்லாம் யோசிக்க வேண்டாம். பிடிக்கலைன்னா, ஒத்து வரலைன்னா, வெட்டி விட்டுட்டால் போச்சு' என்பது போல அலட்சியமாகச் சிலர் அணுகுகிறார்கள்.

வெள்ளை சட்டையை அழுக்காக்கி, பின்பு நன்கு துவைப்பது போன்றதுதான் இது. பழைய வெண்மை வரவே வராது. திருமணம் என்கிற உறவை வேண்டுமானால் கழற்றி விடலாம். அது உண்டாக்கிய தாக்கங்களை?

ஆகவே இதற்கெல்லாம் இடம் கொடுக்காத புரிதல் மிகவும் அவசியம். புரிதல் இருக்கிற இடத்தில் எந்த உறவுக்கும் பங்கம் வரப்போவதில்லை.

## புற அழகு

இயற்கையைப் பொறுத்தவரை இனப்பெருக்கம் என்பது முக்கியம். அதில் ஈடுபாடு வருவதற்காக, இயற்கை படைத்திருப்பது இரண்டு விஷயங்களை. ஒன்று அழகு. மற்றது இளமைக் கவர்ச்சி. முதலில் கண்ணில் படுவது, அதுவும் கண்டதும் காதலில் மேலோங்கி நிற்கக் கூடியது கவர்ச்சியாகத்தான் இருக்கும்.

> ‘தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ,
> உங்கள் அங்கத்திலே ஒரு குறை இருந்தாலும், அன்பு
> குறைவதுண்டோ!’

என்கிற பாடலைக் கேட்டிருக்கிறீர்களா? உடல் அழகு வேறு மனத்தின் அழகு வேறு என்பதைத்தான் அந்தத் திரைப்படப் பாடல் சுட்டிக்காட்டுகிறது.

நம்மால் சகித்துக்கொள்ளவே முடியாத குணாதிசயம் உள்ளவரைத் திருமணம் செய்ய நேர்ந்தால், வாழ்க்கை நரகமாகி விடும். ஜாக்கிரதை. இந்த விபத்தைத் தவிர்க்க, இரண்டு வேலைகள் செய்ய வேண்டும்.

ஒன்று தனக்கு எது மிகவும் பிடிக்கிறது, எது சுத்தமாகப் பிடிக்கவில்லை என்பதைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

தொலைக்காட்சிகளில் நடத்தப்படும் கல்யாண மாலை போன்ற நிகழ்ச்சிகளைப் பார்த்தால், வாழ்க்கைத் துணை எப்படிப்பட்ட வர்களாக இருக்கவேண்டும் என்ற கேள்விக்கு பலரும் தெளிவாகச் சொல்லுகிறார்கள்.

‘என்னை நன்றாகப் பார்த்துக் கொள்பவராக...’

‘என் பெற்றோருக்குப் பிள்ளை போல, மகள் போல நடந்து கொள்பவராக...’

‘என்னைப் புரிந்து கொள்பவராக...’

அழகு, படிப்பு, வேலை, சம்பளம் போன்றவை அவர்களுக்கு இரண்டாம்பட்சம்தான். மன அழகே அழகு. கலையாத அழகு, குன்றாத அழகு. மாறாத அழகு என்று நினைக்கிறார்கள்.

நண்பர் ஒருவருடைய மகளுக்குத் திருமணம் செய்ய முடிவு செய்தார்கள். அவர்கள் தேர்வு செய்த மாப்பிள்ளை பையன் வீட்டாரும், அவர்களும் என் நண்பரின் வீட்டுக்கு வந்தார்கள். ஹாலில் இரு வீட்டாரும் அமர்ந்திருந்தார்கள். பார்த்தார்கள். ஒருவருக்கு ஒருவர் பிடித்துவிட்டது போலத்தான் இருந்தது.

பையனும் பெண்ணும் பேசிப் பார்க்கட்டுமே என்றார் பையனின் சித்தப்பா. இருவரும் அங்கேயே இருக்க, மற்றவர்கள் உள் அறைகளுக்குப் போனார்கள். சற்று நேரத்துக்குப் பிறகு, BE படித்துவிட்டுப் புகழ்பெற்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் அந்தப் பெண் பையனைப் பார்த்து கேட்டாள். ‘நான் அடிக்கடி அப்செட் ஆகிவிடுவேன். நீங்கள்தான் அட்ஜஸ்ட் பண்ணிப் போக வேண்டும். செய்வீர்களா?’

பையன் சற்றும் தயங்காமல் சொன்னான், ‘உம்...’

சற்று நேரம் போனது. பெண்ணேதான் மீண்டும் கேட்டாள், ‘எனக்குக் கொஞ்சம் கொஞ்சம் கோபம் வரும். நீங்கள் பொறுத்துப் போகவேண்டும்.’

‘உம்...’

பக்கத்து அறையில் இருந்தாலும், இந்த உரையாடலைக் காதில் கேட்ட நாங்கள் எல்லோரும் சத்தமின்றிச் சிரித்தோம்.

Attitude என்பார்கள். இரண்டு மனிதர்கள் கலந்து பழகுவதிலேயே அதன் தாக்கம் அதிகம். இரண்டு மனிதர்கள் சேர்ந்து வாழ்வது என்றால், அதுவும் திருமணம் என்கிற வலுவான கயிறைக் கொண்டு இருவரையும் கட்டிப் போட்டுவிட்டால், அதற்குள் இருந்தாக வேண்டிய கட்டாயத்தில் விதிக்கப்படுகிறார்கள், நான்கு சுவர்களுக்குள் வாழ்க்கை நடத்தும்போதுதான் வாழ்க்கையின் உண்மையான முகம் தெரிகிறது, பெண்ணின் கோபத்தை மணமகன் எவ்வளவு தூரம் தாங்கிக்கொள்ளப் போகிறான், ஆணின் நடத்தையில் பெண் எவ்வளவு தூரம் திருப்தியடையப் போகிறாள் என்பதெல்லாம் காலப்போக்கில் தெரிந்துவிடும்.

திருமணம் சேர்த்து வைக்கிறது. மனோபாவம் பிரித்து விடுகிறது.

காலம் முழுக்க ஒருவரோடு கூட வருவது அவருடைய புற அழகல்ல. அக அழகு. அதாவது குணம். ஆகவே குணம் பாராமல் துணையைத் தேர்ந்தெடுப்பது தவறு.

**பெற்றோர்கள்**

திருமணம் என்பது இரண்டு மனிதர்களுக்குள் மட்டுமே ஏற்படும் பந்தமல்ல. திருமணம் பல முற்றிலும் புதிய உறவுகளை ஏற்படுத்தித் தருகிறது. மாமனார், மாமியார், நாத்தனார் கொழுந்தன், மைத்துனர் என்று முக்கியமான உறவுகள் மணமக்களுக்குக் கிடைக்கிறது. இவை வெறும் உறவுகள் இல்லை. நாளடைவில் ரத்தப் பந்தங்களுக்கு இணையாகக் காலம் முழுக்க மணமக்களோடு உறவாடப் போகிறவர்கள்.

இங்கேதான் பல குடும்பங்களில் சிக்கல் வருகிறது. எத்தனை விதமான புதுமனிதர்களை, அவர்களுடைய மனோபாவங்களை, எதிர்பார்ப்புகளைச் சமாளிப்பது!.

ஆக, திருமணத்துக்குப் பொருத்தம் பார்ப்பதில் மாப்பிள்ளை, பெண் தவிர, அவர்கள் குடும்பம் என்ன? அங்கிருக்கும் மனிதர்கள் எப்படி என்பனவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். இதெல்லாம் சாத்தியமா என்று கேட்டால் வேறு வழியில்லை என்பதுதான் பதிலாக இருக்கவேண்டும்.

குடும்பம் என்பதில் கலாசாரமே அடங்கும். எப்படிப் பேசுவது, பழகுவது, எதை விட்டுக் கொடுப்பது. எதை விட்டுத் தரவே கூடாது, எதற்கு அதிக முக்கியத்துவம் போன்றவை குடும்பத்துக்குக் குடும்பம் மாறுபடும். என்ன செய்யலாம்? எவ்வளவு தூரம் தவறு செய்யலாம்? எவையெல்லாம் தவறு, எதெல்லாம் சரி? எதை மன்னிக்கவே முடியாது? மாறுபடும் மதிப்பீடுகள். இவையெல்லாம் அவர்கள் மனத்தில், நடவடிக்கைகளில், அணுகுமுறைகளில் படிந்து போய் இருக்கும்.

மருமகளாக, மாப்பிள்ளையாகப் புதிதாக உள்ளே நுழைபவர்கள் இவற்றோடு ஒத்துப் போனால் சிறப்பு. இல்லாவிட்டால் சங்கடங்கள், சமயத்தில் தகராறுகள்.

கலாசாரம் தவிர வித்தியாசப்படும் பண பலம், செல்வாக்குப் பலங்கள்.

அடிமையாய் நடத்துவார்கள் என்று சொல்ல முடியாது. ஆனாலும், தாங்கள் உயர்ந்தவர்கள் என்கிற எண்ணம் உறவைப் பாதிக்கும். ஆகவே சரியா வரன் அமைந்தால் மட்டும் போதாது. குடும்பமும் முக்கியம். அப்போதுதான் எந்த இல்லறமும் சுமுகமாக நிகழும்.

**உள்ளார்ந்த ஆசைகள்**

‘வாழ்க்கையில் பணம் முக்கியம். அது இல்லாவிட்டால் நாய்கூட மதிக்காது’. இப்படி நினைப்பவரைத் திருமணம் செய்து கொள்பவர், பலவற்றுக்கும் தயாராக இருக்க வேண்டும். வேலையோ, தொழிலோ, வியாபாரமோ அதற்கே முக்கியத்துவம் என்றிருப்பார். பேசக்கூட நேரம் கிடைக்காமல் போகலாம். உடனிருப்பது, கவனிப்பது, கொஞ்சுவது எல்லாம் அரிது. அவருடைய வாழ்க்கையில் பணமே பிரதானமாக இருக்கும்.

திருச்சி பர்வீனைப் பற்றிப் பார்த்தோம். பெரும்பாலான நேரம் கங்காரு இல்லத்தில் ஆதரவற்றவர்களுடன் தான் அவருடைய கணவர் ராஜா இருக்கிறார். பர்வீனும் அவருடன் சந்தோஷமாக இருக்கிறார், தன் கணவனின் மனநிலையை விருப்பத்தைப் புரிந்துகொண்டு அவரோடு வாழ்க்கை நடத்துகிறார்.

பர்வீன் போலவே வாழ்க்கைத் துணைக்குப் பிடித்ததே தனக்கும் பிடிக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. குறைந்தபட்சம் அனுமதிக்கும் அளவிற்குப் புரிந்துகொள்ளவேண்டும். அதற்காக விட்டுக்கொடுக்கத் தெரியவேண்டும். ஒத்துழைத்தால் நல்லது. பர்வீன் போல உதவியாக இருந்துவிட்டாலோ குடும்ப வாழ்க்கை சொர்க்கமாகி விடும்.

**பழக்க வழக்கங்கள்**

பழக்க வழக்கங்களே ஒரு மனிதனை ரசிப்பதற்குக் காரணமாக இருக்கிறது. நல்ல பழக்கவழக்கங்கள் உள்ளவரை எல்லோரும் விரும்புவர். சமூகத்தால் அங்கீகரிக்கப்படாத பழக்கங்கள் உள்ளவரை எவரும் திருமணம் செய்துகொண்டு வாழ்க்கை முழுதும் சிரமப்படவேண்டுமா என்ன?

பயணத்தின்போது, ஒன்றிரண்டு நாட்கள் உடனிருக்கும்போதுதான் சில குணாதிசயங்கள் தெரியவரும், சில உடல் குறைபாடுகளும், வியாதிகளும்கூட. ஆகவே துணையைத் தேர்வு செய்வதில் பழக்க வழக்கங்கள் முக்கிய இடம்பெறும். ஒரு பெண் மேட்ரிமோனியலில் குறிப்பிட்டிருந்தார். எனக்குக் கோபம் அடிக்கடி வரும். என் துணைவர் அதைப் பொறுத்துக்கொள்ளவேண்டும்.

ஆண்களில் மட்டுமல்ல. பெண்களிலும் சிரமம்தரும் பழக்கங்கள் உள்ளவர்கள் இருக்கிறார்கள். ஒருசிலர் வீட்டு வேலைகளுக்கு மேல் வேறு எதுவும் செய்யமாட்டார்கள். ஒருசிலர் கட்டாயம் வீட்டுக்கு வேலைக்காரர் அவசியம் என்கிற கொள்கை உடையவர்கள். சில பெண்களுக்கு எந்நேரமும் டிவி பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். இப்படிப்பட்ட குணங்கள் எல்லாம் நமக்கு ஒத்துப்போகுமா என்று ஆண்மகன் யோசிக்கவேண்டும். ஆகவே புரிதல் மிக அவசியம்.

**தொடர்புகள்**

‘இதெல்லாம் எனக்கு சாதாரணம்ப்பா’ என்றோ, ‘எனக்கு எவ்வளவு பாய் பிரண்ட்ஸ் (ஆண் நண்பர்கள்) அல்லது கேர்ள் பிரண்ட்ஸ் தெரியுமா?’ என்றோ பெருமை அடித்துக் கொள்ளும் பையன்களும் பெண்களும் உண்டு.

பழக்கங்கள், தொடர்புகள் வேறு. திருமணம் வேறு என்று நினைப்பவர்கள் உண்டு. இதுகுறித்துத் திருமணத்துக்கு முன்பே தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டும், பெரும்பாலும் ஆண்கள் தங்கள் மனைவிக்கு ஆண் நண்பர்கள் இருப்பதை விரும்பமாட்டார்கள். அதேபோலப் பெண்களும் ஆண்களுக்கு பெண் நண்பர்கள் இருப்பதைச் சகித்துக்கொள்ள மாட்டார்கள். இருதரப்பிலும் இது குறித்துப் பயம் இருக்கக்கூடும். ஒன்று, மனமாற்றம் வேண்டும். அல்லது இதுகுறித்த ஆழமான புரிதல்கள் அவசியம். ஆணும் பெண்ணும் அருகருகே அமர்ந்து பணியாற்றும்போது பேசாமல் இருக்கமுடியாது. இதனால் நட்பு தோன்றாமல் இருக்காது.

**வயது வித்தியாசங்கள்**

திருமணம் செய்து கொள்பவர்களில் ஆணுக்கு ஒன்றிரண்டு முதல் 5 வயது வரை கூடுதலாக இருக்கலாம் என்பது பரவலான கருத்து. பொருத்தம் பார்ப்பவர்களும் அப்படித்தான் பார்க்கிறார்கள். இதற்கு விஞ்ஞானபூர்வமான காரணங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் குடும்ப அமைப்பில் எவர் எவருக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் (ஆண், பெண்ணுக்கு) என்று பார்க்கும்போது இது சரிதான் என்று சொல்லலாம்.

கணவனைவிட மிகக் குறைந்த வயதினராக மனைவி அமைந்து விடுகிற சாத்தியங்கள் அதிகம். இரண்டாம் தாரம், மூன்றாம் தாரம் மட்டுமல்ல. தங்கை மகளை, அக்கா மகளையே கட்டிக் கொள்ளும் தாய்மாமன்கள் இருக்கிறார்கள். தேடிப்பிடித்துப் போய், தன்னைவிட 10, 15 வயது குறைவான பெண்களைத் திருமணம் செய்பவர்களும் உண்டு.

மேலோட்டமாகப் பார்த்தால், பெரிய பிரச்னைகள் இல்லாதது போலத் தெரியும். அதேசமயம் ஒருவரையொருவர் மதிப்பதில் இருந்து பிரச்னைகள் ஆரம்பமாகும்.

அழகிற்காக, பிரியத்திற்காகக் கூடுதல் அன்பு காட்டலாம். ஆனாலும் சக மனுஷி என்கிற மரியாதை வருவது கடினம். எனக்கு எல்லாம் தெரியும் என்று எத்தனை ஆண்கள் பெண்களைக் கட்டுப்படுத்துகிறார்கள்! என்ன காரணம், எனக்கு உன்னைவிட வயது அதிகம். நான் சொல்வதைக் கேள் என்பதுதானே!

பருவம் என்பது காலகட்டங்களுக்கு உட்பட்டது. அதிக வயது வித்தியாசம் இருக்கிறபோது, இந்தச் சுழற்சிகள் முன்னும் பின்னும் சில வருடங்கள் தாளம் தப்பும். ஆணுக்கு இல்லற வாழ்க்கையில் ஆர்வம் போன பிறகும் பெண்ணுக்கு அவரது குறைவான வயது காரணமாக ஆர்வமும் தேவையும் தொடரலாம். ஆயுள் முழுக்க இருவரும் சேர்ந்து வாழ்வதுதான் வாழ்க்கை. அதில் வயது வித்தியாசங்களினால் விருப்பங்கள், தேவைகள் போன்றவற்றில் கருத்துவேறுபாடு தோன்றும்போது அது வாழ்க்கையையே சீர்குலைத்துவிடுகிறது.

வயது காரணமாக ஆசைகளும் ஆர்வங்களும் மாறுபடலாம். சிறிய

வயதில் வரும் ஆர்வங்கள் வயது ஆக ஆகக் குறைந்து போகும். முதிர்ச்சி வரவர, இதெல்லாம் எதற்கு, ஏன் இந்த விளையாட்டு என்கிற மனப்பான்மைதான் நிலவும். மனைவிக்கு வயது மிகக் குறைவாக இருந்தால் அவரது ஆர்வங்கள் கணவனால் புரிந்துகொள்ளாமல் போகக்கூடும்.

**உடல் பொருத்தம்**

விஷயத்தில் சற்றும் பொருத்தமில்லாதவர்கள்தான். ஆனாலும் மகிழ்ச்சியாகவே வாழ்கிறார்கள். அவர்கள் காதலித்தார்கள். அதனால் அதனைப் பொருட்படுத்தவில்லை.

தேர்வு செய்கிற போது இயன்றால் ஓரளவேனும் இவை ஒத்து இருப்பது உதவியாகத்தான் இருக்கும். இதுபோன்ற வித்தியாசங்களை, தம்பதியர் பொருட்படுத்தவில்லை என்றாலும், பிறர் கண்களில் இவை பட்டுக்கொண்டேயிருக்கும். பார்க்கிறவர்கள் ஏதாவது சொல்லலாம். அவை காதில் விழுகிறபோது சம்பந்தப்பட்டவர்கள் மனது சங்கடப்படலாம். முன்பு சொன்னதுபோல , பிற காரணங்கள், பொருத்தங்கள் வலுவாக இருந்தால் இதனைப் பொருட்படுத்தாமல் விடலாம்.

**படிப்பு**

பெண்கள் அதிகம் படித்து, ஆண்கள் படித்திராவிட்டால் பிரச்னை வருமே என்றுதான் நினைக்கத் தோன்றும். அதிகம் படித்த பெண் திமிராக இருப்பாளோ என்கிற பயம் இருக்கிறது. ஆகவே படிப்பு விஷயத்தில் கூடுதல் கவனம் கொள்ளவேண்டியிருக்கிறது.

ஆண் கூடுதலாகப் படித்திருந்தால் பிரச்னையேயில்லை. அதைத்தான் ஒவ்வொரு பெண் வீட்டாரும் விரும்புவார்கள். படிப்பினால் கிடைக்கும் வேலை, அதன் மூலம் வரும் வருமான வித்தியாசங்கள் போன்றவை சமூகத்தால் கூர்ந்து கவனிக்கப்படும்.

**நம்பிக்கைகள்**

பல திருமணங்கள் வெற்றி பெறாமல் போவதற்கு இது முக்கியக் காரணமாக அமைகிறது. ஒருவருடைய நம்பிக்கைகள் என்பது அவரது உள்ளார்ந்த விஷயம், எது சரி? எது தவறு? எதைச் செய்யலாம்? எதைச் செய்யக் கூடாது? எப்படிச் செய்யக் கூடாது? யார் நல்லவர், யார் கெட்டவர் போன்ற கருத்துக்கள் ஒருவரிடம் வருவதற்குக் காரணம், அவருடைய நம்பிக்கைகள்தான்.

திருமணம் ஆன தொடக்கத்தில், பிற ஈர்ப்புகளும், ஆர்வங்களும் வலுவாக இருக்கிற காரணத்தால், நம்பிக்கைகள் சார்ந்த செயல்கள், சிறு சலசலப்புகளை மட்டுமே உண்டாக்கும். ஆனால் காலப்போக்கில், அந்த ஈர்ப்புகள் குறைய, நம்பிக்கைகள் சார்ந்த வேறுபாடுகள் தலைதூக்கலாம். பூதாகரமாகலாம்.

ஒருவருடைய நம்பிக்கைகளை முழுவதும் கண்டுபிடிப்பது சுலபமானதல்ல. அவர்களே விரும்பினாலும் தெரிவிக்க முடியாது. காரணம், நம்புவது எல்லாம் மனதில் எங்கேயும் பட்டியல் போடப்பட்டு அறிவிப்புப் பலகையில் தொங்கவிடப்படுவதில்லை. அந்த அந்தச் சமயங்களில் வெளிப்படும், ஆழ்மன விஷயங்கள் அவை. ஒருவருடைய

நம்பிக்கைகளை அறிந்துகொள்வதும் அதற்கு மதிப்புக் கொடுப்பதும் முக்கியமானதாகும்.

## அவசரம் வேண்டாம்

உணர்வு ரீதியாக முடிவுகள் எடுக்கும்போதுதான் தவறுகள் நிகழ்கின்றன. அவசரத் திருமணங்களைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும். ஆணோ, பெண்ணோ சந்தித்து அதிகம் பழகிப் பார்க்காத நிலையில் புரிந்துகொள்வதற்கு அவகாசம் கேட்கலாம். அதேபோல பெற்றோரால் நிச்சயிக்கப்படும் திருமணங்களில், அதிகம் விசாரிக்காமல் உடனடியாகத் திருமணத்துக்கு நாள் குறிக்கவேண்டாம்.

‘வெளிநாடு உடனே போக வேண்டும்’, ‘பெரியவர் இழுத்துக்கொண்டு கிடக்கிறார், அவர் வாழ்வில் திருமணம் நடத்திடவேண்டும்’, ‘ஜாதகப்படி வரும் 21ம் தேதிக்குள் திருமணம் செய்தாக வேண்டும்’ போன்ற அவசரங்களுக்கு எல்லாம் மகளையோ மகனையோ பலிகொடுக்கவேண்டாம்.

பெண்ணைக் கொடுப்பதோ, பெண்ணை எடுப்பதோ அவர்கள் ஊர், குடும்பம், மணமகன்/மகள் பற்றி விபரமாகத் தெரிந்து கொள்ளுதல் மிகமிக அவசியம். வாய் வார்த்தையில் மட்டும் எதுவும் நம்பிவிடக்கூடாது. குடும்பம், பணம், பதவி, படிப்பு, அழகு, அதிகாரம் போன்ற ஏதோ ஒன்றை மட்டும் வைத்தோ அல்லது நமக்கு ஏற்பட்டுள்ள சிரம நிலைகள் காரணமாகவோ, முடிவுகள் எடுக்க வேண்டாம்.

## இடைவேளை நேரம்

நிச்சயதார்த்தம் முடிந்திருக்கும், திருமணம் ஆகவேண்டும். இடைப்பட்ட நேரம் சுவாரசியமானது மட்டுமல்ல, சிலருக்குக் குழப்பம் தருவதுமாகும்.

ஒரு சிலருக்குப் பேச்செடுத்த சில நாள்களிலேயகூட திருமணம் முடிந்து விடும். பெரும்பாலானவர்களுக்கு முடிவு செய்தபின் திருமணம் இரண்டு மூன்று மாதங்கள் தள்ளித்தான் நடக்கும். முகூர்த்த நாள் அமையாது, திருமண மண்டபம் கிடைக்காதது போன்ற ஏதாவது ஒரு காரணம் இருக்கலாம். வேறு சிலருக்குப் பாவம், எட்டுப் பத்து மாதங்கள் கூட ஆகும். ‘நீ அங்கே , நான் இங்கே’ கதைதான்.

காதலிப்பவர்களின் பதற்றம் என்பது ஒரு வகை. அது, தங்கள் திருமணத்துக்குப் பெற்றோர் சம்மதிக்க வேண்டுமே என்கிற பதற்றம். அந்தப் பதற்றம் இப்போதெல்லாம் முன்போல இல்லை. குறைந்து கொண்டே வந்துவிட்டது. காதல் திருமணங்கள் பரவலாகச் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதுதான் அதற்குக் காரணம்.

ஏற்பாடு செய்யப்பட்ட திருமணம், காதல் திருமணம் இல்லை. இன்னாருக்கு இன்னார் என்று பேசி முடிவு செய்து விட்டார்கள். அல்லது உறவுகள் கூடி ‘நிச்சயம்’ செய்தாயிற்று. திருமணத்திற்கு நாள் குறித்தாயிற்று. ‘கவுண்ட் டவுன் ஸ்டார்ட் ஆகிவிட்டது.’

என்ன நடக்கும்? எப்படி நடந்து கொள்ள வேண்டும்? இது கைபேசி காலம். எங்கும் பிரகாசமாக ஆப்பிள் மொபைல் போன்களும், சாம்சங்குகளும் சுற்றிவரும் காலம். பெண்ணுக்குப் பையனே போன் வாங்கி, சிம்கார்டும் போட்டுக் கொடுக்கிற நவீன காலம்.

காதலிப்பவர்களை விட இவர்கள் கூடுதலாகவும் தைரியமாகவும் பேசுவார்கள். ‘யாரோடு பேசுகிறேன். எனக்கு நிச்சயம் ஆனவருடன்தானே’ என்கிற நினைப்பு. மேலும் இவர்களை யாரும் எதிர்க்கப்போவதில்லை. மனப்பொருத்தம் ஏற்பட இதுபோன்ற உரையாடல்கள் உதவும் என்று இரு வீட்டாரும் எண்ணுவார்கள்.

நேரில் பார்த்துப் பேசிப் பழகும்போது பலமடங்கு கூடுதல் புரிதல் ஏற்படும். அது உறவை வலுப்படுத்த மட்டும் செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது. சில திருமண ஏற்பாடுகள் இதனால் மறுபரிசீலனைக்கு உள்ளாகியிருக்கிறது.

நிச்சயித்த திருமணம் நமக்கு முக்கியம் என்றால், இந்தக் காலகட்டத்திலேயே கவனமாக இருக்கவேண்டும். பெண்கள் உணர்வுபூர்வமாக இருப்பார்கள் என்று நினைத்தால், அது தவறு. பெரும்பாலும் பெண்கள்தான் அந்த நேரங்களில் கவனிப்பாகச் செயல்படுகிறார்கள். அவர்களுக்குத்தான் கூடுதல் ரிஸ்க்.

முதல் அத்தியாயத்தில் பார்த்த புவனாவின் முடிவு ஒரு சிலருக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால் தன்னிச்சையாகத் தங்கள் எதிர்காலம் பற்றி யோசிப்பதும் முடிவுகள் எடுப்பதும் இப்போதெல்லாம் சர்வசாதாரணமாக நடக்கின்றன. இதில் சரி, தவறு என்று சொல்வதைவிட, மனப்பொருத்தம் அமைய இதுபோன்ற வாய்ப்புகள் உதவுகின்றன என்றுதான் இதனை எடுத்துக்கொள்ள வேண்டும். முடிவு செய்யப்பட்ட 100 ல் அதிகபட்சமாக இதுபோல 5 திருமணங்கள் நிற்கலாம். மீதி 9 5 பேர், சரியான புரிதல்களோடு திருமணம் செய்துகொள்கிறார்கள்.

## 6. திருமணம் குறித்த பயங்கள்

திருமணம் என்பது சந்தோஷம் தருவதுதான். செய்துகொள்ள இருப்பவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்பது உண்மைதான். ஆனால் பலபேர் திருமணம் என்றாலே அலறுகிறார்கள். அதற்குக் காரணம், பணப்பிரச்னை மட்டுமல்ல. திருமணம் குறித்த அவர்களது பயம்தான்.

'ஸ்ட்ரெஸ்' என்கிற மன அழுத்தம் பற்றி ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார்கள். என்ன காரணங்களினால் மிக அதிகமான மன அழுத்தம் வருகிறது என்று ஆராய்ந்து பட்டியல் இட்டிருக்கிறார்கள். அவற்றில் முதலிரண்டு இடங்களைப் பிடித்திருப்பவை, வேலை இழப்பதும், வாழ்க்கைத் துணையை இழப்பதும்தான்.

வாழ்க்கைத் துணை என்பது பலவிதங்களிலும் முக்கியமான வித்தியாசமான உறவு என்பதை முன்பே பார்த்தோம். மண முறிவுகள், பிரிவுகள் அதிகரித்திருந்தாலும், பலரும் தொடக்கத்தில் அந்த எண்ணத்தில் இருக்கவே மாட்டார்கள்.

இப்படித்தான் சரவணன் என்கிற எஞ்சினியர் ஒருவர் பேச்சு சுவாரஸ்யத்தில் தான் புகைக்கும் பழக்கம் உள்ளவராகத் தன் வருங்கால மனைவி லதாவிடம் சொல்லிவிட்டார். அதன்பின், அந்தப் பெண் எப்போது போனில் பேசினாலும், 'இன்னைக்கு எத்தனை சிகரெட்?' என்றுதான் ஆரம்பிப்பார். பின்பு எனக்காக விட்டுடணும்' என்று தொடங்கி, 'இனி நீங்க குடிக்கவே கூடாது' என்று உத்திரவும் அம்மாவிடமிருந்து வந்தது. அவர்கள் திருமணத்துக்கு இன்னும் 30 நாள்களே இருந்தன.

சரவணன் சில சமயங்களில் இப்படிக் கெஞ்சத் தொடங்கினார். 'லதா, லதா, இன்னைக்கு ஆபீசில செம டென்ஷன். இன்னைக்கு மட்டும் ஒண்ணே ஒண்ணு. ப்ளீஸ். சரியா?'

'போனா போகிறது. ஒண்ணுதான்.' என்று சொன்னதை ஏற்றுக்கொண்டு வருங்காலக் கணவர் தனக்காக விட்டுக்கொடுத்ததை லதா தன் தோழிகளிடம் பெருமையாகச் சொன்னார்.

இந்த சரவணன் போல, முதல் அத்தியாயத்தில் பார்த்த மதன் போலத் தன் துணைக்காக எல்லாவற்றையும் விட்டுவிடத் தயாராக இருக்கிற ஆண்கள் உண்டு. லதா போல அனுமதிக்கிற பெண்கள் உண்டு. இதுபோன்ற புரிதல்களும் விட்டுக்கொடுக்கும் தன்மையும் உள்ளவர்களால் எந்தப் பிரச்னையையும் சுலபமாகச் சமாளிக்கமுடியும்.

ஆண்களுக்கு இந்தப் பயம் இருக்க வாய்ப்பில்லை. பெண்கள் மனத்தில் நிச்சயம் ஓர் இனம் புரியாத பயம் இருக்கும். வேலைக்கு முயற்சி செய்யும்போது நேர்முகத் தேர்வுக்கு முன் வருமே, பொதுத் தேர்வு எழுதும்போது, மனதுக்குள் அடித்துக் கொள்ளுமே, அந்தச் சின்ன திக்திக்

போல. Fear of Unknown இருக்கத்தான் செய்யும்.

இதுவரை பெற்றோரின் பாதுகாப்பில், நம் விருப்பம் போல இருந்தாகி விட்டது. இனி புதிய உறவுகள், புதிய வீடு, புதிய சூழலில் இருந்தாக வேண்டும். நம்மைச் சரியாகப் புரிந்து கொள்வார்களா? குறைகளைப் பெரிதுபடுத்துவார்களா? அவற்றுக்காக நம்மைச் சிரமப்படுத்துவார்களோ!

எப்படியிருக்கப் போகிறது புதிய வாழ்க்கை என்கிற குறுகுறுப்பு இல்லாமல் இருக்கவே முடியாது. ஒருக்கால் திருமணம் நெருங்கிய உறவிலேதான். மாப்பிள்ளை தவிர அவர் குடும்பத்தினரை நமக்கும், நம்மை அவர்கள் அனைவருக்கும் நன்றாகவே தெரியும் என்கிற பட்சத்தில் இந்தப் பயமும் பரபரப்பும் இருக்காது.

ஓரிடத்தில் வளர்ந்த செடியைப் பிடுங்கி எடுத்து, மற்றொரு இடத்தில் வைத்து வளர்க்கும் முயற்சி போன்றதுதான் பெண்களுக்கான திருமணம்.

என் பெற்றோரை நன்றாகப் பார்த்துக் கொள்வாளா? என் சுதந்தரத்தில் தலையிடுவாளா? தன்னால் ஒழுங்காக ஒரு குடும்பத்தை நடத்திக்காட்ட முடியுமா? என் பிள்ளைகளுக்கு சரியான படிப்பையும் வேண்டிய வசதி வாய்ப்பையும் வழங்கமுடியுமா?

இது ஆண்களுக்கு உள்ள பயம் அல்ல, சந்தேகம். திருமணத்தால் ஒழுங்காகச் சென்றுகொண்டிருக்கிற தன் வாழ்க்கையில் சிக்கல் நேருமோ என்று பயப்படுவார்கள்.

சந்தேகத்தினால் முழு மனத்தோடு இவர்களால் திருமணத்தை எதிர்கொள்ளமுடியாது.

•

முன்பு பார்த்த புவனாவின் கடிதத்தில் ‘திருமணம் வேண்டாம்’ என்கிற முடிவுக்கு வேறு பல காரணங்களை அவர் எழுதினாலும் எது முக்கியமான காரணம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அது யார் மாலா? அவளுக்கும் உங்களுக்கும் என்ன உறவு? என்று கேட்டிருந்தாரே, அதுதான் சிக்கலான முடிச்சு. மற்ற முடிச்சுகளைக் கூட அவிழ்த்து விடலாம். இதை அவிழ்ப்பது சிரமம்.

சந்தேகம் ஒரு நோய். வேகமாகப் பரவும். அமீபா போல அது பெருகும். உண்மை வேறாகவே இருக்கலாம். ஆனாலும்கூட, அதை நீக்கமற ஒழிக்க முடியாது.

வேலைக்குப் போகுமிடங்களில் பலருடன் பேசிப் பழக வேண்டியிருக்கிறது. எவர் எப்படியோ? எவ்வளவு தூரம் நட்போ... சிலருக்கு இந்தப் பயங்கள் இருக்கலாம். வெளியில் சொல்லாமல் இருந்தாலும் அவர்கள் மனத்திற்குள் புழு போல நெளியலாம்.

திருமண உறவு முக்கியம்தானே. இவற்றில் கவனமாகத்தானே இருந்தாக வேண்டும். ‘என் மனத்தில் எந்தவிதமான தவறான எண்ணமும் இல்லை’ என்று நாம் நம்பலாம். நம் துணையும் அப்படி நினைக்க வேண்டும். அதற்குத் தகுந்தாற்போலத்தான் பேசவேண்டும், நடந்து கொள்ளவேண்டும்.

இதுபோன்ற பயம் நியாயமா, சரியா, இதற்கு ஆதாரம் என்ன என்றெல்லாம் கேட்டுப் பலனில்லை. மனம் ஒரு குரங்கு. எப்படி வேண்டுமானாலும்

தாவும். சந்தேகம் என்பது எப்போதும் நம்முடன் பயணிப்பது. நான் தீர்மானமாக இல்லாவிட்டால் சந்தேகம் நம்மை ஆக்ரமிக்க ஆரம்பித்துவிடும்.

வெளிப்படையாகக் கேட்பதுதான் பலசமயங்களில் நல்ல செயலாக இருக்கும்.

•

ஒரு சிலர் பார்க்கிற பார்வை, கேட்கிற கேள்விகளிலேயே, அவர்களின் சந்தேக மனப்பான்மை வெளிப்பட்டு விடும். சந்தேகப்படும் கணவனைப் போன்ற சாபம் பெண்களுக்கு வேறு இருக்க முடியாது. நரகம் விதித்தது போலாகி விடும் வாழ்க்கை.

தன் வருங்காலக் கணவரைப் பற்றி யோசிக்கையில் சந்தேகப்படுபவராக இருப்பாரோ என்கிற நினைப்பு மிகவும் துயரமானது. ஒருபோதும் பெண்களை அவர்கள் பெற்றோர் சந்தேகப்படுவதில்லை. ஆனால் திடீரென்று கணவர் சந்தேகப்படுபவராக அமையும்போது அது அவர்களைத் தீயில் தள்ளியது போலாகிவிடுகிறது.

•

கணவன் வேண்டும். படித்த, வேலைக்குப் போகும் அழகான புருஷன் வேண்டும். அவன் மட்டும் வேண்டும். கம்ப்யூட்டர் மொழியில் சொல்வதானால், ‘கட் அண்ட் பேஸ்ட்’ செய்து கொண்டு விட வேண்டும். இதன் மறுபெயர் அபகரிப்பு. இதுபோலச் சில பெண்கள் நினைப்பார்கள். ஆனால் இது பிராக்டிகலாக எவ்வளவு சாத்தியம் என்று யோசிக்கவேண்டும். ஒருவேளை எந்த விருப்பம் இருந்தாலும் அதைத் தன் துணையிடம் சொல்லி அவர் கருத்தையும் ஆலோசனையும் பெற்றுக்கொள்வது நலம்.

தனிப்பட்ட ஆர்வங்களுக்கு தடை வருமோ என்கிற ஒரு பயமும் எப்போதும் பெண்களிடமும் தென்படும். நான் பல ஆண்டுகள் சிரமப்பட்டு பரதம் கற்றுக் கொண்டேனே. ஆட விடுவாரோ. அல்லது வேலைக்குப் போக அனுமதிப்பாரா? அல்லது என்னுடைய வேறு ஏதோ தனிப்பட்ட ஆர்வத்திற்குத் தடை விதிப்பாரா? திருமணத்துக்குப் பிறகு, நான் இவர் சொல்வதைத்தான் கேட்க வேண்டுமே. வேண்டாம், விட்டுவிடு’ என்று என் ஆர்வ ஏரியாக்களில் பச்சைத் தண்ணீர் ஊற்றி அணைத்து விடுவாரோ?

இதுபோன்ற பயங்களால் என்ன ஆகும்?

•

எதற்காக ஒருவர் பயப்படுவார்? ஏதும் ஆகிவிடக் கூடாது என்பதற்காக.

திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்களுக்கு, அவர்கள் வாழ்க்கை முக்கியம். திருமணத்துக்குப் பின், வாழ்க்கையின் போக்கை, தரத்தை, நிம்மதியைத் தீர்மானிக்கப் போவது, வாழ்க்கைத் துணையுடனான உறவு. அது தவறாக அமைந்து விடக்கூடாது என்கிற பயம். எப்படி அமைய வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு

என்ன செய்யலாம்?

•

தன் இணைக்கோ, அவருடைய முக்கிய உறவினருக்கோ (பெற்றோர்) நியாயமான பயங்கள் இருக்கும் என்பதை நாம் உணர்வது.

சந்தர்ப்பம் கிடைக்கும்போது, அதிக அழுத்தம், வேகம் காட்டாமல் மென்மையாக அந்தப் பயம்/சந்தேகத்தினைப் போக்க முயல்வது.

'அவன் கெட்டிக்கப் போன பொண்ணு எங்க வீட்டுக்கு வந்தாள். சட்டுன்னு என் பக்கத்தில் வெறும் தரையிலேயே உட்கார்ந்திட்டா. படிச்ச பொண்ணு மாதிரியே நடந்துக்கலை. அம்மா அம்மான்னு இருந்த பத்து நிமிஷத்துக்குள்ள வாய் நிறைய நூறு தடவை கூப்பிட்டா...'

இவ்வளவுதான் மனிதர்கள்.

'அவ சொன்னதுக்கெல்லாம் நீ என்னம்மா இப்படி தலையாட்டிட்டு இருக்க. இது நம்ம வீடும்மா...அவ என்ன செய்யனும்ன்னு நீ சொல்லும்மா...'

மகன் இப்படிச் சொல்ல, தாய் மனத்தில் மகன் பொண்டாட்டிதாசனாவான் என்கிற பயம் மெல்ல மெல்ல விலகும்.

Be Sensitive என்பார்கள். 'எம்பதி' நமக்குத் தெரிந்ததுதான். அடுத்தவர் மனத்தில் ஓடும் உணர்வுகளை அவர்கள் தெரியப்படுத்தாவிட்டாலும் புரிந்து கொள்வது. அதற்கேற்ப நடந்து கொள்வது.

'இதோ உனக்காக இந்தச் சலங்கை வாங்கினேன். சரியான அளவா என்று போட்டுப் பார்'

'என்னது சலங்கையா? நான் பரதம் ஆடுவேன்னு தெரியுமா?'

இனி தன் தனிப்பட்ட ஆர்வம் தடைப்படுமோ என்று இதற்குப் பிறகும் அந்தப் பெண் பயப்படுவாரா?

# [7. திருமணம் ஆன உடன்...]

திருமணம் என்பது அது தொடர்புடைய இருவராலும் எழுதப்படாத, கையெழுத்து இடப்படாத ஓர் அழகான ஒப்பந்தம். (திருமண பதிவு என்பது வாழ்க்கை ஒப்பந்தத்தில் சேர்த்தி இல்லை. எவர் எவரை திருமணம் செய்துகொண்டார் என்பதை சம்பந்தபட்டவர்கள் எழுதி சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்துப் போடுவதுதான் திருமணப்பதிவு.) கணவன் மனைவி உறவு என்பது இதுவரை மிகவும் வலுவாகக் கட்டப்பட்ட பந்தமாகவே இருந்து வந்திருக்கிறது.

திருமணம் என்கிற அமைப்புப் பலமாக இருப்பதற்கு முக்கியமான காரணம், சமூகக் கட்டமைப்பு. காலம் காலமாக அறிவுறுத்தப்பட்டு, முன்னிலைப்படுத்தப்பட்டு வந்த பல நடத்தை விதிகள். அதிலும் குறிப்பாக, கணவனைக் காட்டிலும் மனைவிக்கு மிக அதிகமாகச் சொல்லப்பட்டு வந்திருக்கும் வழிகாட்டுதல்கள்.

பொறுத்துப்போதல், சகித்துக்கொள்ளுதல், விட்டுக்கொடுத்தல், தியாகம் செய்தல் போன்றவை அவற்றில் சில.

ஆனால் தற்சமயம் பெரிய மாற்றங்கள் வந்திருக்கின்றன. குறிப்பாகக் கல்வியினால் பலருடைய சிந்தனையில் மாற்றங்கள் வந்திருக்கின்றன. அதிலும் பெண் கல்வி நிலையில் நல்ல முன்னேற்றம். கணிசமான மக்களின் பொருளாதார நிலையிலும் முன்னேற்றங்கள் வந்திருக்கின்றன என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

தகவல் தொழில்நுட்பம் (ஐ.டி) , பி.பி.ஓ போன்ற துறைகளில் வேலைக்குப் போகும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் நல்ல ஊதியங்கள் தொடக்கத்திலேயே கிடைக்கின்றன. சாதாரணக் குடும்பங்களில் இருந்து சென்ற பலரின் ஊதியங்கள் அவர்களுடைய பெற்றோரின் (தந்தையின்) வருமானங்களை விடக் கூடுதலாக இருக்கின்றன. இளம்வயதிலேயே சொத்துக்களை வாங்கிக் குவிக்கிறார்கள்.

இளவயதினர் அனைவருமே, ஆண்களோ பெண்களோ, தங்களுடைய வாழ்க்கையைத் தீர்மானிக்கும் உரிமை தமக்கே இருப்பதாக எண்ணுகிறார்கள். இருப்பினும் அவர்களுக்குச் சில ஆலோசனைகள் தேவைப்படுகின்றன. குறிப்பாக விவாகரத்துகள் அதிகமாகிவிட்ட நிலையில் இல்லறத்தின் சில சூட்சமங்களைக் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும்.

**சம வாய்ப்பு**

ஒப்பந்தத்தில் இருவருக்கும் சம வாய்ப்புண்டு. ஒருவருக்குக் கூடுதல் மற்றொருவருக்குக் குறைவு என்று இருந்தால் அது சரியில்லை. அதுவே திருமணத்தில் முதல் விரிசலை உருவாக்கும்.

ஒப்பந்தத்தினால், அதனை ஏற்கும் இருவருடைய தேவைகளும் நிறைவாக வேண்டும். இருவரும் விட்டுக்கொடுக்க, சகித்துப் போக, சம்மதிக்கவேண்டும்...

ஒருவர் அவல் கொண்டு வர மற்றொருவர் உமி கொண்டு வருவதல்ல. இருவரும் அவல் கொண்டு வர வேண்டும் (வரதட்சணையோ வேறு எதுவுமோ) என்பதாக இருக்க வேண்டும். நான் ஆண் என்கிற அகந்தை ஒருபோதும் கணவனிடம் இருக்கக்கூடாது. அதுபோலப் பெண்ணும் தான் ஆணின் டைமைதான் என்கிற எண்ணத்தில் திருமண வாழ்க்கையைத் தொடங்கவேண்டும்.

கணவன் உயர்வு, மனைவி மட்டம் என்பதெல்லாம் கிடையாது. இருவரும் சம உரிமையுள்ளவர்கள். சம பலமுள்ளவர்கள். இருவருக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். அவரவர்களாக விட்டுக் கொடுப்பது என்பது வேறு, ஒரு பங்குதாரரே, அடுத்தவருக்குத் தர மறுத்து, தானே எடுத்துக் கொள்வது என்பது வேறு.

திருமணம் என்கிற உறவில் நுழைகிறபோதே, இந்த மனநிலையுடன் தான் போக வேண்டும்.

ஒரு நிறுவனம் என்றால், பணம் போட்டுத் தொடங்கிய முதலாளிதான் முக்கியம் என்று ஒரு காலம் இருந்தது. அவர் பெயர் Share Holder. அந்த நிலை மாறிவிட்டது. ஷேர் ஹோல்டர் போய், ‘ஸ்டேக் ஹோல்டர்’ (Stake Holder) அணுகுமுறை வந்துவிட்டது. நிறுவனத்தின் முதலாளி, ஊழியர்கள், மூலப் பொருள்கள் தருவோர் (சப்ளையர்ஸ்), வியாபாரம் ஆக உதவுபவர்கள் (டிரேட் பார்ட்னர்கள்), வாடிக்கையாளர்கள் நிறுவனம் செலுத்துகிற வரியைப் பெறுகிற அரசு, நிறுவனம் இருக்கும் இடத்தில் உள்ள சமுதாயம் என்று பல தரப்புகள் உண்டு. அவை அனைத்துமே நிறுவனத்தினால் தாக்கம் பெறுகின்றன. வாய்ப்போ, பாதிப்போ, ஆக அவர்கள் எல்லோருமே அங்கே ‘ஸ்டேக்’ உள்ளவர்கள். அதாவது ‘பாத்தியதை’ உள்ளவர்கள்.

திருமணத்திலும் அப்படித்தான். அந்த உறவில் எது நிகழ்ந்தாலும் எவரையெல்லாம் பாதிக்குமோ, அவர்கள் எல்லாம் (கணவன்/மனைவி/ குழந்தைகள்/ பெற்றோர்) உரிமையுள்ளவர்கள்.

‘யார் உசத்தி? யார் எப்போதும் சரி? எவர் பேச்சை எவர் தட்டவே கூடாது’ என்பதெல்லாம் கூடாது. இருவரும் சம உரிமையும், கடமையும் உள்ள பங்குதாரர்கள். திருமணம் மூலம் அவர்கள் போட்டுக் கொள்வது ஓர் எழுதப்படாத, கையெழுத்திடப்படாத ஒப்பந்தம்தான்.

இந்த ஒப்பந்தத்தில் இருவருக்குமே பிடிப்பு இருக்கிறது. பின்னால் எவையெல்லாம் பிரச்னை அல்லது குழப்பம் உண்டாக்கும் என்று நினைக்கிறோமோ, அவற்றை முன்கூட்டியே யோசித்து, முடிவு செய்து கொண்டு விடலாம். தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் அங்கு வேலை செய்பவர்கள், எப்படி நடந்துகொள்ள வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பன பற்றியும், மீறி எவரேனும் முறைதவறி நடந்துகொண்டால் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பன பற்றியும் முன்கூட்டி முடிவு செய்திருப்பார்கள். அவற்றுக்குப் பெயர், ‘ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ்’, மற்றும் ‘சர்வீஸ் ரூல்ஸ்’. அது போன்ற ஒரு

விதிமுறையை நம் வாழ்க்கையிலும் பின்பற்றலாம்.

ஒருவர் திருமணத்துக்குப் பிறகு எவற்றையெல்லாம் விட்டுக் கொடுக்க வேண்டும்?

- மனைவி வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கும் பணத்தினை என்ன செய்யப்போகிறார்கள்? அவரைப் பெற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறதா? கொடுக்க இருக்கிறாரா? எவ்வளவு தொகை? எவ்வளவு காலம் வரை?

இதே போல கணவனுக்கும் சில கடமைகள் இருக்கின்றனவா?

- கணவன், மனைவி இருவரின் பெற்றோர்களை, யார், எங்கே எப்படிப் பராமரிப்பது?
- எத்தனை குழந்தைகள் என்கிற தீர்மானம். எப்போது பெற்றுக் கொள்வது என்கிற முடிவு.
- ஒருவர் மீது மற்றொருவருக்கு இருக்கும் குறைந்தபட்ச நடைமுறை எதிர்பார்ப்புகள். (குடிப்பது, புகைப்பது, பிற சிநேகிதங்கள்)
- எவற்றை விட்டுக் கொடுக்கச் சொல்லி அடுத்தவர் (கணவனோ, மனைவியோ) நிர்பந்திக்க மாட்டார் (உங்கம்மா நம்மோட இருக்கக் கூடாது).
- விட்டுக்கொடுப்பது என்றால், எவ்வளவு காலத்திற்கு, என்ன அளவில் (முதல் குழந்தை பிறக்கும் வரை).
- ஒருவருடைய முக்கிய எதிர்பார்ப்புகள் என்ன? அதை எப்படி நிறைவேற்றிக் கொள்வது? (நான் வேலைக்குப் போயே ஆவேன். என்னால் வீட்டில் சும்மா உட்கார்ந்திருக்க முடியாது.)
- குறைகள் சொல்லுவதில்லை. முக்கியமாக ஒருவரைப் பற்றி ஒருவர் வெளியாட்களிடம்.
- வீட்டு மற்றும் வெளி வேலைகளை வேலைகளைப் பகிர்ந்து கொள்வது?
- பிறர் முன்னிலையில் எப்படி நடந்து கொள்வது. (மரியாதை குறைவாகப் பேசுவதில்லை மட்டம் தட்டுவதில்லை) அடிப்பதில்லை... (அடிப்பதெல்லாம் கேவலம், மிருகத் தனம்)
- நிதி நிர்வாகம் எப்படி? (என்ன செலவு என்ன சேமிப்பு. எவர் வருமானம் எதற்கு? எது நமக்கு முக்கியம். எதனைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.)
- பிரச்னைகள் ஏதும் வந்துவிட்டால், தீர்த்துக் கொள்ளும் வழிமுறை என்ன? எவரிடம் போகலாம். (நண்பர், உறவினர் அல்லது வேறு பொது மனிதர் எவரும்) எப்படி எதிர்ப்பைக் காட்டலாம், எப்படி காட்டக் கூடாது. (சாப்பாட்டில், தூக்கி எறிவது போன்றவை, வன்முறை செய்வது, இருபாலருக்கும் இது பொருந்தும். ஆமாம்!)
- நெருங்கிய, முக்கிய நண்பர்கள் யார் யார். (இரண்டு தரப்பிலும்) அவர்களை நம் விவகாரங்களில் தலையிட எவ்வளவு தூரம் அனுமதிப்பது.

• மனைவி வேலைக்குப் போவதா? இல்லையா? போவதென்றால் ஏதும் காலவரையறை உண்டா?

• ஒருவருக்கு வேலை மாற்றம் (இடமாற்றம்) வந்தால் என்ன செய்வது?

• யார் யார் (இவரில்) எவ்வளவு பண விஷயத்தில் கமிட்மெண்ட்ஸ்' கொடுத்திருக்கிறார்கள். (பெற்றோர் கடனை அடைப்பது, தம்பி படிப்பதற்கு உதவுவது போல...) அதன் காலம், அளவு என்ன? தொடர்வதா இல்லையா?

**எதிர்பார்ப்பு**

அது நண்பர்களுக்கு இடையேயோ, அல்லது நிறுவனம் மற்றும் அதன் ஊழியர்கள் இடையேயோ அல்லது கணவன் மனைவி உட்பட வேறு உறவுகளிடத்தோ, எல்லா இடங்களிலுமே , எதிர்பார்ப்புகளுக்கும் நடைமுறைக்கும் நடுவே வருகிற இடைவெளிதான் பிரச்சனைகளுக்கு காரணம்.

ஒரு பள்ளியில் தேர்வு முடுடித்து திருத்திய விடைத்தாள்களைக் கொடுக்கிறார்கள். ஒரு மாணவன் 95 மதிபெண்கள் வாங்கியிருக்கிறான். அவனுக்குப் பக்கத்து வீட்டுப் பையன் 45 மதிபெண்கள் வாங்கியிருக்கிறான்.

மாலை மணி ஆறு. ஒரு வீட்டில், 'என்ன ஆச்சு? ஏனிப்படி?' என்று மகனைத் திட்டுகிறார்கள். இன்னொரு வீட்டில், 'ஆகா! சபாஷ்டா மகனே!!' என்று கொண்டாடுகிறார்கள்? எந்த வீட்டில் திட்டு? எந்த வீட்டில் ஆகா?

95 மதிப்பெண் வீட்டில்தான் திட்டு. காரணம் அங்கே எதிர்பார்ப்பு 99 அல்லது 100.

அடுத்த வீட்டில் 45 மதிபெண்ணுக்கே பாராட்டு. காரணம், தேர்வு நேரத்தில் உடல் நலமில்லாமல் இருந்த அவன், பெயில் ஆகியிருப்பான் என்றுதான் எதிர்பார்த்தார்கள். எதிர்பார்ப்புகள் மட்டாக இருக்கிறபோது ஓரளவு கிடைப்பதற்கே மகிழ்ச்சி. இன்னொரு வீட்டில், மதிப்பெண் அதிகமாகவே இருந்தாலும், எதிர்பார்த்ததைவிடக் குறைந்தால் வருத்தம்.

திருமணம் ஆனவர்களிடையேயும் இதே நிலைதான். நாமாக அது கணவனோ மனைவியோ, கற்பனை செய்துகொண்டு மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் மணவாழ்க்கைக்குள் போக வேண்டாம்.

நாம் திருமணம் செய்து கொள்ளவிருக்கும் நபரும் ஒரு மனிதர். அவருக்கும் மற்ற எவரையும் போல, நம்மைப்போலச் சில குறைகள் இருக்கலாம். அவரால் நாம் எதிர்பார்க்கும் எல்லாவற்றையும் செய்ய முடியாமல் போகலாம்.

எல்லாம் மிகச் சிறப்பானதாக அமையவேண்டும் என்று எதிர்பார்ப்பதுதான் பல திருமணங்கள் தோல்வி அடைவதற்குக் காரணம்.

நிறைவேறாத எதிர்பார்ப்புகள் பிரச்னைதான். மனிதர்களுடைய மிக மோசமான 'அழிவு ஏற்படுத்தும் உணர்வு' (Destructive Emotion), ஏமாற்றம் (Dissappointment)தான்.

எதிர்பார்ப்புகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதால், கிடைப்பது ஒன்றும் குறைந்து விடாது. கிடைப்பது என்னவோ கிடைக்கத்தான் போகிறது.

எதிர்பார்த்ததற்கு மேல் கிடைக்க, ஆனந்தம்தான் பெருகும். திருமணத்திற்கு முன்பே, இந்த Expectations Conditioning செய்துகொண்டு விடவேண்டும்.

தொடக்கத்தில் 'நல்லெண்ணம் உண்டாக்க விரும்புகிறேன்' என்று மிதியடி போல 'எல்லாம் சரி, எவ்வளவு வேண்டுமானாலும் என்னை மிதித்துக்கொள்' என்பது போலத் தரையில் கிடக்க வேண்டாம். அதே சமயம் 'நான் சொல்வதுதான் சரி... முடியாது என்றால் முடியாது' என்பது போல அதட்டி உருட்டவும் வேண்டாம். தொடக்கத்திலேயே நம் உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள வேண்டும். ஆனாலும் நிலைநாட்டும் விதத்தில் அடுத்தவர் கௌரவமோ, மனமோ அடிபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

•

**'என்னம்மா... அவர் எப்படி?'**

திருமணமான உடனேயே கேட்பார்கள். குறிப்பாகப் பெற்றவர்கள். அவசரப்பட்டுச் சரியில்லை என்று சொல்ல வேண்டாம். (உண்மையிலேயே கெட்டவராக, அபாய மணி அடிக்கப்பட வேண்டியிருந்தால் ஒழிய) நல்லதையே சொல்லுங்கள். இதனால் இரண்டு நன்மைகள். ஒன்று, இதனால் சரியில்லாத கணவனும் சரியாக மாறும் வாய்ப்பு உண்டு. இதனை Self Fulfilling Prophesy என்பார்கள். எண்ணம் போல வாழ்க்கை என்பார்களே அப்படி. எப்படி எதிர்பார்க்கிறோமோ அப்படியே நடந்து கொள்வார்கள். ஏனெனில் தவறாகச் சொல்லப் போக, 'அப்படியா சொன்னாய்? சரி. இனி அப்படியே நடந்து விட்டுப் போகிறேன். எப்படியும் பெயர் கெட்டாகி விட்டது. இனி என்ன?' என்று முற்றிலும் மாறி விடுகிற ஆபத்து உள்ளது.

இரண்டாவது நன்மை, 'இவ்வளவு தேடி அலைந்து சிரமப்பட்டு திருமணம் செய்து வைத்தோமே, அந்தப் பிள்ளை நன்றாகப் பார்த்துக் கொள்கிறான். நம் மகள் மகிழ்வாகத்தான் இருக்கிறாள்' என்கிற மனநிறைவு பெற்றவர்களுக்குக் கிடைக்கும்.

திருமணம் ஆன பின்பும், குறிப்பாகப் பெண்கள், தங்கள் பெற்றோரிடம், கணவன், அவன் வீட்டார் பற்றிக் குறைகள் சொல்ல வேண்டாம்.தவிர, 'அம்மா, நான் என்னம்மா செய்யட்டும்?' என்று எல்லாவற்றுக்கும் அவர்களைக் கேட்காதீர்கள். அவர்கள் வேறு, நீங்கள் வேறு. அவர்கள் முதிர்ச்சி, தேவைகள் வேறு. உங்களுடையது வேறு. இது உங்கள் வாழ்க்கை. நீங்கள்தான் நிர்வகிக்க வேண்டும். சார்ந்திருத்தலைக் குறையுங்கள்.

**என் பணம், உன் பணம்**

கணவன் மனைவிக்குள் என் பணம், உன் பணம் என்று பிரித்துப் பார்க்க முடியாதுதான். அப்படி ஒரு பெண் செய்யும் பட்சத்தில், கணவன் அதனைத் தவறாக எடுத்துக்கொண்டு பிரச்னை செய்ய ஆரம்பிக்கலாம்.

ஆனாலும்கூட, பெண் எல்லாவற்றையும் கணவனிடம் கொடுத்துவிட்டு, ஏதும் இல்லாமல் வெறும் கையுடன் நிற்பதும் முட்டாள்தனம்தான். உங்கள் நகைகள், பணம் எல்லாம் உங்களிடம் மட்டுமே இருக்கவேண்டும் என்பதில்லை. ஆனால் உங்களிடமும் (ஜாயிண்ட் அக்கவுண்டாக)

இருக்கத்தான் வேண்டும். அதுதான் பாதுகாப்பு.

இப்படிச் செய்யச் சொல்லுவதால், எல்லா ஆண்களும் அவர்தம் குடும்பங்களும் மோசமானவர்கள் என்று பொருள் அல்ல. எவர் மோசம் என்று தெரியாத காரணத்தினால் எல்லாப் பெண்களுமே அப்படி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதே ஆலோசனை.

**ஒரு வாரிசு உருவாகிறது**

இதைப் போன்றதொரு மகிழ்ச்சியான தரும் தருணம் வேறு ஒன்று இருக்க முடியுமா என்று சொல்லமுடியவில்லை. கணவன் மனைவி உறவினைப் பலப்படுத்தும் வலிமையான நேரம் இதுதான். கணவனுக்கு மனைவிமேல் கூடுதல் பிரியமும் அக்கறையும் வரும். மனைவிக்கும் கணவனைத் தேடிவரும்.

இருவரும் இப்படி இருப்பது தான் இயற்கை. ஆனால் விதிவிலக்குகளாகச் சிலர் இருப்பார்கள். அதிலும் குறிப்பாக ஆண்கள். அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டியது, இதுதான் ஒரு பெண்ணுக்கு மிகவும் முக்கியமான நேரம். இப்போது நீங்கள் காட்டும் அனுசரணைகளுக்கு கூடுதல் மதிபெண்கள் வழங்கப்படும்.

வியாபாரங்களில் அதிலும் நுகர்வு பொருள்களை விற்பனை செய்பவர்கள் மக்களைப் பலவிதங்களாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு மிகவும் பிடித்தமான (அதிகம் செலவு செய்யும் வாய்ப்பிருக்கும்) மக்கள் யார் தெரியுமா? ’டிங்க்’ மற்றும் ’டில்க் ’ தான். இதென்ன ஜப்பானிய பெயர்கள் போலிருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? இவை மனிதர்களின் பெயர்கள் அல்ல. குறிப்பிட்டவிதமாக பகுக்கப்பட்ட மக்களின் செக்மெண்டேஷன்.

டபுள் இன்கம், நோ கிட் (Double Income, No Kid) - டிங்க். டபுள் இன்கம், டிளேய்ட் கிட் (Double Income, Delayed Kid) - டில்க்.

மார்க்கெட்டிங்காரர்களுக்கு அது செளகரியமாக இருக்கலாம். நமக்கு? நம் வயது என்ன? எந்த ஆண்டு குழந்தை பிறந்தால், அதன் படிப்பு முடியும்போதும் நாம் வேலையில் இருப்போம் (ஓய்வு பெறாமல்) என்றெல்லாம் திட்டமிடுபவர்கள் இருக்கிறார்கள். எப்போது குழந்தை, எத்தனை குழந்தை என்கிற தெளிவு கட்டாயம் இருக்கவேண்டும்.

குழந்தை உண்டானவுடன் முறையான மருத்துவப் பரிசோதனைகளுக்கு அழைத்துச் செல்வது, மசக்கையில் இருக்கும் மனைவி விரும்பியதை வாங்கித் தருவது, அவருடைய வினோதமான உபாதைகளை (வாந்தி, சோர்வு அயர்வு போன்றவற்றைப்) புரிந்துகொள்ளுவது. குறிப்பாகக் காதல் திருமணம் செய்துகொண்டு பெற்றோர்களை விட்டு தனியாக இருப்பவர்களுக்கு இதனைச் சொல்லக் கூட ஆள் இருக்காது. அப்போது கணவன் தாய்மை உணர்வோடு இருக்கவேண்டும்.

கணவன் மீது பிரியம் வருகிறதை விடக் கூடுதலாகப் பெண்களுக்கு, அவர்களுடைய தாயைத் தேடிவரலாம். இல்லையா பின்னே! தேடித்தான் வரும். ‘நீ போய் வா. அங்கே கூடுதல் நாட்கள் கூட இரு’ என்று புரிந்துகொண்டு சொல்லும் கணவன் , தெய்வம்.

ஒரு உடம்புக்குள் இன்னொரு உயிரினை உண்டாக வைப்பதும் அதனை

உள்ளேயே வைத்து வளர்ப்பதும், அது இறைவனோ இயற்கையோ, அற்புதம். அந்த அற்புதம் நிகழ இடம் கொடுப்பதும், அதன் வலிகளைச் சுமப்பதும் மனைவிதான்.

ஒன்றிரெண்டு நாட்கள் என்றால் கூடப் பரவாயில்லை. பத்து மாதங்கள் என்பது எவ்வளவு நீண்ட காலம்.! இதனோடு பாவம் வேலைக்கும் போயாக வேண்டும். இவற்றைப் புரிந்து கொண்டு இந்த நேரங்களில் கூடுதல் அனுசரணையோடு கட்டாயம் நடந்துகொள்ள வேண்டும். 'நாங்களும் பிள்ளைகளைப் பெற்றவர்கள்தாண்டா. ஒரேயடியாக உன் மனைவியைத் தாங்காதே என்று உங்கள் தாயே சொன்னால்கூடப் பொருட்படுத்த வேண்டாம். கூடுதல் கனிவினால் தவறு ஒன்றும் நிகழ்ந்துவிடாது.

கருவுற்றிருக்கும் நேரம், மனம் மகிழ்வாக இருக்க வேண்டியது அவசியம். அதற்குக் கணவனின் உதவி முக்கியம். கண்கலங்க வைக்கவே கூடாது. அழவைப்பதெல்லாம் அநியாயம். இதுபோன்ற நேரங்களில் ஈகோ பார்க்காமல் கணவன் கூடுதலாகவே விட்டுக்கொடுக்கலாம். கொடுக்க வேண்டும்.

## தள்ளிப்போடுவது

சிலர் குழந்தை எப்போது என்பதைத் தெளிவாகத் திட்டமிட்டிருப்பார்கள். எது வரை வேண்டாம் என்பதை தம்பதியர் தீர்மானிக்க முடியும். அது அவர்களிடம் இருக்கிறது. அதற்கான வழிகள் இருக்கின்றன.

ஆனால் எப்போது வேண்டும், கிடைக்க வேண்டும் என்று நினைக்கிறோமோ அப்போது கட்டாயம் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. சிலருக்கு இந்த வாய்ப்புத் தள்ளிக்கொண்டே போகும். ஒரு சிலருக்கு இறுதிவரைக் கிடைக்கவே கிடைக்காது.

உடல் என்பது ஆயிரக்கணக்கான வேதியியல் பொருள்களால் நடத்தப்படும் ஒரு அற்புதமான தொழிலகம் போன்றது. மருந்து மாத்திரைகள் மூலம் கர்ப்பமாவதைத் தடுக்கும்போது அதற்குப் பக்க விளைவுகள் இருக்கலாம். அதன் காரணமாக நாம் விருப்பப்படும்போது குழந்தை கிடைப்பது தாமதமாகலாம். அல்லது பிறக்கும் குழந்தைகளுக்கு வேறு குறைகளும் ஏற்படலாம்.

முதல் குழந்தையை கூடிய வரை கிடைக்கும்போதே பெற்றுக்கொள்வது புத்திசாலித்தனம்.

தகுந்த மருத்துவர்களின் ஆலோசனைகளே நன்மை தரும். அம்மா, மாமியார் போன்றவர்கள் அன்பு மிகுதியால் அல்லது அனுபவத்தில் சொன்னாலும் அது சரியான மருத்துவரின் ஆலோச்னைக்கு ஈடில்லை.

பிரசவச் செலவுகள்- மெடிகிளைம் பாலிசிகள் தரும் பாதுகாப்பு

பிரசவச் செலவு என்பது பல தம்பதியரால் சமாளிக்க முடியாதது. ஆனால் இப்போது அவற்றுக்கும் சுலபமான வழிகள் இருக்கின்றன. திருமணம் ஆன உடனேயே , கணவனுக்கும் மனைவிக்கும் ( மனைவிக்குக் கட்டாயம்) ஹாஸ்பிடைலேஷன் மருத்துவ இன்சூரன்ஸ் பாலிசி எடுத்துவிட வேண்டும். கருவுற்ற பின் எடுக்கும் பாலிசிகளுக்கு பிரசவச் செலவுப் பணம் கிடைக்காமல் போகலாம்.

50 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்த பணத்தினைக் காப்பீட்டு

நிறுவனத்திடம் இருந்து பெறுவதற்கு ஆண்டுக்கு ( தற்சமயம்- 2012) சுமார் 4000 ரூபாய் பிரிமியம் கட்டவேண்டும். ஏகப்பட்ட காப்பீட்டு நிறுவனங்களும் அவற்றில் ஏராளமான திட்டங்கள் கொண்டுள்ளன. பிறக்கின்ற குழந்தையின் மருத்துவ செலவுகளுக்குக்கூடக் காப்பீடு எடுக்க முடியும். கூடுதல் பிரிமியம் கட்ட வேண்டியிருக்கும். பணி செய்யும் நிறுவனங்களிலும் இப்படிப்பட்ட காப்பீட்டு வசதிகள் இருக்கலாம். எப்படிப் பார்த்தாலும் எவருக்கும் பாலிசி இருப்பதுதான் பாதுகாப்பு. பிரசவம் மட்டுமில்லை. மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறவேண்டிய வேறு சில பிரச்சனைகளுக்கும்கூட இது உதவியாக இருக்கும். ஆண்டுக்கு 4000 ரூபாய் என்பது, கிடைக்கக் கூடிய பலனுடன் ஒப்பிட்டால் , சிறிய தொகைதான்.

# 8. இல்லற வாழ்க்கை வெற்றி பெற...

**சு**த்தம்

காதல், காதலிப்பது போன்றவை திருமணம் ஆகாதவர்களுக்குத்தான் முக்கியம், திருமணம் ஆகிற வரைதான் அவை தேவை என்கிற எண்ணம் பலரிடமும் இருக்கிறது. திருமணத்துக்குப் பிறகும் காதலிக்கலாம் என்பதைப் பலரும் உணர்வதில்லை.

சுத்தமாக இருப்பது, தேர்வு செய்து உடை அணிவது, அக்கறையாக அலங்காரம் செய்து கொள்வது போன்றவை காதல் வயப்பட்டிருப்பவர்களின் செய்கைகள். சரியாகச் சொல்வதென்றால், காதல் ஏற்றுக் கொள்ளப்படுகிறவரைத் தீவிரமாகச் செய்யப்படுபவைதான் இவை.

ஒரு விற்பனையாளர், தன் வியாபாரப் பொருளைத் தூசு தட்டி, துடைத்துத் துடைத்து வைப்பது போல. ஒரு பழ வியாபாரி தினசரி கர்மச் சிரத்தையாகக் கூடையில் இருக்கும் ஒவ்வொரு பழத்தினையும், துண்டால் துடைத்துத் துடைத்து வைப்பதுபோல. ஒரு விற்பனை முடிந்ததும் அந்தச் செயலை விட்டு விடுவதில்லை.

காதலிக்கும்போது ஒரு பெர்சனாலிட்டி அதன்பிறகு வேறு தோற்றம் என்று இருக்கக்கூடாது. காதலுக்கு முன், காதலுக்குப் பின் என்று எல்லாக் காலகட்டங்களிலுமே நேர்த்தியாக இருப்பதுதான் நல்லது.

விசேஷங்களுக்கு போகும்போது மட்டும் வெள்ளையும் சொள்ளையுமாக செல்பவர்கள் உண்டு. வீட்டில் அழுக்கு வேட்டி, லுங்கி அல்லது ஷார்ட்ஸ் போட்டுக் கொண்டிருப்பார்கள். அழுக்குச் சேலைகள் நைட்டிகளும் இதில் அடக்கம்.

‘கணவன் மனைவிக்குள் என்ன பெரிதாக ‘இம்ப்பிரஸ்’ செய்ய வேண்டிக் கிடக்கு’ என்று எண்ண வேண்டாம். தன்னையறியாமல் அடுத்தவர்கள் பற்றிய மதிப்பீடுகள் ஒவ்வொருவர் மனதிற்குள்ளும் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கின்றன.

பேசுவது, நடந்து கொள்வது போன்ற நடத்தைகள் மட்டுமல்ல. சுத்தம், தோற்றம் போன்றவையும் கூட அந்தத் தாக்கங்களை உண்டு செய்கின்றன. சுத்தம் என்பது ஆரோக்கியத்துக்கு மட்டுமல்ல, வாழ்க்கைத் துணையின் நன்மதிப்பைப் பெறவும் தேவையான ஒன்று. வாய் நாற்றம், உடலில் வியர்வை நாற்றம், அழுக்கான உடைகள், நகங்களில் அழுக்கு, காயங்களில் சீழ் போன்றவை சிரமம் கொடுக்கத்தான் செய்யும். கண், காது, மூக்கு கை, கால் விரல், நகங்கள் என்று சுத்தப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டியவை நிறையவே உள்ளன.

இதனால் என்ன ஆகிவிடப்போகிறது என்று தோன்றலாம். ஆனால்

இதுபோன்ற சின்னச் சின்னக் குறைகள்தான் பெரிய பிரச்னைக்கு வழிவகுத்து பிறவுக்குக் காரணமாக ஆகிவிடும்.

**உடைகள்**

பொது இடங்கள், நிகழ்ச்சிகளுக்குப் போகிறபோது, அதற்கு ஏற்றாற்போல உடை அணிவது சரிதான். ஆனால் மற்ற நேரங்களில், கணவன் மனைவிக்குப் பிடித்த விதம், பிடித்த நிறங்களில் உடை அணிந்து ஸ்கோர் செய்யலாம்.

உடைகள் தானே. நான்தானே அணிகிறேன். அவளுக்கு, அவருக்கு என்ன என்று தோன்றலாம். 'குதிரை வால் (போனிடெயில்) உனக்கு நல்லாயில்லை' என்று கணவன் கூறினால் அதை உடனே மாற்றிவிடலாம். இது கணவருக்கு மனைவிமீது அதிகப் பிரியத்தை உண்டுபண்ணும். தனக்காகச் சின்ன விஷயத்தில்கூட விட்டுக்கொடுக்கிறாள் என்று. ஆனால் அவர் சொல்வது சரி என்று உங்களுக்கும் படவேண்டும். ஒருவேளை நீங்கள் கவனிக்காத தவறை அவர் கவனித்திருந்தால் உடனே கேட்டுக்கொண்டுவது உத்தமம். நீங்கள் யார் சொல்வது என்று திமிற முனைந்தால் அங்கேயே கருத்து வேறுபாடுகள் தோன்றலாம்.

'அரைக்கை சட்டைதான் உங்களுக்கு ஸ்மார்ட்டாக இருக்கிறது' என்று மனைவி சொன்ன பிறகும், முழுக்கைச் சட்டைகள் அணிவதுகூட பிரச்னையை ஏற்படுத்தும். உடை உடுத்துவது உடலை மறைப்பதற்கு மட்டுமல்ல, அடுத்தவர் அதைப் பார்த்து ரசிப்பதற்கும்தான். நம்முடைய முதல் ரசிகையாக மனைவி இருக்கும்போது அதைக் கேட்பதுதானே நலம்.

**தனிக் குடித்தனம்**

திருமணம் ஆனபிறகு ஏற்படும் குழப்பங்கள், பிரச்னைகளுக்கு காரணமானவற்றில், இதுவும் ஒன்று. கவனமாகக் கையாளப்பட வேண்டிய ஒன்றும் கூட. கூட்டுக்குடும்பமா? தனிக்குடித்தனமா? இந்தப் பட்டிமன்றத்தில் பிள்ளையைப் பெற்றவர்கள் கூட்டுக்குடும்பம் என்கிற அணியில் வாதாடுவார்கள். பெண்ணைப் பெற்றவர்கள் தனிக்குடித்தனம் என்கிற தலைப்பில் வாதாடுவார்கள். கணவனும் மனைவியும் தீர்வு சொல்ல வேண்டிய நடுவர்கள். ஆனால் சமயத்தில் அவர்களும் கட்சி மாறிவிடுவார்கள்.

அதிகாரக் குணம் உள்ள பெற்றோர்களிடம் மனைவியை விட்டுவிட்டு வேலைக்குப் போகும் கணவன் யோசிக்க வேண்டும். மனைவிக்கு அவஸ்தை என்றால்,

தனிக்குடித்தனம் என்றுதான் முடிவெடுக்கத்தான் வேண்டும். ஆனால் இதனால் இரு உறவுகளிலும் ஏதும் கருத்துவேறுபாடுகள் வந்துவிடக்கூடாது. அலுவலகம் வந்து செல்வதற்கு நேரம் ஆகிறது என்று அலுவலகத்துக்கு எதிரே வீடு பார்க்கலாம். அல்லது இடநெருக்கடியைக் காரணமாகச் சொல்லலாம். மனவருத்தம் ஏற்படாதவாறு இப்பிரச்னையை அணுகவேண்டும்.

பெற்றோர் நல்லவர்கள். மனைவி மீதும் பிரியமாக இருக்கிறார்கள் என்றால் சேர்ந்திருப்பதே இரண்டு குடும்பங்களுக்கும் பாதுகாப்பு. எதையும் காதில் போட்டுக் கொள்ளாமல், 'பொறுத்துப் போ, பொறுத்துப் போ' என்று

மனைவியிடம் சொல்வது சரியல்ல. மகளிடம் மகனிடம் காட்டும் அதே முகத்தையும் அக்கறையையும், பரிவையும் சில தாய்மார்கள் மருமகள்களிடம் காட்டுவதில்லை.

திருமணம் செய்து கொண்ட ஒரே காரணத்துக்காக மாமனார் மாமியார், கணவரின் சகோதர சகோதரிகள் என்று பலருக்கும் ஒரே ஆள் (மனைவி) ஓடியாடி வேலை செய்யமுடியாது. தேவையுமில்லை. இங்கே கணவன் மற்ற தாக்கங்களைப் பற்றி யோசிக்காமல், மனைவிக்கும் கௌரவமான, சௌகரியமான வாழ்க்கைக்கு ஏற்பாடு செய்து தர வேண்டும்.

'எனக்குத் தெரியாது நீயே சமாளித்துக் கொள்' 'எல்லாம் போகப் போகச் சரியாகி விடும்' என்று கண்டுகொள்ளாமல் இருப்பது மனைவியை மிகவும் வேதனைப்படுத்தும். என்ன?

அதேபோலப் பெண்களும் மாமியார், மாமனாரை இன்னொரு பெற்றோராக எண்ணினால் பாதிப் பிரச்னை தீர்ந்துவிடும். 'என் அம்மா வீட்டில் இப்படி... அப்படி...' என்பது போலப் பேசுவது, மாமனார் மாமியாரை மதியாமல் இருப்பது. கணவன் தவிர மற்ற அனைவரிடத்தும் அலட்சியமாக நடந்து கொள்வது, வீட்டில் உள்ளவர்களுடன் ஒத்துப் போகாமல், 'எனக்குத் தெரியும்', 'நான் இப்படித்தான்', 'இது என் வீடு' என்பது போன்ற அணுகுமுறைகளைக் கையாள்வது இல்லறம் என்கிற புனிதத்தன்மையைக் கெடுத்துவிடும். இதனால் வீட்டில் தேவையின்றி அசாதாரணமான சூழல் நிலவும்

மாமனார் மாமியார் படிப்பில் குறைவாக, வாழ்க்கைத் தரத்தில் சுமாராக இருக்கலாம். அதை மனத்தில் நிறுத்தி, அவர்களிடம் வித்தியாசமாக நடந்து கொள்வது பிரச்னைகளைத்தான் உண்டாக்கும். அவர்கள் முந்திய தலைமுறையினர். நிச்சயம் நம் ரசனையோடும் சிந்தனைகளோடும் ஒத்துப்போகமாட்டார்கள். அவர்களைப் பொறுத்துப்போவது நம் கடமை. அத்தனை செய்தும் அவர்கள் தங்கள் அதிகாரத்தை நிறுத்தவில்லையென்றால்தான் தனிகுடித்தனம் பற்றி யோசிக்கவேண்டும்.

சில பெண்ணைப் பெற்றவர்கள், நல்ல வசதியாக இருப்பார்கள். பெண் மீது மிகவும் பாசமாகவும் இருப்பார்கள். திருமணத்தின் மூலம் மகளைப் பிரிய வேண்டியிருக்கிறதே என்று யோசிப்பார்கள். அதனால் வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்கக் கூடியவரை தேடுவார்கள். சில அதிகார மனப்பான்மை உள்ள பெண்களும், பெற்றோரின் இந்த அணுகுமுறைக்கு ஒத்துப் போவார்கள். தொடக்கத்தில் சரியாக வந்தாலும் கூட, ஏதோ ஒரு நாள் பூகம்பம் வெடிக்கும். கஞ்சியோ, கூழோ, கணவன் - மனைவி இருவரும் சுயமாகச் சம்பாதிப்பது வாழ்க்கை நடத்துவதுதான் இல்லறதுக்கு நல்லது

**பெற்றோர்/உறவுகள் தொடர்பு**

இரண்டு தனி மனிதர்கள், அதுவும் இளவயதினர். ஒரே போலச் சிந்திப்பது. விட்டுக்கொடுத்துப் போவது எல்லாம் சிரமம்தான். Ego முன் நிற்கும். நீயா, நானா? போட்டிகள் வந்துவிடும். இந்த உராய்வுகளைக் குறைப்பதுதான் கூட்டுக் குடும்பம். அனுபவப்பட்டவர்கள், நம்மீது அக்கறையுள்ளவர்கள் பெற்றோர்.

வயதில் மூத்தவர்களை நம் குடும்பத்தில், குடும்ப நிகழ்வுகளில் பங்கு பெறச் செய்தால் அங்கு மகிழ்ச்சி வெள்ளமாகப் பொங்கி வழியும். ஒற்றுமை வலுப்பெறும். அதேசமயம் நம்முடைய அந்தரங்களில் பெரியவர்களைத் தேவையிருந்தால் மட்டுமே கலந்து ஆலோசிக்கவேண்டும். உதாரணமாகக் குழந்தை பெறுகிற முடிவில் நிச்சயம் பெரியவர்கள் உடனே பெற்றுக்கொள்ளுங்கள் என்றுதான் சொல்வார்கள். ஆனால் நம்முடைய விருப்பம் வேறாக இருக்கும். இதுபோன்ற தருணங்களில் நம்முடையச் சொந்தக் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

சில ஆண்கள் அவர்களுடைய பெற்றோர்க்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள். அன்பு, நன்றி, மரியாதை, பயம் என்று அதற்குக் காரணங்கள் எதுவாகவும் இருக்கலாம். திருமணம் ஆனபிறகும், பெற்றோர்களையே சார்ந்திருப்பார்கள். எல்லாவற்றுக்கும் ஆலோசனை கேட்பார்கள். அவர்கள் சொன்னபடி அப்படியே செய்வார்கள்.

சில தம்பதியர் நிலை சிரமமானது. காரணம், கணவன் - மனைவி ஆகிய இருவரின் பெற்றோர்களுமே ‘இது இப்படித்தான்’ என்பது போல உறுதியாக இருப்பார்கள். விட்டுக் கொடுத்தல் என்கிற குணம் இருந்துவிட்டால் எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்துவிடும். அதேசமயம் அவர்கள் சொல்வதில் நமக்கு வேறுபாடுகள் இருக்கிற நிலையில் தர்மசங்கடம்தான்.

பொதுவாக கணவனும் மனைவியுமாகக் கலந்து பேசி, எதற்குத் தாங்களே முடிவெடுப்பது, எவற்றுக்கு பெற்றவர்களைக் கேட்பது, எவற்றில் எந்தப் பெற்றோர் சொல்வதைக் கேட்பது என்பனவற்றை முடிவு செய்து கொள்ளலாம்.

இங்கே வெளிப்படையாக இருப்பதைவிடப் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வதே நல்லது. இரு வீட்டாரையும் சமமாக மதிப்பது, சமதூரத்தில் வைப்பது போன்றவற்றையும் தொடக்கம் முதலே யோசிக்கலாம், நடைமுறைப்படுத்தலாம்.

**சகிப்புத்தன்மை**

எல்லா மனிதர்களும் ஒன்றுபோலில்லை. அழகு, திறமை, புரிந்துணர்வு போன்ற பலவற்றிலும் வேறுபாடுகள் உண்டு. நம் நிலை வேறாக இருக்கலாம். நம் உணர்வு, பழக்க வழக்கங்கள், நம் புரிந்து கொள்ளும் திறன், பேச்சுத் திறன், வேகம், ஒழுங்கு, நேர்த்தி, சுத்தம் என்று பலவிதங்களில் நாம் அடுத்தவரோடு வேறுபடலாம்.

நம்மிலிருந்து வேறுபட்டவர்களையும் புரிந்து கொள்வது ஏற்றுக் கொள்வது என்பதுதான் சகிப்புத்தன்மை. நாம் அவரைப் பற்றி அறிந்தது குறைவாக இருக்கலாம். திருமணத்துக்குப் பிறகு, சில அதிர்ச்சிகளேகூட வரலாம். தேவை பொறுமை. தேவை, புரிந்து கொள்ளும் பக்குவம். பொறுத்துப் போகும் அணுகுமுறை.

‘நான் டீதான் குடிப்பேன், அதனால் இனி நீயும் டீதான் குடிக்கவேண்டும்’ என்று உணவுப் பழக்கத்தில் மட்டுமல்ல, எதிலுமே, அடுத்தவரை ‘இனி இப்படித்தான்’ என்று அறிவுறுத்துவது தவறு. இதனால் உங்களுடைய துணைவரைக் கட்டளைகளால் அடக்க நினைத்தால் அவர் அதிர்ச்சியடையலாம், மிரளலாம். குடும்பத்தின் அமைதி இதனால்

கெடலாம்.

## அனுசரித்துப் போதல்

நடிகை சரோஜாதேவி ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் சொன்னது இது. என் கணவரை நான் திருமணத்திற்கு முன்பு நான் பார்க்கவே இல்லை. அம்மா சொன்னார்கள் இவர் தான் மாப்பிள்ளை என்று. சரி என்று சம்மதம் சொன்னேன்.

அவர்கள் குடும்ப வழக்கப்படி திருமணம் முடிந்த பின்பு தம்பதியர் இருவரும் கைகளில் அரிசியும் சீரகமும் வைத்துக்கொண்டு எதிர் எதிரே நிற்கவேண்டும். இருவருக்கும் இடையே ஒரு சேலையைத் திரைபோலப் பிடித்திருப்பார்கள். அதை இறக்கிய உடனேயே, கணவன், மனைவி தலையிலும், மனைவி கணவன் தலையிலும் , கையில் இருப்பதை உடனே கொட்டிவிடவேண்டும். யார் முதலில் கொட்டுகிறார்களோ, அவர்கள் தான், வாழ்க்கையில் அடுத்தவர் மீது அதிக அதிகாரம் செலுத்துவார்கள் என்று அதற்கு அர்த்தமாம்.

சரோஜாதேவியின் தோழிகள், ‘விட்டுவிடாதே. அவர் கொட்டுவதற்கு முன், நீ கொட்டிவிட வேண்டும். உஷார், உஷார்’ என்று சொல்லிகொண்டேயிருக்க சரோஜாதேவியும் தயாராகவே இருந்தார்.

திரை விலகியது. சரோஜாதேவி படபடப்புடன் கணவர் தலையில் கொட்டினார். ஆனால் பதிலுக்கு அவர் தலையில் எதுவும் விழவில்லை. ‘என்ன ஆச்சு!’ என்று அவர் நிமிர்ந்துபார்க்க, கணவர் கையில் அரிசியும் சீரகமும் அப்படியே இருக்கிறது. பின்பு மெதுவாக சரோஜாதேவி தலையில் கொட்டியபடியே அவர் சொன்னாராம், ‘அவளே டாமினேட் (அதிகாரம்) செய்யட்டுமே! அவள் பேச்சை நான் கேட்டுவிட்டுப் போகிறேன்’ என்று.

அப்படியே நெகிழ்ந்துபோய்விட்டாராம் சரோஜாதேவி.

விருப்பு வெறுப்புகள், பழக்க வழக்கங்களில் புதிய பங்குதாரரை அனுசரித்துப் போக வேண்டும். அதற்கு நாம் விட்டுக்கொடுக்க வேண்டும். நம் விருப்பங்களை, நம் பழக்கங்களை. அதில்தானே சுகம். அதில்தானே அடுத்தவரும் அப்படியே செய்ய முற்படுகிறார்.

‘நான் விட்டுக்கொடுக்க முடியாது’

‘நானும் விட்டுக்கொடுக்க முடியாது. எனக்கு மட்டும் என்ன குறைச்சல்’

போட்டி இருக்கலாம். அது இரண்டு உறவுகளுக்கிடையே நெருக்கத்தை அதிகரிக்கும் போட்டியாக இருக்க வேண்டும்.

‘உனக்காக… நான் விட்டு விடுகிறேன். நீ சொல்வதையே செய்யலாம்…’

‘முடியாது. நீங்கள் விரும்புவதைத்தான் நாம் செய்ய வேண்டும். என்னாலும் விட்டுக் கொடுக்க முடியும்.’

## தேவைகளைப் புரிந்து கொள்ளுதல்

கேட்டுக் கொள்ளுதல் என்பதற்கும் புரிந்து கொள்ளுதல் என்பதற்கும் வேறுபாடு உண்டு. சொன்னால்தான் ஒன்றைக் கேட்டுக் கொள்ள முடியும். அடுத்தவர் சொல்லாமலே, நாம் தெரிந்து கொள்வதுதான் புரிந்து கொள்ளுதல்.

மரியாதை, இங்கிதம், சங்கோஜம், வெட்கம், பயம் போன்ற பல்வேறு காரணங்களுக்காக, நம் பங்குதாரர், தன் தேவையைச் சொல்லாமல் இருக்கலாம். அந்தத் தேவை உடல் தேவை உட்பட எதுவாகவும் இருக்கலாம்.

புரிந்து கொண்டு இயங்குபவர்கள் வெற்றி பெறுகிறார்கள். கேட்பதற்கு முன் கொடுப்பது. தெரிவித்தவுடன் தருவது.

சினிமா பாடல் வரிகள்கூட உண்டே.

‘பாராமல் போன பௌர்ணமி எல்லாம்

பறித்துக்கொடுக்கும் ஒருவன்

கேளாமல் போன பாடலையெல்லாம்

திரட்டிக்கொடுக்கும் ஒருவன்

தீராமல் போன ஆசைகளையெல்லாம்

தீர்க்கத் தெரிந்த ஒருவன்...’

### எம்பதி

குடும்பத்தில் தவறுகள் நிகழலாம். சொன்ன நேரம் தவறலாம். முக்கியமானவைகள் நடைபெறாமல் நின்று விடலாம். சொன்ன நேரத்துக்கு வரமுடியாமல் போகலாம். அதனால் நமக்குச் சிரமம்கூட ஏற்படலாம். காரணம் கணவர் - மனைவி என்கிற பந்தம்.

கணவன் மனைவிக்குள் சண்டை வந்தால் என்ன செய்யலாம்? திட்டலாம், கோபிக்கலாம், முகத்தைத் திருப்பிக் கொள்ளலாம், பேசாமல் இருக்கலாம், தண்டிக்கக் கூடச் செய்யலாம்.

ஆனால் இதையே வேறுமாதிரி செய்யலாமே. நீ என் சொல்லைக் கேட்கவில்லை என்று கோபம் கொள்வதைவிட எதனால் மனைவி தன் பேச்சை மறுக்கிறார், எதனால் முடியாமல் போனது என்று அவர் பக்கத்துக் காரணத்தை, நியாயத்தைப் புரிந்து கொள்பவர்கள், மதிப்பவர்கள் பெரிதும் மதிக்கப்படுகிறார்கள், விரும்பப்படுகிறார்கள். தன் இழப்பிலும், அடுத்தவர் நியாயம் புரிந்து கொள்ளுதல். கணவன், மனைவி என்றில்லை எப்போது நாம் அடுத்தவர் பிரச்னைகளுக்குக் காது கொடுக்கிறோமோ அப்போது நம்முடைய மதிப்பு அடுத்தவரிடம் உயர்ந்துவிடும்.

கணவன் அலுவலகம் போய்விட்டார். வீட்டில் மனைவியும் அவர்களின் ஒரே செல்ல மகனும். வயது மூன்றுதான். மனைவி சமையலறையில் வேலையாக இருக்க... அவர்கள் மறதியாகக் கழிவறைக்கு வெளியில் வைத்துவிட்ட, ஒரு மருந்தினை மகன் குடித்து விடுகிறான். சற்று நேரத்தில் குழந்தையின் உயிர் பிரிந்து விடுகிறது. மனைவி கதறுகிறார். குமுறிக் குமுறி அழுகிறார்.

‘இப்படி முட்டாள்தனமாக இருந்துவிட்டேனே! என் அசட்டையின் காரணமாக எங்கள் அருமைப் பிள்ளையை பறிகொடுத்துவிட்டேனே! அவர் வந்தால் என்னைக் கொல்லப்போகிறார் என்று துயரத்திலும் அவர் அச்சப்படுகிறார்

செய்தி கேள்விப்பட்டுக் கணவன் பறந்து வருகிறார். வரும் வழியெல்லாம்

அவரும் அழுதுகொண்டே வருகிறார். வீட்டுக்குள் நுழைந்ததும் சவமாய்க் கிடக்கும் செல்ல மகனைப் பார்க்கிறார். அருகில் சோகமே வடிவாக அமர்ந்திருக்கும் மனைவியையும் பார்க்கிறார்.

எல்லோரும் கணவனின் நடவடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். மகன்மீது அசட்டையாக இருந்த மனைவியை அவர் தாக்கப்போகிறார் என்று அச்சப்பட்ட போதுதான் அது நடந்தது.

மனைவியின் அருகில் போய் அமர்கிறார். முகம் புதைத்து அழும் மனைவியைத் தேற்றுகிறார். மனைவிக்கு அதிர்ச்சி. இக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கும் அனைவரும் அதிர்ச்சி. கணவரின் நடவடிக்கையில் சிறிதுகூடக் கோபம் இல்லை. பழி வாங்குதல் இல்லை.

'நீ என்ன தெரிந்தா செய்திருப்பாய்!. உனக்கும்தானே எவ்வளவோ வருத்தமும் துக்கமும் இருக்கும். உனக்கும் மகன்'தானே. நீதானே சுமந்து பெற்றாய். என்னைவிட உனக்குத்தானே அதிக வலி இருக்கும்' என்று மனைவியைக் கட்டி அணைத்துக்கொண்டு அழுதார் அவர்.

**அன்பு கணக்கில் வரவு வைத்தல்**

மதிப்பு என்பது எல்லோராலும் வேண்டப்படுகிற ஒன்று. குழந்தைகளே கூட அவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும். சொல்கிறபடிச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இருவரில் ஒருவர் கூடுதல் புத்திசாலியாக இருக்கலாம். அதிகம் படித்தவராக, திறமையானவராக இருக்கலாம். அல்லது நாம் அப்படி நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனாலும் அவர் சொல்வதைக் கேட்க வேண்டும். என்ன செய்யலாம் என்று கேட்க வேண்டும். என்ன நடந்தது என்பதைப் பகிர வேண்டும். கேள்விகளுக்கு விபரமாகப் பதில் சொல்ல வேண்டும்.

பகிர்தலில் அறிவுக்கு இடமில்லை. அங்கு மதிப்பு, மரியாதை போன்ற உணர்வுகளுக்கு மட்டுமே மரியாதை. நம்மை அவர் மதிக்கிறார் என்கிற உணர்வு கிடைக்கிறபோது, திருமண உறவு வலுப்படுகிறது. அவர் அவ்ளோ பெரிய ஆள். ஆபிஸ்ல அவரைப் பார்த்தா நடுங்குவாங்க. ஆனால் என்னைக் கேக்காம அவர் ஒரு காரியம்கூடச் செய்யமாட்டார் என்று பெருமைபடப் பேசும் பெண்கள் எத்தனை பேரைப் பார்த்திருக்கிறோம்!

**நேரம் செலவழிப்பது**

உள்ளூரிலேயே இருக்கிறோம். ஒரே வீடுதான். இவை மட்டுமே போதுமா என்ன? ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, நேசிக்கத் தொடங்க வேண்டும் என்றால், அதிக நேரம் ஒன்றாக இருக்க வேண்டும். எப்போதும் அலுவலகம், அல்லது தொடர்ந்து நண்பர்களுடனே நேரம் செலவிடல், படுக்க மட்டும் வீட்டுக்கு வருதல் என்று இருந்தால் எப்படி கணவன் - மனைவி இடையே ஒற்றுமை மேம்படும்?

பல திருமணங்கள் உடைவதற்கு முக்கிய காரணமாகச் சொல்லப்படுவது, கணவர் என்னிடம் நேரம் செலுத்துவதேயில்லை. 'எப்போது பார்த்தாலும் பிஸினஸ், பிஸினஸ் என்று இருக்கிறார். பிறகு ஏன் என்னைக் கட்டிக்கொண்டார்?' போன்ற குற்றச்சாட்டுகளால்தான்.

**இல்லறம்**

யாயும் ஞாயும் யாராகியரோ

எந்தையும் நுந்தையும் எம்முறை கேளீர்

யானும் யாதும் எவ்வழி அறிதும்

செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சம்

தாம் கலந்தனவே

என்று சங்க இலக்கியப் பாடல் சொல்லுகிறது. ஒருவரை ஒருவருக்குத் தெரியாது. ஆனால் அப்படி ஒரு ஈர்ப்பு, காதல், அன்பு. என்ன காரணம்? ஆரம்ப ஈர்ப்பு ஆண் - பெண் வித்தியாசம்தான். இன்பம் தொடர்பான ஆர்வத்தை அதுவே தூண்டுகிறது. .

பசி, தூக்கம் போல உடல் வேட்கையும் இயற்கையானது. வாலிபப் பருவத்தில் தொடங்கிச் சிலருக்கு அறுபது வயது வரை கூட அதில் ஆர்வம் குறைவதில்லை. படைப்பு அப்படி. ஹார்மோன்கள் சுரந்து கொண்டே இருக்கும் வரை, இந்தத் தேவையும் தொடரும். அந்தப் பசியும் ஆற்றப்படவேண்டியதே. அந்தத் தீயை அணைத்துக்கொண்டே இருக்க வேண்டும்.

உடல்வாகு, மனப்பாங்குகள் பொறுத்து இந்தத் தேவைகள் சிலருக்கு அதிகமாகவும் வேறு சிலருக்குக் குறைவாகவும் இருக்கலாம். புரிந்துகொள்ளவேண்டும்.

'வயது ஆகிக் கொண்டேயிருக்கிறது' 'பெற்றோரின் வற்புறுத்தலினால்' என்பது போன்ற காரணங்களுக்காக (கட்டாயங்களுக்காக) திருமணம் செய்து கொள்பவர்கள் இருக்கிறார்கள். திருமணம் என்கிற சடங்கு முடிந்ததும், மாலையைக் கழற்றி விட்டுத் தங்கள் வேலையைப் பார்க்கக் கிளம்பி விடுவார்கள்.

சாதனை செய்யும் ஆர்வம் அவர்கள் கண்ணில் மின்னும். தொழிலோ, வியாபாரமோ, வேலையோ... அங்கே தடைகளை உடைத்தாக வேண்டும். சாதித்தாக வேண்டும் என்கிற வெறியோடு சுற்றி வருவார்கள். அதனால், கைப்பிடித்து அழைத்து வந்த மனைவி பற்றி, அவர்களுடைய எதிர்பார்ப்புகள், தேவைகள் பற்றிக் கவனம் வரப் பெறாமலேயே இருப்பார்கள்.

பெண்களால் இதை வாயை விட்டுக் கேட்க முடியாது. கேட்டால், கேவலமாகப் பார்ப்பார்கள். ஆனால் பருவம் காரணமாக, பெண்ணுக்குள் எரியும் நெருப்பை என்ன செய்வது? கணவன்தானே அணைக்க வேண்டும்?

திருமணத்திற்கு ஒப்புக்கொண்டு விட்டால், செய்து கொண்டு விட்டால், அதற்கு நேர்மையானவராக நடந்து கொள்ளத்தானே வேண்டும்.

சில ஆடுகள் வேலி தாண்டுவதற்குக் காரணமாக, ஆட்டுக்காரனே ஆகிறான். ஆட்டிற்குத் தீனி போடவில்லை. ஆட்டுக்குப் பசிக்கிறது. பொறுத்துப் பொறுத்து... பின் வேலி தாண்டுகிறது. தவறுதான். மறுக்க முடியாது. ஆனால் தவறுக்கு பொறுப்பு யார்? யார் காரணம்?

சில பெண்களுக்கு தெய்வ நம்பிக்கை அதிகம். செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, பிரதோஷம், அமாவாசை, கிருத்திகை, பவுர்ணமி என்று மாதத்தின் பல நாள்களைச் சுத்தமான நாள்களாக்கி விடுவார்கள். வழிபாடு

இடங்களுக்கு போய்விடுவார்கள். பெரும்பாலு இறைவன் நினைப்பிலேயே இருப்பார்கள்.

இதுவும் ஒதுக்குதல், கண்டு கொள்ளாமல் விடுதல்தான். அவன் ஆடு இல்லை, புலி. இரை தேடுவான். வேலியைத் தாண்டுவதில்லை, மிதித்துக் கொண்டோ அல்லது ஒரே தாவலில் தாண்டிப் போய்விடுவான்.

எவரும் பருவகாலங்களில் உள்ளே எரியும் தீ ஜுவாலைக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும். பதில் நம்மிடம் இருக்கிறது. அதற்கும் முக்கியத்துவம் கொடுக்கத்தான் வேண்டும். நேரம், கவனம் ஒதுக்கத்தான் வேண்டும்.

வாழ்க்கைத் துணையின் உடல் தேவைகளை, கணவன் - மனைவி கட்டாயம் முனைந்து புரிந்து கொள்ள வேண்டும். அதற்குக் கட்டாயம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தெரிவிக்காவிட்டாலும் கூட சாடைமாடையாக உணர்த்தப்படுவதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றாகவே இது பற்றிப் புரியும். ஆனாலும் பிரச்னை தீராது. காரணம் அவர்களின் அணுகுமுறை.

‘போனால் போகிறது’ என்பது போல ‘வேறு வழியில்லை என்பது போல, ‘சீக்கிரம் ஆகட்டும்... (வேறு வேலை இருக்கிறது) என்பது போலச் சிரமப்பட்டு ஒத்துழைப்பார்கள். இதுவும் தவறு. பாலியலில் உறவில் ஈடுபாடு என்பது கட்டாயமாக இருக்கக்கூடாது. ஆசைகளும் உணர்வுகளும் தானாகப் பொங்கிவரவேண்டும். நாலு சுவற்றுக்குள் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருந்தால் மட்டும் வீதியில் இருவரும் சிரித்த முகத்துடன் நடக்கமுடியும்.

கணவனும் மனைவியுமாக ஒரு திருமண நிகழ்ச்சிக்குப் போகிறார்கள். அங்கே வந்திருப்பவர்களுக்கெல்லாம் விருந்து நடக்கிறது. இருவரும் சாப்பிட அமர்கிறார்கள். வாழை இலை எங்கும் பலவிதப் பட்சணங்கள். மேலும், வரிசையாக என்ன என்னவோ பட்சணங்கள் கொண்டுவந்து கொண்டேயிருக்கின்றன. கணவன் தனக்குப் பிடித்த சிலவற்றைச் சாப்பிடுகிறான். மனைவி தனக்குப் பிடித்தவற்றைச் சாப்பிடுகிறாள். இருவரும் வேறு சிலவற்றைக் கேட்டு வாங்கிச் சாப்பிடுகிறார்கள். சிலவற்றைத் தொடவேயில்லை.

கணவன் அதிகப் பசியினாலோ என்னவோ வேக வேகமாகச் சாப்பிட்டு விடுகிறான். முடிந்ததும், மனைவி பக்கம் திரும்பிப் பார்க்கிறான். அவர் அப்போதுதான் ரசம் சாதம் வந்திருக்கிறார். ‘நான் முடிச்சிட்டேன், எழுந்து போய் கை கழுவிக் கொள்கிறேன்’ என்று சொல்லிவிட்டுப் போகிறான்.

கை கழுவி விட்டுத் திரும்பிப் பார்த்தால், மனைவியும் நிற்கிறார். முகம் சரியாக இல்லை. ‘முடிச்சிட்டியா? வெரிகுட் வெரிகுட். வா போகலாம்’ என்று கச்சேரி நடக்கும் ஹாலுக்குப் போகிறான். மனைவி பேசவேயில்லை.

இருவரும் ஆட்டோ பிடித்து வீடு திரும்புகிறார்கள்.

‘என்ன ஒரு மாதிரியா இருக்குறே?’

‘எனக்குப் பசிக்கிது...’

‘என்ன விளையாடுறியா? இப்பதானே சாப்பிட்டோம்’

‘நான் எங்க திருப்தியா சாப்பிட்டேன்? அதுக்குள்ளதான் நீங்க முடிச்சிட்டு எழுந்து போயிட்டீங்களே?’

தன் மனைவி சாப்பிடும் வரை அருகே இருக்கவேண்டும் என்பது கணவனுக்குத் தோன்றவில்லை. தன் வேலை முடிந்தவுடன் எழுந்துவிட்டான். கணவன் எழுந்தபிறகு மனைவிக்கு அந்த இடத்தில் என்ன வேலை. அவரும் எழுந்துவிட்டார்.

இதே அணுகுமுறைதான் நாலு சுவற்றுக்குள்ளும். மனைவியின் தேவையைக் கணவனும் கணவனின் தேவையை மனைவியும் தெரிந்துகொள்வது ஆரோக்கியமான தாம்பத்யத்துக்கு வழிவகுக்கும்.

**குழந்தை செல்வம்**

மகப்பேறு என்பார்கள். குழந்தை பாக்கியம் என்பார்கள். குழந்தை செல்வம் என்பார்கள்.

மற்ற காரணங்களினால், கணவன் மனைவி உறவு வலு இழந்தாலும் கூட, குழந்தை என்கிற ஒன்று ஒருவானப் பின், அது வலிமை பெறவே செய்யும். தன் பிள்ளை மனைவி வயிற்றிலே வளர்கிறது என்பதனாலேயே கணவன் மனைவிமீது கூடுதல் கரிசனம் காட்டுவார். மனைவிக்கும் கணவன்மீது அதிகப் பாசம் ஏற்படும்.

மணவாழ்க்கை முக்கியம் என்று நினைப்பவர்கள், குழந்தைகள் பெறுவதைத் தள்ளிப்போட வேண்டாம்.குழந்தையினால் எப்படியெல்லாம் இல்லறம் இனிக்கிறது என்பது போகப்போகத்தான் தெரியும்.

உடல் கோளாறுகள் காரணமாக, சிலருக்குக் குழந்தை பெறும் வாய்ப்பு இல்லாமலும் போகலாம். நவீன மருத்துவத்தில் எவ்வளவோ வசதிகள் வந்து விட்டன. நாள் கடத்தாமல், இளமையிலேயே, உரிய மருத்துவ ஆலோசனைகள் பெறலாம். யாரிடம் குறைபாடு? என்கிற தேடுதல் சரிதான். ஆனால், அது யாரிடம் இருந்தால்தான் என்ன? சேர்ந்து வாழ முடிவு செய்த பின், அது இருவருக்குமான பொதுப் பிரச்னைதான். சேர்ந்தே தீர்வு கண்டாக வேண்டும். தீர்த்தாக வேண்டும்.

**ஒழுக்கம்**

நாம் பணி காரணமாக வெளியில் போக வேண்டியவராக, தங்க வேண்டியவராக இருக்கலாம். அல்லது நமது வாழ்க்கைத்துணை வெளியில் சென்றதும், தனியாக இருக்க வேண்டியவராக இருக்கலாம்.

அதுபோன்ற சந்தர்ப்பங்களில் நம்மைக் கவருபவர் எதிர்ப் பாலினராய் (Opposite Sex) இருந்தால், வயது குறைவானவராக இருந்தால் விலகி விட வேண்டும். தொடக்கத்தில் நம் எண்ணத்திலும் கபடம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மனம் ஒரு குரங்கு. அதன் போக்கினைத் தீர்மானிக்கவோ, கட்டுப்படுத்தவோ பின்னால் சிரமமாகி விடலாம். அலைபாய ஆரம்பித்துவிடும். நொண்டிச்சமாதானங்கள் சொல்லி நம்மையே ஏமாற்றப்பார்க்கும்.

ஒரு பெண் எந்தளவுக்கு ஒழுக்கமானவளாக இருக்கவேண்டும் என்று ஆண் நினைக்கிறானோ அதேபோல ஆணும் பெண்ணுக்கு நியாயமானவனாக

இருக்கவேண்டும்.

பஞ்சும் நெருப்பும் என்பார்கள். முன்பெல்லாம் பக்கத்தில் வந்தால் பற்றிக் கொண்டு விடும் என்பார்கள். ஆனால் தற்போதைய நிலைமையில் பெரிய மாற்றம் வந்திருக்கிறது. வேலைவாய்ப்புகள் பெருகிவிட்டன. பெண்கள் தாராளமாக வெளியே வருகிற சூழ்நிலைகள் ஏற்பட்டுவிட்டன. வேலை முறைகள் மாறிவிட்டன. ஆண்கள், பெண்கள் பேசுவது, சேர்ந்து பயணம் செய்வது எல்லாம் வித்தியாசமாகப் பார்க்கப்படுவதில்லை. தவறாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. கைகொடுத்துக் கொள்கிறார்கள். பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறார்கள். ஒன்றாகச் சாப்பிடப் போகிறார்கள். சுற்றுலா செல்கிறார்கள்.

எவ்வளவு விஞ்ஞான மாற்றங்கள் வந்தாலும், எவ்வளவு நவீன வேலை முறைகள் வந்தாலும், சில அடிப்படை மனிதக் குணங்களில் மாற்றம் வராது. அவற்றில் சில, சொந்தம் கொண்டாடுவது (பொசசிவ்னஸ்), பொறாமை போன்றவை.

‘என் புருஷன்தான். எனக்கு மட்டும்தான்’ என்கிற திரைப்பட பாடல் மட்டும் மிகவும் யதார்த்தமான பாடல் அல்ல. ‘என் மனைவிதான், எனக்கு மட்டுமேதான்’ என்பதும் அதே அளவு உண்மைதான். ஆக தன் கணவனோ மனைவியோ தவறு செய்துவிடக் கூடாது. தனக்கு உண்மையாகவே இருக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்புப் பல ‘முன்னேற்றச் சிந்தனை’கள் வந்த பிறகும்கூட மிகவும் வலுவாகவே இருக்கிறது. தன் வாழ்க்கைத் துணைக்கு வேறு ஒருவருடன் தொடர்பு என்பதை எந்த ஆணும், பெண்ணும் ஏற்றுக்கொள்வதில்லை.

தொடர்புகளால் நிச்சயம் பிரச்னைதான். வாழ்க்கையே கேள்விக்குறியாகி விடலாம். கொலை, பழி, சிறை என்று அது வாழ்க்கையையே திசை திருப்பி விடலாம். பில் கிளிண்டன் அமெரிக்க அதிபர். அமெரிக்காவில் மட்டுமல்ல, உலகம் முழுக்க அவருக்கு அபிமானிகள் இருந்தார்கள். மோனிகா லெவின்ஸ்கியோடு அவர் வைத்திருந்த தொடர்பு, அவரது பொது வாழ்க்கையைக் கேவலப்படுத்தியது.

இங்கிலாந்து இளவரசி டயானாவின் வாழ்க்கையில்தான் எத்தனை உறவுகள். கணவன் உயிரோடு இருந்தபோதே அவருக்கு அந்நியர்களோடு தகாத உறவு இருந்தது. சார்லஸூம் அவ்வாறே டயானாவை ஏமாற்றி கமீலாவுடன் உறவு வைத்திருந்தார். விவரம் வெளியே தெரிந்தபோது எத்தனை சிக்கல்கள். தகாத உறவு டயானாவின் உயிரையும் சார்லஸின் நிம்மதியையும் அல்லவா பறித்தது.

மனது அலைபாய்ந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் கற்பு என்கிற ஒரு எண்ணத்தை உருவாக்கினார்கள். நினைத்தாலே தவறு என்றார்கள். எதை இழந்தாலும் கற்பை இழக்கவே கூடாது என்றார்கள். பெண்ணுக்குச் சொன்னது போலவே ஆணுக்கும் சொன்னார்கள். ஆனால் அதில் ஒரு வித்தியாசம் காட்டினார்கள். பிறன் மனைவியைப் பார்க்காதே என்றார்கள். அதுதான் பேராண்மை என்றார் வள்ளுவர். பரத்ததை என்கிற வேசிப் பெண்களை அனுமதித்த காலம் அது.

பிறன் மனைவியை நேசித்தால், அது அந்தப் பெண்ணின் கற்புக்கும், அவர் குடும்பத்திற்கும் பிரச்னையுண்டாகும் என்கிற காரணத்தினால் அப்படிச்

சொல்லியிருக்கலாம்.

வெளியில் போய் வந்தால் கைகால் கழுவு என்பது, முடிவெட்டிவிட்டு வந்தால், குளி என்பதெல்லாம், சுத்தம் சுகாதாரம் கருதித்தான். வெளியில், பலரும் கூடுமிடத்தில், சில வியாதிக்காரர்களும் வரலாம். அது நம் உடம்போடு வீட்டுக்கும் வரலாம். வீட்டில் இருக்கும் குழந்தைகள், முதியவர்களையும் தாக்கலாம். என்றைக்கு அப்படிப்பட்டவரைச் சந்தித்தோம், சந்திக்கவில்லை என்பதெல்லாம் பேச்சு இல்லை. வெளியில் போய் வந்தோமா, சுத்தப்படுத்திக் கொண்டு வீட்டிற்குள் நுழை. வழிமுறை. தவறக் கூடாத வழிமுறை.

அப்படிப்பட்ட கட்டுப்பாடுகளைத்தான் மற்ற ஆண்கள், பெண்களுடன் பழகும்போதும் வைத்துக் கொள்ள வேண்டும். இதற்காகத்தான் ஒரே சட்டமாக வைத்தார்கள். மாமனாருடன் மருமகள் பேசவே கூடாது. மாமியாருடன் மருமகன் பேச(வே)க் கூடாது. தம்பி மனைவியுடன் அண்ணன் பேசக் கூடாது. ஆக, சந்தர்ப்பங்கள், வாய்ப்புகளைக் குறைக்கிறார்கள். தவிர்க்கிறார்கள். அதன் மூலம் பிரச்னையைத் தவிர்க்கிறார்கள்.

‘என் மாமனாருக்கு வயதாகி விட்டது’. ‘என் பெரிய கொழுந்தனார் (கணவனின் அண்ணன்) நல்லவர்’ என்பது போன்ற விவாதங்களுக்கு எல்லாம் இடமில்லை. அந்தப் பிரித்துப் பார்த்தலில் (Interpretation) பழுது நேரலாம். அதனால் வேண்டவே வேண்டாம் என்பது பல குடும்பங்களில் (முன்பு) எழுதப்படாத சட்டம்.

ஒன்றாக இருக்கும் வீடுகளில் தனியாக இருக்கும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும். அப்போது ஈர்ப்பு ஏதும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகத்தான் பேசவேகூடாது, நேருக்கு நேர் பார்த்துக்கொள்ளக் கூடாது போன்ற கட்டுப்பாடுகள். வலுவான தடுப்பான்கள் இருந்தன.

கணவன் மனைவிக்கு மற்றொருவரிடம் ஆர்வம் உண்டாவதும், பிரமிப்பு உண்டாவதும் இயற்கை. அது ஈர்ப்பாக மாறும் ஆபத்தும் உள்ளது. அதனால் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களையே குறைத்துக் கொண்டு விடுதல்தான் இந்தப் பிரச்னையில் இருந்து காப்பாற்றும். குறிப்பாகச் சமூகத்தில் பெண்களுக்கு நிறையப் பிரச்னைகள் ஏற்படலாம்.

அலுவலகம், வெளியிடங்களில் பலரையும் சந்திக்க நேரிடும். சக ஊழியர், அல்லது மேலதிகாரி அல்லது வேறு யாரோ. சிலர் தூண்டில் போடுவார்கள். வலிய வந்து பாராட்டுவார்கள், பேசுவார்கள், சிரிப்பார்கள். என்ன செய்ய? இதில் இரண்டு வழிமுறைகள் உள்ளன.

‘கமெண்ட்’ அடிப்பது, கேலி செய்வது போன்றவற்றை வெளியாட்கள் (பேருந்துகளிலோ, பொது இடங்களிலோ) செய்தால் கூடியவரை ஒதுங்கி விடுவது நல்லது. அவர்களின் நோக்கம் பேச்சைத் தொடங்குவதுதான். அதற்கு இடங் கொடுக்காமல் ஒதுங்கி விடலாம். நிலைமை கட்டுக்கு மீறினால், மற்றவர் உதவியைச் சற்றும் தயங்காமல் நாடலாம்.

உடன் இருந்தாக வேண்டியவர் (பக்கத்து வீடு, சக ஊழியர், மேலதிகாரி) போன்றவர்கள் என்றால், தொடக்கத்திலேயே, ‘இது வேண்டாம். எனக்குப் பிடிக்காது’ என்று தெளிவாகச் சொல்லி விடலாம். அமைதியாக ஆனால் உறுதிப்படத் தெரிவித்துவிட வேண்டும். பல சமயங்களில் அமைதியாக

இருந்து விடுவதால் அதையே சலுகையாக எடுத்துக்கொள்பவர்களும் உண்டு.

**மனம்**

ஒவ்வொரு மனிதரும் எண்ணங்கள், ரசனைகள், எதிர்பார்ப்புகள் போன்றவற்றில் ஒருவருக்கொருவர் வித்தியாசமாக இருப்பார்கள்.

ஆணோ, பெண்ணோ, ஒரு குறிப்பிட்ட சூழலில், குடும்பப் பின்னணியில், வெவ்வேறு விதமான அலைவரிசைகளில் வாழக்கூடியவர்கள். திருமணத்துக்குப் பிறகு, ஒன்றாக வாழும்போது வித்தியாசமான எண்ணங்களினால் இருவருக்குமிடையே சிக்கல்கள் எழுகின்றன. எது சரி? யார் சரி? என்கிற விவாதங்கள், அதனால் மன வருத்தங்கள், பிளவுகள் என்று மண வாழ்க்கையே இரண்டாகிவிடுகிறது.

40, 50 வருடங்களுக்கு முன்பு பெண்ணுக்கு வயது 14 இருக்கிறபோதே திருமணம். கணவனுக்கு வயது 16 இருக்கும். பெற்றவர்கள் பார்வையில் அவர்கள் இருவரும் சின்னப்பிள்ளைகள். பெற்றோர் சொல்வதைக் கேட்டுக் கொள்பவர்கள்.

அதனால் ‘தனக்கே தெரியும்’ என்கிற மனப்பாங்கு உடையவர்களாக ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள். ‘நான் ஏன் என் விருப்பங்களை விட்டுக் கொடுக்க வேண்டும்?’ ‘இப்படித்தான் செய்வேன் ‘என்பது போல இரு தரப்பினருமே நினைக்கிறார்கள்.

இவற்றைப் புரிந்து கொள்ளவேண்டும். திருமணமாகிவிட்டதால் ஒருவர் மனதில் இருந்து மற்றொருவர் மனத்திற்குள் கூடு விட்டுக் கூடு பாய்வது போல உடனே இறங்கிச் சென்று அடுத்தவருடைய விருப்பங்களைத் தேடமுடியாது. என்னைப்போலவே நீயும் நினைக்க வேண்டும் நான் ரசிப்பவற்றை ரசித்து, சிந்திப்பவற்றைச் சிந்தித்து, நான் ஆராதனை செய்வதை நீயும் ஆராதனை செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பது எல்லாம் புத்திசாலித்தனமாகாது.

‘என் அம்மா என்றால் என்னை இப்படித் தவிக்க விட்டிருக்க மாட்டாள்’ ‘என் பாஸ், இதைப் பற்றிச் சொன்னது, நீங்கள் சொல்வதை விட நன்றாக இருந்தது’ போன்ற ஒப்பீடுகள் வேண்டாம். மற்றபடி ஒருவரையொருவர் புரிந்துகொள்ள சிறிதுகாலம் அவகாசம் எடுத்துக்கொள்ளுங்கள். ஆரம்பத்திலேயே ஒரு முடிவுக்கு வரவேண்டாம்.

**ஈகோ**

வயதானால் என்ன? பலரும் சிறுபிள்ளைத்தனத்தைக் விடுவதாக இல்லையே! தம்பதியர் ஆகி கணவன் - மனைவியாகச் சேர்ந்து குடும்பம் நடத்துகிற அளவுக்கு வந்துவிட்டதாலேயே பக்குவத்தோடு செயல்படுவார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது.

நீயா? நானா? என்கிற போட்டியில் மாட்டிக் கொண்டு விடுவார்கள். தோற்க மனமே வராது. விட மாட்டார்கள். யார் சொல்வது சரி? யார் செய்தது நன்றாக இருக்கிறது? எவர் பக்கம் நியாயம்? யார் புத்திசாலி? போட்டி போட்டி போட்டி. எல்லாவற்றிலும் வாதங்கள், விவாதங்கள். ‘லவ் ஹேட்’ உறவு என்பார்களே அப்படி.

இது ஒரு சைத்தான். அழித்து விடும். சில நாள் நிம்மதியை மட்டும் அல்ல.

சிலருடைய மண வாழ்க்கையையே. நண்பர்களுடனேயே விவாதம் வேண்டாம் என்கிறார்கள். எதற்காக வாழ்க்கைத்துணையிடம் போய் விவாதம்? இதில் என்ன வெற்றி தோல்வி.

ஒரு நிமிடம் நிதானித்து, சரி நீங்கள் சொல்லுகிறபடியே செய்வோம் என்று சொல்லிப் பாருங்கள். ஆச்சரியம் காத்திருக்கும். கணவன், மனைவிக்குள் வெற்றி தோல்விகளே கிடையாது. winning the battles losing the war என்பார்கள். விவாதங்களில் வென்று, வாழ்க்கையில் தோற்பதா? மடத்தனமாக இல்லை!

முடிந்தது முடிந்ததாக இருக்கட்டும். கதம், கதம்.அதே விஷயத்தைத் தொடரக் கூடாது. இழுத்து, நினைவுபடுத்திப் பேச, நாம் என்ன வழக்குரைஞரா? அல்லது வீடென்ன நீதிமன்றமா? இரண்டு பேருமே வழக்குரைஞர்கள் என்றால் வாழ்க்கை எப்படி நிம்மதியாக இருக்கும்.

யோசித்துப் பார்த்தால், எல்லாம் வெற்று வாதங்கள். சின்னப் பிரச்னைகள். அன்பை வெல்வதுதான் வெற்றி. விட்டுக் கொடுப்பதுதான் அதற்கான ஒரே வழி. குழந்தைகளிடம் பெரியவர்கள் தெரிந்தே தோற்பதில்லையா? அப்படித்தான் இதுவும்.

ஒரு பிரச்னை பற்றிப் பேசுகிறோம். முடிவு வரவில்லை. ஆளுக்கு ஒரு கருத்து. அதையே பேசிக் கொண்டிருக்காமல், அடுத்த கட்டத்துக்குப் போய்விட வேண்டும்.

தவறுகள் அடுத்தவர் பக்கமே இருக்கலாம். மன்னியுங்கள். பெருந்தன்மை காட்டுங்கள். யார்தான் தவறு செய்யவில்லை. குறுக்கு விசாரணை செய்து, நிரூபித்து என்ன ஆகப்போகிறது? மன வருத்தம் தான் மிஞ்சும். மனத்தில் ஏற்படும் காயங்களுக்கு மருந்து கிடையாது. நாவினால் சுட்டால் அதன் வடு வெகுநாள்களுக்கு இருக்கும்.

பிரச்னையாகி அப்படியே பேசாமல் ஒதுங்குகிறோம். அடுத்து, ‘யார் முதலில் பேசுவது? நாம் பேசினால் நாம் விட்டுக் கொடுத்தது போல ஆகிவிடுமோ, நாம் வலிமையற்றவராகப் பார்க்கப்படுவோமோ! என்கிற பயம்தான் தொந்தரவு.

போட்டி மனப்பான்மை வேண்டாம். நாமே விட்டுக் கொடுக்கலாம். யாரிடம் விட்டுக் கொடுக்கிறோம்? எல்லாம் வட்டியும் முதலுமாகப் பின்பு திரும்ப வாங்கலாம்.

இடைவெளிகளை அவ்வப்போது குறைத்துவிட வேண்டும். வளரவிடக் கூடாது. பின்பு ஒரு கட்டத்தில் பிளவு அதிகமாகி, பிரிவில் முடியும் ஆபத்து உண்டு.

பெண்கள் படிப்பது, வேலைக்குப் போவது எல்லாம் நல்லது, வரவேற்க வேண்டியதே. அதேசமயம் அவர்களுக்கு வீட்டில் கொடுக்கப்பட்டிருக்கும் வேலை (Role) யும் அதன் பொறுப்புகளும் கடுமையானவை.

கணவன், குழந்தைகள் போக, நல்ல மருமகளாக இருக்க வேண்டிய கடமைகளும் உண்டு. பாவம், பெண்களால் எப்படி எல்லாவற்றையும் நிறைவேற்ற முடியும்? திணறுகிறார்கள்.

கணவன் மனைவி இருவரும் வேலைக்குப் போய் வரும் வீடுகளில் இந்தக் குழப்பம் நிறையவே வரும். ‘நானும் உங்களைப் போலவேதான்

வேலைக்குப் போய் விட்டு அயர்வாக வருகிறேன். நீங்கள் உட்கார்ந்து கொண்டு பேப்பர் படிக்க, நான் சமைக்க வேண்டும். பாத்திரம் கழுவ வேண்டுமா?' என்கிற கேள்வியில் நியாயம் இல்லையா என்ன?

ஒருநாள் காலையில் நடைப்பயிற்சிக்குப் போகிற போது பார்த்தேன். சாலை ஓரத்தில் நடைபாதை போடும் ஒரு குடும்பம். ஒப்பந்தக்காரரிடம் பணிபுரிபவர்களாக இருக்க வேண்டும். காலை ஆறரை மணியிருக்கும். அப்போது தான் தூங்கி எழுந்திருப்பார்கள் போல. அடுப்பு எரிகிறது. அதன் மீது இருந்த பாத்திரத்தில் எதையோ போட்டுச் சமைத்துக்கொண்டிருக்கிறார் மனைவி. அவரை வேலை செய்யவிடாமல் அவர்களுடைய இரண்டு வயது குழந்தை பிடித்து இழுக்கிறது. அழுகிறது. இன்னொரு பக்கம் கணவன் ஒரு பக்கமாக அமர்ந்து கையில் முகம் பார்க்கும் கண்ணாடி வைத்துக்கொண்டு, அதில் தன் மீசையை தடவித் தடவி சரிபார்த்துக் கொண்டிருக்கிறான்.

நடைப்பயிற்சி முடித்து, திரும்பி வரும்போதும் அதே குடும்பத்தினரைப் பார்த்தேன். ரோட்டு ஓரத்தில் மண் மீது கடப்பாறை

போட்டுக்கொண்டிருந்தார்கள். கணவன் மனைவி இருவரும். அப்போதும் குழந்தை அம்மா அருகில் தான்.

இருவருக்கும் கூலி தருவார்கள். பெரும்பாலும் ஆண்களுக்கு கூடுதலாக. இருவரும் சம்பாதிக்கிறார்கள். வேலை முடிந்ததும் ஆணுக்கு வேலை குறைவு. பெண்ணுக்கு அதன் பிறகும் வேலை. இப்படிப்பட்ட பெண்ணின்மீது நம் ஈகோவை காட்டுதல் எவ்விதம் சரியாகும்? .

பேசிக்கொண்டிருக்கும்போதே, நாமே எதிர்பாராமல் சில வார்த்தைகள் வந்து விழுந்து விடும். கணவன் மனைவிக்கு அது பெரிய தடித்த வார்த்தையாகப் படும். அதிலிருந்து பிரச்னைகள் அதிகமாகும்.

உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவது ஒரு காரணம். அதைத் தவிர்ப்பது சிரமம்தான். ஆனால், வந்து விழும் வார்த்தைகளுக்கு ஏதோ ஒரு அடித்தளம் இருக்க வேண்டும்.

சாலையில் வண்டியில் போகிறோம். நமக்கு நேர் எதிராக ஒருவர் வண்டியில் வந்து விடுகிறார். இருவரும் முட்டிக் கொள்ளாத குறைதான். அடுத்து என்ன நடக்கும்? ஒருவரை ஒருவர் திட்டிக் கொள்ளலாம். இருவரும் சிரித்துக் கொண்டே விலகிப் போனால் பிரச்னை அத்தோடு முடிந்தது.

பூசையறையை, சுவாமி அலமாரியைத் திறந்தால் என்ன வாசம் வரும்? ரோஜாப்பூ அல்லது, நல்ல சாம்பிராணி வாசம்தானே. காரணம், உள்ளே இருந்தது, அடைத்து வைக்கப்பட்டிருந்த பொருள் அப்படி. மனத்துக்குள் எப்போதும் எரிச்சலான கந்தகத் துகள்களாகச் சேர்த்து வைத்தால், ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள் அவை (வார்த்தைகளாக) வெடிக்குமா வெடிக்காதா? நிச்சயம் வெடிக்கும்.

**காதல்**

காதல் என்பது திருமணத்துக்கு முன்பு மட்டுமல்ல. திருமணத்திற்குப் பிறகும் செய்ய வேண்டியது.

காதலியின் நன்நம்பிக்கையைப் பெற, மதிப்பைப்பெற, அன்பைப்பெற,

என்னவெல்லாம் செய்கிறார்கள்? கவிதைகள், கடிதங்கள், பரிசுப் பொருட்கள், காத்திருத்தல்கள், தியாகம், பொறுமை, காத்திருப்பு என்று எல்லாம் காதலில் நிகழ்கின்றன. ஏன் திருமணம் ஆனபிறகு அதுபோன்று காதல்வயப்படக்கூடாது. கணவன் மனைவிமீதும் மனைவி கணவன்மீதும் காதல் பார்வைப் பார்க்கக்கூடாது என்று சட்டம் இருக்கிறதா?

காதல் என்றால் புரிந்து கொள்ளல், பொறுத்துப் போதல், காத்திருத்தல், மற்றது எதையும் விட்டுக் கொடுத்தல் - அவற்றை நம் துணையிடம் செய்தால் வாழ்க்கை எத்தனை இன்பமயமாக இருக்கும்?

**ஆதரவு**

‘நீ சொல்றது சரி’

‘கரெக்ட். நீ போயிட்டு வா. நான் பார்த்துக்கறேன்.’

கணவன் மனைவிக்குள் ஒரு அன்னியோன்னியமும் புரிதலும் இருந்தால், ஒருவருக்கு ஒருவர் பெரிய ஆதரவாக இருப்பார்கள்.

வேலைதான் தனது அடையாளமாக ஒரு பெண் நினைத்தால், கணவன் முயன்று அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும். வேலையை விட்டு விடாமல் இருக்க, தன்னால் இயன்றது அனைத்தையும் செய்ய வேண்டும். அதேபோலவேதான் கணவனுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் மனைவி செய்திடல் வேண்டும். உதவி செய்யச் செய்ய, அந்த இடத்தில் அன்பு சுரக்கும்.

எந்த வீட்டில் பெண்கள் வேலை செய்து சம்பாதிக்கிறார்களோ, அந்த வீட்டில் ஆணும் வீட்டு வேலை செய்தால்தான் முடியும். இதில் பெரிய கௌரவக் குறைச்சலோ, அசிங்கமோ இல்லை. இருவருமே தன் சுயநலம் பாராமல் அடுத்தவர் வேலையைச் செய்ய வேண்டும். என்ன, இவற்றை வீட்டுப் பெரியவர்கள் முன்னால் செய்வதைத் தவிர்க்கலாம். அவர்கள் மனநிலை, எதிர்பார்ப்பு வேறாக இருக்கலாம். அவர்கள் காலம் வேறு, சித்தாந்தங்கள் வேறு. அல்லது அவர்களுக்கு உங்களுடைய நிலையைப் புரிய வைக்கலாம்.

கணவனோ, மனைவியோ, அவர்களின் உள்ளார்ந்த தேடுதல், ஆசை, நம்பிக்கைகள் முதலியவற்றை அடைய, ஒருவருக்கொருவர் உதவி செய்தே ஆக வேண்டும்.

‘என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?’

‘நீ முன்பெல்லாம் ஸ்வெட்டர் பின்னுவாயே... ஏன் விட்டுவிட்டாய்?’

‘ஏங்க... தி.நகர் போய் கிளாஸ் பெயிண்டிங்கிற்கு, சில பொருட்கள் வாங்க வேண்டும்.’

‘அதற்கென்ன, நாளை நானே அழைத்துப் போகிறேன்.’

உன் தேவையைச் சொல். நிறைவேற்றித் தர நானாச்சு என்று துணைவர் அன்பு காட்டினா அந்த இடத்தில் சிக்கல்களுக்கு வழியே இருக்காது.

மனைவி என்றால் அடிமையில்லை. வேலை செய்யப் பிறந்த இயந்திரம் இல்லை. கணவனும் சம்பாதிக்கும் மிஷின் இல்லை.

வாழ்க்கைப் பயணத்தில் உடன் வரும் தோழர், நண்பர்கள் இவர்கள்

இருவரும். சுக துக்கங்களை இவர்களைக் காட்டிலும் வேறு எவரால் அதிகம் பகிர முடியும்?கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் இப்படி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

சிரமங்களின்போது, ‘எனக்குத் தெரியாது. உன் அம்மா வீட்டுக்குப் போ’ என்பவர்களை எப்படி நண்பர் என்று எடுத்துக் கொள்ள முடியும்? மனைவிதான். கணவன்தான். அதே சமயம் உற்ற தோழராக ஆதரவாக இருந்துவிட்டால் வாழ்வில் அதைவிடச் சிறப்பு வேறு எதுவும் இருக்கமுடியாது.

**மதிப்பு**

அலுவலகத்தில் மேலதிகாரிகளை மதிப்போம். மதித்தாக வேண்டும். வீட்டில் பெற்றவர்களை, ஏனைய பெரியவர்களை மதிப்போம். மற்றவர்களை?

பெண்கள் கணவனை மதிப்பார்கள். சிலர் வேறுவழியில்லாமல், சமூகத்துக்காக. ஆண்கள் மனைவியை மதிக்கிறார்களா? சிலர் மதிக்கிறார்கள். சிலர் மிதிக்கிறார்கள்!

முன்பு பெண்கள் இருந்த நிலை வேறு. பொறுத்துப் போனார்கள். அதைப் பெரிதாக எதிர்பார்க்கவும் இல்லை. ஆனால் நிலைமையில் மாற்றம் வந்திருக்கிறது. புரிந்து கொண்டால் நல்லது.

மதிப்பது என்றால் என்ன என்பதில் சிலருக்குத் தெளிவு இல்லாமல் இருக்கலாம். வந்தால் எழுந்துகொள்வது, வணக்கம் சொல்வது, வாங்க, போங்க என்று மரியாதையாகப் பேசுவது போன்றதில்லை இது. அது மரியாதை. மதிப்பது என்பதே வேறு.

மதிப்பது என்றால் முக்கியத்துவம் கொடுப்பது. அவர்களின் ஆசைகள், தேவைகள், பேச்சுக்களுக்கு.

‘நீ என்ன நினைக்கிறாய்?’ என்று கருத்து கேட்பது. வேண்டாம் என்று மனைவி சொன்னால், அதில் நியாயம் இருக்கிறதா என்று நடுநிலையோடு யோசிப்பது. இருந்தால் ஏற்றுக் கொள்வது. தன் விருப்பப்படிதான், தன் சௌகரியத்துக்காகவே வீட்டில் எல்லாம் நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்காமல் இருப்பது.

சில மனைவிமார்களும்கூட இதில் தவறு செய்கிறார்கள். நாள், கிழமை என்று அவர்களுக்குண்டான விஷயங்களில், கணவனுடைய தேவைகளை, விருப்பங்களைப் பொருட்படுத்த மறுக்கிறார்கள்.

கணவன் மனைவி இருவருமே, அடுத்தவரின் விருப்பங்களை, மதிக்க வேண்டும். உணவு, உடை, வெளியில் போகும் இடங்கள், ஓய்வு, உறவினரிடத்தில் நடந்து கொள்ளும் முறைகள், குழந்தை வளர்க்கும் விதங்கள் என்று எவ்வளவோ விஷயங்களில் விருப்பங்கள் மாறுபடலாம். சில வீடுகள் சிதம்பரம் (ஆண்கள் ஆட்சி) . வேறு சில வீடுகள் மதுரை (பெண்கள் ஆட்சி) தேவை என்னவோ... கூட்டாட்சிதான்.

அடுத்தவர் உணர்வுகளை மதிப்பது முக்கியமானதாகும். மதியாதபோது பிரச்னைகள் எழுகின்றன. வருத்தமாக இருந்தால் அது ஓர் உணர்வு. கோபம் ஓர் உணர்வு. ஏமாற்றம் ஓர் உணர்வு. உணர்வுகளை மதிப்பது என்பது அதனை அங்கீகரிப்பது. முக்கியத்துவம் கொடுப்பது. அதற்காக

எதுவேண்டுமானாலும் செய்வது. அல்லது செய்யாமல் இருப்பது.

'நீ அழுதால் எனக்கென்ன, புலம்பினால் எனக்கென்ன. உன் துக்கம் உன்னோடு' என்பது போலக் கிளம்பிச் சீட்டாடப் (அல்லது கிரிக்கெட் விளையாட) போனால் குடும்பத்தில் எப்படி நிம்மதி நிலவும்.

வேறு சிலருக்கு மனைவி என்றாலே ஏளனம். அவர்களுடைய 'புத்திசாலித்தனத்தை', 'அழகை', 'நாகரீகத்தை' அல்லது வேறு எதையாவது கேலி செய்து கொண்டேயிருப்பார்கள். அடுத்தவர் முன்னிலையிலும்.

செய்பவருக்கு அது சாதாரணமாகவும் வேடிக்கையாகவும் இருக்கலாம். ஆனால் கேலி செய்யப்படுபவரின் மனம் நோகும். அதைப் புரியாத கணவனை எல்லாப் பெண்களும் அலட்சியமாகவே எண்ணுவார்கள்.

'உனக்கு அது வேண்டும் என்கிறாய். அது உனக்கு ஏன் வேண்டும்? அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லேன்' என்று ஆரம்பித்து, அது தேவையா இல்லையா? முக்கியம்தானா என்றெல்லாம் 'எடை போடுவதும்'கூட, மதிக்காத நடவடிக்கைதான். 'ஏன் நான் சொன்னா நம்பமாட்டீங்களா?' என்று வார்த்தைகள் வெடித்து விழலாம். அல்லது அவர் என்ன நம்புவதில்லை. என்று உள்ளுக்குள் புழுங்கலாம் .

பெரும்பாலான பெண்கள் பாவம். வாழ்க்கை முழுவதும், கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் உழைத்துக் கொட்டியே தேய்கிறவர்கள். அக்கறையாகச் சமைத்ததைக் குடும்பத்திற்குச் சந்தோஷமாகப் போட்டுவிட்டு, மீந்து இருப்பதை உண்பவர்கள். தங்கள் சுகங்களைத் தூர தூக்கி வைத்துவிட்டு, குடும்பத்துக்காக உழைப்பவர்கள். உடல் நலனைக் கெடுத்துக் கொள்பவர்கள். அதற்கு முக்கியத்துவமும் கொடுக்காதவர்கள்.

அவர்களின் நல்லெண்ணத்தை அர்ப்பணிப்புத் தன்மையை, அன்பை, தன்னலமற்ற உழைப்பை, உணர்வதும் அதற்கு மதிப்பளிப்பதும் கணவனின் கடமை.

**பேசுங்கள்**

பெரும்பாலானவர்களின் பிரச்னையே அவர்களது வாய்தான். எதையாவது பேசி பிரச்னைகளை உருவாக்குவார்கள்.

- சொந்தக் குடும்பத்தின் பெருமைகளை அளவோடு அதையும் இடம் நேரம் பார்த்துத்தான் பேச வேண்டும்.
- நினைப்பது எல்லாவற்றையும் கூடாதா என்று யோசித்துத்தான் சொல்ல வேண்டும். புரிந்துகொள்ளும் பக்குவம், நம்பிக்கை, நெருக்கம் வந்தபின், எதை வேண்டுமானாலும் பேசலாம். எடுத்தவுடன் அல்ல.
- கணவனோ மனைவியோ அவர்களுடைய பெற்றோருக்குச் செல்லப் பிள்ளையாக இருந்திருக்கலாம் (குறிப்பாகப் பெண்கள்). அதை அந்த வீட்டோடு விட்டுவிடவேண்டும்.
- வீட்டில் நடக்கும் எல்லாவற்றையும் அவரவர் பெற்றோரிடம் சொல்ல வேண்டாம். புத்திசாலித்தனம் தேவை.
- கணவன் - மனைவி, தங்களுக்குள் இருக்கும் வருத்தங்களை மற்றவர்களிடம் சொல்லக்கூடாது. அதிலும் குறிப்பாகக்

குடும்பத்துக்குத் தெரிந்தவர்கள், வேண்டியவர்களிடம்.

• செய்ததை ஒருபோதும் சொல்லிக் காட்டவே கூடாது. அதற்குப் பிரதியாக அவர் என்ன செய்தார் என்று கேள்வி கேட்பது அதைவிட மோசமானதாக எடுத்துக் கொள்ளப்படும்.

• பதிலுக்குப் பதில் பேசுவதால், நம் ஈகோ திருப்தியடையலாம். ஆனால் உடைவது உறவுப் பாலமாக இருக்கும். புன்முறுவல், தலையாட்டல், ஆழமான பார்வை, முகத்தைத் திருப்பிக் கொள்ளல் என எத்தனையோ சாதுரியங்கள் உண்டு. பயன்படுத்த வேண்டும்.

• வார்த்தைகளைத் தவறவிடவே கூடாது. சொன்ன சொல், பல ஆண்டுகளுக்கு கேட்டவர் மனதிலேயே நிற்கும்.

• உணர்ச்சி வேகத்தில் நடத்தை பற்றி, அவர்கள் குடும்பம் பற்றி, கலாச்சாரம் பற்றி, நாணம் பற்றி, நோக்கம் பற்றியெல்லாம் ஏதாவது சொல்லி விட்டால் போயிற்று. வேறு வினையே வேண்டாம்.

• கணவன் / மனைவி உணர்வு நிலைகளைப் புரிந்து பேசவேண்டும். எதற்குக் கோபம் வரும்? எந்த நேரம் பிரச்னையான நேரம்? எந்த விஷயம் பதற்றத்தை உண்டு செய்யும். புரிந்து பேச வேண்டும்.

• எவ்வளவு தொந்திரவு தருவதாக இருந்தாலும் வாழ்க்கைத் துணையின் மாற்ற முடியாத குறை பற்றிப் பேசக் கூடாது.

• குடும்பம் என்றால், சின்னச் சின்னச் சண்டைகள் இருக்கும்தான். அவை தேவையும் கூட. இல்லாவிட்டால், அடுத்தவருடைய மனவருத்தங்கள் பெரிதாக வெடிக்கும் வரை தெரிந்துகொள்ள முடியாமல் போய்விடும்.

• என்ன ஆனாலும் கணவன் மனைவி சண்டையில் அடுத்தவர்களை அனுமதிக்கக்கூடாது. தலையிடுபவர்களிடம் வெளிப்படையாக, ‘வேண்டாம் தலையிடாதீர்கள். நாங்களே பார்த்துக் கொள்கிறோம்’ என்று உறுதிப்பட சொல்லி விடவேண்டும். நாலு பேர் பேச்சைக் கேட்டு போலீஸ் நிலையம் செல்பவர்கள்கூட இருக்கிறார்கள். இதனால் ஒருபோதும் குடும்பத்தில் நிம்மதி நிலவாது.

• என்ன ஆனாலும் குழந்தைகள் முன், பெற்றவர்கள் முன் சண்டை போடக் கூடாது. பொறுத்துக் கொள்ள வேண்டும். தனியாக இருக்கும்போது வெளிப்படுத்தலாம். குழந்தைகள் பெரியவர்கள் சண்டைகளால் மனநலம் பாதிக்கப்படுவார்கள்.

**பொருளாதாரப் பிரச்னை**

பணம் போதவில்லை. ஆனாலும், வருங்காலத்துக்காக ஏற்பாடு செய்துகொள்ளாமல் இருக்க முடியுமா? கடன் வாங்குவதுடன், மனைவியின் நகைகளையும் விற்று, வளசரவாக்கத்தில் ஒரு பிளாட் வாங்குகிறார் கணவன். மனைவி நல்ல மனைவி. குடும்பத்துக்காக அவள் போட்டுக்கொண்டு வந்த நகைகளை விற்க அனுமதிக்கிறாள். ஆனால் அவள் பேச்சில் அந்தச் சங்கடம் வந்து விழுந்துகொண்டே இருக்கிறது.

கணவனும் நல்ல கணவன் தான். அவன் குடிக்கவில்லை. சூதாடவில்லை. அவன் சம்பாத்தியம் போதவில்லை. என்ன செய்ய?

பிள்ளைகள் பிறந்தாயிற்று. வீட்டுக்காகக் கொடுக்கப்பட்ட நகையால் குடும்பத்தில் பிரச்னை. என்ன செய்வது?

இது நம் குடும்பம், இது நம் சொத்து என்கிற பார்வை இருந்தாலே பாதி பிரச்னை சரியாகிவிடும். பாவம், கணவன் யாருக்காகக் கஷ்டப்படுகிறார்? நமக்கும் நம் பிள்ளைகளுக்கும்தானே. இனிமே அவர் கஷ்டம் என் கஷ்டம். அவர் சந்தோஷம், என் சந்தோஷம்.

இந்த மனநிலையை வரவழைத்துக்கொள்ளுங்கள். அற்பக் காகிதங்களா நம் உறவைப் பிளப்பது?

## 9. முடிவாக...

மணமகனுக்குச் சில வார்த்தைகள்

குழந்தைகளில் ஆண் என்ன, பெண் என்ன? எல்லாம் குழந்தைகள்தான். பெற்றோரிடம் அன்பு எதிர்பார்க்கும், பிரியம் காட்டும் பிள்ளைகளாகத்தான் எல்லாப் பிள்ளைகளும் வளர்கிறார்கள். என் அப்பா, என் அம்மா, என் சகோதர சகோதரிகள் என்று அவர்களுடன் சேர்ந்து வாழ்கிறார்கள்.

ஒரு பெண் அவளுடைய பெற்றவர்களுக்கு அன்பு மகள்.

அந்தப் பெண் பெரியவளாகி அவளுக்குத் திருமணம் நடக்கிறது. இப்போது புதிய உறவுகள் வந்து சேருகின்றன. இவற்றை நிறுவனங்களில் நடப்பனவற்றுடன் ஒப்பிட்டால், 'புதிய பாத்திரங்கள்' மற்றும் புதிய பொறுப்புகள் (New Roles & Responsiblities). இவற்றை ஏற்பதற்காக, சிலர் முன்கூட்டியே அவரது பெற்றோர்களால் தயாரிக்கப்பட்டிருக்கலாம். வேறு சிலர் தயாராகாமல் இருக்கலாம். ஆனாலும் இந்த 'மனைவி', 'மருமகள்', 'அண்ணி' போன்ற பாத்திரங்களை அவர் ஏற்றுத்தான் ஆகவேண்டும். தவிர சிறிதும் குறைவின்றிக் கடமைகளைச் செய்யவேண்டும். நடந்து கொள்ள வேண்டும். இது அந்தக் குடும்பத்தின் எதிர்பார்ப்பு.

இவை புதிய பாத்திரங்கள் / பொறுப்புகள் மட்டுமல்ல, இவை முன்பிருந்தவற்றுடன் சேரும் கூடுதல் (Additional) பொறுப்புகளும் ஆகும். ஒருவருக்கு மனைவி, ஆண் மகனின் பெற்றவர்களுக்கு மருமகள். இப்படிப் புதிய பொறுப்புகள் வந்துவிட்டபடியால், ஏற்கெனவே செய்து கொண்டிருக்கும் 'மகள்' என்கிற பாத்திரத்தை, பொறுப்பை விட்டுவிட முடியுமா? முடியாது.

ஆக, குறுகியகால அவகாசத்தில் ஒரு சிறியபெண், இந்நிலையைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. திணறிப் போய்விடுகிறாள். மனம் அம்மா அப்பாவை நினைத்து அரற்ற, புகுந்த இடத்தில், 'அதைச் செய், இதைச் செய்' என்று அதட்டுகிற குரல்கள் மன அழுத்தத்தைத் தருகின்றன. சிறுவயதில் பல போராட்டங்களைச் சந்திக்க நேர்கிறாள்.

சகிப்புத்தன்மை, பொறுமை, அறிவு, தைரியம் மற்றும் பிற திறன்கள் பொறுத்து, சிலர் சமாளிக்கிறார்கள். சிலர் மௌனமாக மனத்துக்குள் குமுறுகிறார்கள். வேறு சிலர், 'போதும், இது வேண்டாம்' என்று தூக்கியெறிந்துவிட்டு, பழைய நிலைக்குத் திரும்புகிறார்கள். வேறு சிலர் செய்வதறியாது திகைத்து, மனக் குழப்பத்தில் வாழ்க்கையையே முடித்துக் கொண்டு விடுகிறார்கள்.

இதே நிலை திருமணம் செய்துகொள்ளும் ஆண்களுக்குக் கிடையாதா என்று கேட்கலாம். கிடையாது என்பதுதான் பதில். 'மருமகன்' என்பது ஒரு பொறுப்புமிக்க வேலையில் என்ன பெரிய சுமை இருக்கிறது? அது ஒரு

‘பதவியுயர்வு போல’. முன்னிலும் அதிக வருமானமும், மதிப்பும் பெற்றுத் தருகிற வாய்ப்பாகவும், அதிகாரம் செய்ய ஒரு வாய்ப்பும் தருகிற பதவி அது.

புதிதாகப் பணிக்குச் சேர்பவர்களை ஊதியம் தரும் நிறுவனங்கள் கூட உடனடியாக விரட்டாது. சேர்ந்தவர் வேலையைப் பழகட்டும் என்று பொறுமை காட்டும். பெற்றவர்களிடம் செல்லமாக வளர்ந்தவர்கள், உங்களை நம்பி வருகிறார்கள். உங்களைத் தவிர வேறு யாரால், அவர்களைப் புரிந்து கொண்டு உதவ முடியும். அனுசரணை காட்ட முடியும்?

உங்களைப் பெற்றவர்களும் முக்கியம்தான். பெண்டாட்டிதாசன் என்று கேலி செய்வார்களோ என்று பயப்பட வேண்டாம். மனைவி என்பவர் மனிதப்பிறவி, மதிக்கப்பட வேண்டியவர் என்பது தவிர, உங்களுடனே வாழ்நாள் முழுக்க இருக்கப் போகிறவர், உங்கள் பிள்ளைகளைச் சுமக்க இருப்பவர், உங்களுடைய பலத்தை அதிகரிக்கப் போகிறவர். இதை நீங்கள் கட்டாயம் உணரவேண்டும்.

இதில் வெட்கம், ஈகோ எல்லாம் வேண்டாம். சிரமமான நேரங்களில் புரிதலுடன் அனுசரணையாக நடந்து கொள்பவர்களை எவருக்கும் பிடிக்கும்.

**மணமகளுக்குச் சில வார்த்தைகள்**

ஆண்களைக் காட்டிலும் மன வலுவும், பொறுமையும் மிக்கவர்கள் நீங்கள். கல்லூரிப் படிப்பினால் மட்டும் ஒருவர் எல்லாம் தெரிந்தவராக, சரியாகச் செய்பவராக இருக்க முடியும் என்று எண்ணாதீர்கள். வேலைக்கான படிப்புகள், வாழ்க்கையைச் சொல்லித் தருவதில்லை.

கணவருடைய பெற்றோர் பிரச்னை செய்பவர்களாக இருக்கலாம். மறுக்க முடியாது. அப்படியிருக்கும் பட்சத்தில் உங்கள் நிலை சிரமமானதுதான்.

நல்ல கணவரைத் தேர்வு செய்வதில் கவனமாக இருங்கள். திருமணம் சரியாக அமையாத பட்சத்தில் பாதிப்பு, பெண்ணுக்குத்தான் அதிகம் என்பதைத் தனியே சொல்லத் தேவையில்லை. பெற்றோர் பார்த்துச் செய்யும் திருமணங்களிலும், உங்கள் எதிர்பார்ப்புகளைச் சொல்லுங்கள். வெறும் படிப்பும் அழகுமே சிறப்பான குணத்தைத் தந்துவிடாது.

ஒரு படைக்கு ஒரு தளபதி இருப்பதுதான் நல்லது. இல்லாவிட்டால் குழப்பமும் கலகமும்தான் மிஞ்சும். கணவனோ, மனைவியோ, யார் வேண்டுமானாலும் தலைமையேற்கலாம். அதற்கான அதிகாரப் போராட்டம் அமைதியைக் குலைத்து விடுவதாக அமைந்து விடக் கூடாது.

இன்றைக்குக் கிடைக்கிற கல்வி, இருக்கிற வேலை வாய்ப்புகளைப் பார்த்தால், பெண்கள் தாராளமாக, தனியாகவே வாழலாம் என்கிற நம்பிக்கை வரத்தான் செய்யும். ஆனால் வாழ்க்கை வெறும் பொருளாதாரம் சார்ந்ததல்ல.

தனி நபர் வாழ்க்கை அலுத்து விடும். வெளியில் தனியாக இருக்கும் பெண்களுக்கு பாதுகாப்பு இன்னும் குறைவுதான். குடும்பம்தான் நல்ல பாதுகாப்பு. ஆயிரம் கஷ்டங்கள் இருந்தாலும் இல்லறத்தில் கிடைக்கிற சுகமும் திருப்தியும் வேறெதிலும் கிடைக்காது. திருமணம் ஆனவர்களைக்

கேட்டுப் பாருங்கள். வாழ்க்கைக்கான முழு அர்த்தம் இல்லறத்தில்தான் கிடைக்கும்.

குறையில்லாத மனிதர்கள் கிடையாது. சரி செய்து கொள்ள முடியாத குறைகளும் குறைவுதான். ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி. புரிந்து கொண்டு விட்டால் வாழ்க்கை சிரமமாகத் தெரியாது. குற்றம் கண்டுபிடிக்கத் தொடங்கிவிட்டால் முடிவே கிடையாது. வந்துகொண்டேதான் இருக்கும்.

இனி இவர்தான். இவள்தான். அதற்குள் என்ன செய்ய முடியும். இப்படித்தான் போக வேண்டும். எத்தனை முறை மாற்றினாலும், பத்தரை மாற்றுத் தங்கமா கிடைக்கப் போகிறது. நாம் மட்டும் என்னவாம்? குறைகளே இல்லாதவரா? அற்புத மனிதரா, மனிதருள் மாணிக்கமா? எல்லாம் மனதில்தான் இருக்கிறது. புரிதலால், அன்பால், நம் நடத்தையால் எவரையும் வெல்லலாம்.

திருமணத்தின் தொடக்கக் காலம் இன்பமாகவே இருக்கும். அப்போது பொறுப்புகளும் குறைவு.

பிள்ளைகள் வளர வளர, பொறுப்பு அதிகரிக்கிறது. அதன்பின்தான் ஒருவரைப் பற்றி ஒருவரின் புரிதல் அதிகமாகிக் காதல், நட்பாகவே மாறுகிறது. பல சவால்களை ஒன்றுசேர்ந்து சமாளிக்கும்போது தம்பதியர் நண்பர்களாக மாறிவிடுகிறார்கள்.

வயதாக வயதாக புரிந்துணர்வும் அன்பும் அதிகமாகித் தோழமையுணர்வு மேலிடும். வயோதிகக் காலத்தில் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருந்து வாழ்க்கையை நிறைவு செய்துகொள்கிறார்கள். இது ஓர் அற்புதமான சுழற்சி. ஓட்டுவது சிரமம்.

கூட்டுக் குடும்பங்கள், கட்டுப்பாடுகள் எல்லாம் இருந்த காலமில்லை இது. சுதந்திர மனப்பான்மையும் சுய உரிமைக் கோரல்களும் அதிகரித்திருக்கும் காலம். திருமணத்துக்கு முன்பு எப்படியோ, திருமணத்துக்குப் பின் அவசியம் காதலிக்க வேண்டும்.

பொறுத்துப் போவதுதான் வழி. விட்டுக்கொடுப்பது என்பது கணவன் மனைவிக்குள் சர்வசாதாரணம். வாழ்க்கையில் கணக்கே பார்க்க வேண்டாத, முடியாத ஒரு உறவு உண்டென்றால் அது கணவன்-மனைவி உறவுதானே.

ஒரு கணவன் மனைவிக்குள் வாய் வார்த்தைகள் தடித்தபோது, கணவன் கோபமாகச் சொன்னான், ‘நீ உன் பிறந்த வீட்டிற்கே போய்விடு.’

சற்றும் தயங்காமல் மனைவி சொன்னார்கள், ‘அதற்கென்ன நீங்களே கொண்டு போய் விட்டு விடுங்கள். ஆனால் எப்படி வந்தேனோ, அப்படியே.’

> சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்
>
> பிணைமான் இனிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன்
>
> கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர்
>
> உள்ளம் படர்ந்த நெறி

என்கிறது மாறன் பொறையனார்எழுதிய ஐந்திணை அம்பது பாடல்.

ஜோடி மான்கள் தண்ணீர்த் தாகமெடுத்து ஒரு நீர்ச் சுனையை நெருங்கியதையும், அங்கே நீர் குறைவாக இருந்தது கண்டு, ஆண்மான், தண்ணீருக்குள் வாயை விட்டாலும், அருந்தாமல், கர்ப்பமாக இருக்கும் பெண்மான் முழுவதையும் குடிப்பதற்காக விட்டுக் கொடுத்ததைச் சொல்கிறது.

சேர்ந்து வாழ்தலும் விட்டுக்கொடுத்தலும் பரஸ்பரம் அன்பு காட்டுதலும் இயல்பானவை.

இரண்டு மாதங்களுக்கு முன்பு, என் மனைவிக்குக் கடுமையான வயிற்று வலி என்று தகவல் வர, அலுவலகத்தில் எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டு ஓடினேன். மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். ரத்தக்கொதிப்பு அதிகமாக, எக்ஸ்ரே, ஸ்கேன் என்று சோதனைகள் செய்து விட்டு, சிறுநீரகத்தில் கல், அது சிறுநீர்க் குழாயில் இறங்கி சிக்கலாக இருக்கிறது என்றார் மருத்துவர்.

உடனடியாக மருத்துவமனையில் என் மனைவிக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இரவு 11 மணி. காலையில் அலுவலகத்துக்கு அணிந்து சென்ற உடைகளுடன் என் மனைவி அருகே நான். மருத்துவமனையின் கவுனைப் போட்டுக் கொண்டு, கண் மூடி அரை மயக்கத்தில் படுத்திருந்தார் என் மனைவி. பெயர் சொல்லி அழைத்தால் பதிலில்லை. மயக்கம்.

அந்த நேரம், வெறுமையாக உணர்ந்தேன். ‘இறைவா இவளுக்கு ஏதும் ஆகிவிடக்கூடாது’ என்று பிரார்த்தித்தேன். ஆகிவிட்டால், நான் என்ன ஆவேன்? வாழ்க்கை எப்படியிருக்கும் என்று யோசித்துப் பார்க்கவே பயமாக இருந்தது. கொஞ்சம் கலங்கித்தான் போனேன். அவர் கண் விழிக்கும் வரை அதே பயமும் கலக்கமும் இருந்து கொண்டே இருந்தது.

மனைவி போல வருமா? அதன்பிறகு எதை ஜெயித்துத்தான் என்ன? யாரிடம் வந்து சொல்ல. பெருமைப்பட, சந்தோஷப்பட! அங்கலாய்க்க!

பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ ‘மண’மார்ந்த வாழ்த்துகள்.

---

திருமணம் கைடு Thirumana Guide
சோம. வள்ளியப்பன் Soma. Valliappan ©

This digital edition published in 2016 by

Kizhakku Pathippagam

177/103, First Floor, Ambal’s Building,

Lloyds Road, Royapettah,

Chennai 600 014, India.

Email: support@nhm.in
Web: www.nhmreader.in

First published in print in December 2008 by Kizhakku Pathippagam

All rights reserved.

Kizhakku Pathippagam is an imprint of New Horizon Media Private Limited, Chennai, India.

This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher’s prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of copyright and those responsible may be liable in law accordingly.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.